Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 தை 23 செவ்வாய்க்கிழமை (05.02.2013) பக்கங்கள் 20 ஓசை – 128

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
T.P - 0212225969
E.Mail - info@cityhoteljaffna.com
Web - www.Cityhoteljaffna.com

















## ஒன்பது கைதிகள் யாழில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் 65 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று யாழ்.சிறைச்சாலையில் இருந்து ஒன்பது கைதிகள் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குற்றச் செயல்களின் பொருட்டு நீதிமன்றத்தினால் தண்டப் பணம் விதிக்கப்பட்டு அதனைச் செலுத்த முடியாமல் சிறைத் தண்டனை அனுபவித்து வந்த எட்டு ஆண்களும், ஒரு பெண்ணும் அடங்கலாக இந்த ஒன்பது கைதிகள் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்பட்டிருப்பதாக யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகர் ஏச்.ஓ.சி.பெரேரா தெரிவித்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க



## திடீரென கொட்டிய மழை; நெல் அறுவடை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் நீண்ட நாட்களின் பின்னர் நேற்றைய தினம் கனமழை பொழிந்துள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, பூநகரி அடங்கலாக பல பகுதிகளிலும் நேற்று மாலை முதல் கனமழை பொழிந்தது. இதனால் அன்றாடக் கடமைகள் நிமிர்த்தம் வெளியிடங்களுக்குச் சென்ற பலரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

இதேவேளை, நெல் அறுவடைக்காலம் ஆரம்பித்துள்ளதால், இக்கனமழை

19 ஆம் பக்கம் பார்க்க

# சவால்களுக்கு மத்தியிலும் அபிவிருத்தியும் நல்லிணக்கமும்



## இலக்கை எட்டியதாக ஜனாதிபதி பெருமிதம்

(திருகோணமலை)

**அரசு மீது குறை காண்பவர்களுக்கு நாட்டில் ஏற்பட்டிருக்கும் அபிவிருத்தியும் இன நல்லிணக்கமும் தகுந்த பதில் வழங்கும் சான்றுகளாகும். பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. இவ்வாறான குற்றச்சாட்டுக்களுக்கு அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கமே சிறந்த பதிலாகும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**

நாட்டின் 65ஆவது சுதந்திர தினத்தின் தேசிய வைபவம் திருகோணமலையில் முப்படைகளின் தளபதியும் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று நடைபெற்றது. அங்கு தேசியக்கொடியை ஏற்றிவைத்து படைகளின் தளபதிகளுக்கு முன்பாக நின்று நாட்டு மக்களுக்கு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திருகோணமலை துறைமுகத்தைக் கைப்பற்றும் நோக்கமே வெளிநாட்டுப் படைகளுக்கு இருந்தது. நாடு 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்த போதிலும் திருகோணமலையில் பிரித்தானியப் படையினர் முகாம்களை அமைத்து தங்கியிருந்தனர். அவர்களின் முகாம்கள் 1956 ஆம் ஆண்டே அங்கிருந்து அகற்றப்பட்டன.

இந்தப்பகுதியில் புத்தர்சிலையைச் 19 ஆம் பக்கம் பார்க்க

## குறைகிறது பிறப்பு வீதம் அதிகரிக்கிறது ஆயுள்காலம்

(கொழும்பு)

நாட்டின் சனத்தொகை புள்ளிவிபரத்தின்படி பிறப்பு வீதம் குறைவடைந்து செல்கிறது. அதேவேளை, ஆயுள்காலம் அதிகரித்துள்ளது. இதனால் நாட்டில் முதியவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

நாட்டில் பெண்கள் மற்றும் முதியவர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் உயர் நிலையில் உள்ளதாக சனத்தொகைக் கணக்கெடுப்பில் இருந்து தெரியவந்துள்ளது. சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக் 19 ஆம் பக்கம் பார்க்க

## கிணற்றில் கிடந்தது பெண்ணின் சடலம்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் அம்மன் வீதியில் உள்ள வீடு ஒன்றின் கிணற்றில் இருந்து வயோதிப் பெண் ஒருவரது சடலம் நேற்று மீட்கப்பட்டு பொலிஸாரினால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த மருதலிங்கம் இராஜலட்சுமி (வயது-70) என்ற வயோதிபப் பெண்ணின் சடலமே இவ்வாறு

19 ஆம் பக்கம் பார்க்க

## ஏ-9 வீதியில் விபத்து நாடாளுமன்ற உறுப்பினர் காயம்

(கிளிநொச்சி)

மாங்குளத்துக்கும் கொக்காவிலுக்கும் இடைப்பட்ட ஏ-9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) சிறு காயமடைந்தார். இவருடன் பயணித்த மெய்ப்பாதுகாவலர் ஒருவரும் காயமடைந்தார்.

இவர் பயணித்த வானகத்தின் முன்சில்லு திடீரெனக் காற்றுப் போய்விட்டதால் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டதால் இந்த விபத்து ஏற்பட்டது.

திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்

19 ஆம் பக்கம் பார்க்க

## துப்பாக்கியுடன் மாணவன் கைது

(கொழும்பு)

சுமார் நான்கு இலட்சம் ரூபாய் பெறுமதியான மடிக்கணனிக்கான உபகரணங்கள் மற்றும் இராணுவத்தினர் பயன்படுத்தும் ரம்போ வகை கத்தி, கடற்படையினர் பயன்படுத்தும் துப்பாக்கியுடன் கொழும்பில் பிரபல்யமான பாடசாலையொன்றில் உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் மாணவன் ஒருவரை தெஹிவளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த மாணவன் இரத்மலானை, தெஹிவளை மற்றும் கல்கிஸை போன்ற பகுதிகளில் இடம்பெற்ற பல்வேறு குற்றச்

19 ஆம் பக்கம் பார்க்க

## ரயிலுடன் மோதி குடும்பஸ்தர் பலி

### வவுனியாவில் பரிதாபம்

வவுனியா ஆலடிப் பகுதியில் நேற்று நண்பகல் ரயிலில் மோதுண்டு 55 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவர் பலியாகியுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கி நண்பகல் 1:30 மணிக்கு புறப்பட்ட ரயிலிலேயே இவர் மோதுண்டு உயிரிழந்துள்ளார்.

தலை வேறாகவும் உடல் வேறாகவும் சடலம் காணப்பட்டதாகவும் எவ்வித ஆவணமும் இவரிடம் இல்லாமையின் காரணமாக இதுவரை பலியானவரை அடையாளம் காண முடியாதுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கடந்த 5

19 ஆம் பக்கம் பார்க்க

## மதமுரண்பாட்டை உருவாக்க சதி செய்கிறது நோர்வே

### முஸ்லிம் அமைப்புக்கள் சீற்றம்

(கொழும்பு)

நாட்டில் மதங்களுக் கிடையில் முரண்பாட்டை ஏற்படுத்துவதற்கு நோர்வே சதித்திட்டம் தீட்டி செயற்பட்டு வருவதாக முஸ்லிம் அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளன.

தற்போது எழுந்துள்ள மத முரண்பாடுகளின் பின்னணியில் நோர்வே செயற்பட்டு வருவதாகவும் அந்த முஸ்லிம் அமைப்புக்கள் குற்றம் சுமத்தியுள்ளன. அண்மைக்காலமாக இலங்கையில் முஸ்லிம்களுக்கும் பௌத்தர்களுக்கும் இடையில் முரண்

19 ஆம் பக்கம் பார்க்க

# யாழ். குடாவை அபிவிருத்தி நோக்கி நகர்த்த அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போம்

## தேசியக் கொடியை ஏற்றியபின் அரச அதிபர் உரை


(யாழ்ப்பாணம்)

இலங்கையின் சுதந்திரத்திற்கு எல்லோரது பங்களிப்பும் எவ்வாறு இருந்ததோ அதேபோன்று யாழ். மாவட்டத்தையும் அபிவிருத்தி செய்ய அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்று யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் வேண்டுகோள் விடுதுள்ளார்.

நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற இலங்கையின் 65 ஆவது சுதந்திரதின நிகழ்வின் போது அங்கு தேசியக் கொடியை ஏற்றிவைத்து யாழ். செயலக ஊழியர்கள் உத்தியோகத்தர் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் அனைத்துத் தரப்பினையும் இவ்வாறு கேட்டுக் கொண்டார்.

அங்கு அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில் நாட்டில் யுத்தம் நிறைவுபெற்றதைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் பாரிய நிதி ஒதுக்கீட்டைச் செய்துள்ளது. இதற்கு அரசாங்கத்திற்குத் தமது நன்றியையும் தெரிவித்துக்கொண்ட அரச அதிபர் எதிர்காலத்தில் யாழ். மாவட்டத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு சகலதரப்பினரும் ஒன்று சேர்ந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

இன, மத, கட்சி வேறுபாடுகளின்றி எமக்குக் கிடைத்த சுதந்திரத்தைப் பாதுகாப்பதுடன் அபிவிருத்திக்கும் பக்கபலமாக செயற்படவேண்டும் என்றும் தெரிவித்தார். (பா)



ஜனாதிபதியின் கருத்திட்டத்தின் கீழ் யாழ். பழைய பூங்காவில் உள்ள சிறிய சாரணர் சிலையை புனரமைக்கும் திட்டத்திற்கென யாழ் சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் சிவமயந்தனிடம் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தை வழங்கி வைப்பதையும் அருகில் ஆளுநரின் செய்லாளர் இ.இளங்கோவன், வடமாகாண பிரதம செயலர் திருமதி ஆர்.விஜயலட்சுமி ஆகியோர் நிற்பதையும் காணலாம்.

# கள்ளங்கபடமற்ற மாணவி கஸ்தூரிக்கு பாராட்டு

(மருதனார்மடம்)

வீதியில் தவறவிடப்பட்ட கைப்பையை கண்டெடுத்து உரியவரிடம் ஒப்படைத்த தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மாணவியின் முன்மாதிரியான செயற்பாட்டைப் பாடசாலை சமூகத்தினரும் கைப்பையின் உரிமையாளரும் வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

அண்மையில் குறித்த நபர் தனது கைப்பையைத் தொலைத்த நிலையில் மன வேதனையுடன் வீடு திரும்பியதாகவும் அந்த நிலையில் இம்மாணவி வீதியால் சென்றுகொண்டிருந்த போது கைப்பை கிடப்பதைக் கண்டு அதைப்பார்த்தபோது அதற்குள் 18 ஆயிரம் ரூபா பணம், அடையாள அட்டை, காணி உறுதிப் பத்திரம் என்பன இருந்தமையைக கண்டார்.

உடனடியாகக் குறித்த மாணவி அடையாள அட்டையின் முகவரியைப் பார்த்து உரியவரிடம் கையளித்தார். உடனே கைப்பை கிடைத்ததையிட்டு உரிமையாளர் மகிழ்ச்சியடைந்ததுடன் மாணவிக்கு சன்மானமும வழங்கினார். அத்துடன் அம்மாணவியின செயற்பாட்டைப் பாராட்டி பாடசாலை அதிபருக்கு கடிதம் ஒன்றையும் கையளித்தார்.

இதில் இக்கல்லூரியில் தரம் 7 இல் கல்விபயிலும் கஸ்தூரி என்ற மாணவியே இவ்வாறு பாராட்டைப் பெற்றுள்ளார். (17)

# மக்களின் நலனுக்கு நாட்டப்பட்ட மரத்தை வெட்டியவருக்கு எச்சரிக்கை

(ஆனைக்கோட்டை)


நவாலியில் பிரதான வீதியோரமாக நாட்டப்பட்டிருந்த வேப்பமரக் கொப்புக்களை தறித்தவர் பொதுமக்களின் எதிர்ப்பினால் அச்செயற்பாட்டை கைவிட்டுள்ளார்.

நவாலி கதிர்காமமுருகன் ஆலயத்திற்குச் சமீபமாக வீதியோரம் நீண்டகாலமாக நிழலுக்காகப் பயன்பட்டுவந்த இம்மரத்தின் கிளைகளைக் கடந்த சனிக்கிழமை நபர் ஒருவர் விறகு எடுப்பதற்காக வெட்டிக்கொண்டிந்தார்.

அவ்வேளை வீதியில் சென்ற பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து வெட்டுவதை நிறுத்தியுள்ளார். இது தொடர்பாகப் பிரதேச சபைத் தலைவருக்கும், ஆனைக்கோட்டைக் கிராம அலுவலகத்தருக்கும் அறிவித்ததைத் தொடர்ந்து அவர் எச்சரிக்கை செய்யப்பட்டார்.

மேலும் வீதிகளில் நிற்கும் மரங்கள் மரக்கூட்டுத்தாபனத்திற்கும் சுற்றுச்சூழல் பகுதிக்கும் சொந்தமாகும் என்று தெரிவிக்கும் மக்கள் மரங்களை நாட்டிவரும் இவ்வேளையில் நிழலுக்காக நாட்டப்படும் இப்படியான மரங்களைத் தறிப்பது தவிர்க்கப்பட வேண்டும் என்றும் இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கேட்டுள்ளனர்.(104)

# சுதந்திரதினக் கொண்டாட்டமும் விவசாயிகளுக்கு மண்வெட்டி விநியோகமும்





இலங்கையின் 65 ஆவது சுதந்திர தினத்தினை முன்னிட்டு நேறறையதினம் தேசியக் கொடியினை ஏற்றி வேலணைப் பிரதேச சபை சுதந்திர தினத்தைக் கொண்டாடியுள்ளது.

மேற்படி கொடியினை சபையின் தவிசாளரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணைப் பிரதேச அமைப்பாளருமான சி.சிவராசா (போல்) ஏற்றி வைத்தார்.

இந்நிகழ்வில் சபையின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டு சுதந்திர தினத்தைக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

இதேவேளை நாட்டு மக்கள் அனைவருக்கும் சுதந்திர தின நல்வாழ்த்துக்களைச் சபையின் தவிசாளர் தெரிவித்துக்கொண்டார்.

அத்துடன் இன்றைய தினத்தில் அனைத்து அரசாங்க உத்தியோகத்தர்களும் மக்களும் எமது நாட்டின் முன்னேற்றத்துக்கும், வளர்ச்சிக்கும் முன்னின்று உழைக்வேண்டும் எனக் கேட்டுக் கொண்டதுடன்,

எமது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பாதையில் நாமும் இந் நாட டின் அனைத்து அபிவிருத்திகளுக்கும் பக்கபலமாக இருப்போம் என்றும் சுதந்திரதின வாழ்த்துச் செய்தியில் வேலணைப் பிரதேச சபையின் தவிசாளர் சி.சிவராசா தெரிவித்தார்.

அத்தோடு சுதந்திர தினத்தை முன்னிட்டு வேலணைப் பிரதேசத்தில் விவசாயம் செய்யும் சுமார் 15 பேருக்கு வேலணை பிரதேச சபையின் தவிசாளர் மண்வெட்டிகளை வழங்கிவைதததார்.

# சாவகச்சேரி இந்துப் பாடசாலை நிறுவுனர் தினம் இன்று

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்து தேசிய பாடசாலையின் நிறுவுனர் நினைவு நாள் நிகழ்வு இன்று காலை 8.30 மணிக்கு அருணாசல மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க.கைலாசப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார், சிறப்பு விருந்தினராகப் பாடசாலையின் பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சிய கிளையின் பிரதிநிதி ச.சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிறுவுனர் நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறை முதுநிலை விரிவுரையாளர் எஸ்.உதயகுமார் ஆற்றவுள்ளார்.

நிறுவுனர் நினைவுப் பேருரை "உலக சனத்தொகை அதிகரிப்பதற்கான போக்கும்' அதற்கான காரணங்களின் சாதகபாதக விளைவுகள் பற்றிய ஒருநோக்கு" என்னும் விடயம் பற்றி உரை இடம்பெறவுள்ளது.

மேலும் 2013 ஆம் ஆண்டுக்கான நிறுவுனர் நினைவுதின மலரை தென்மராட்சி வலயக் கல்விப பணிப்பாளர் வெளியீட்டு வைக்க அதன் ஆய்வுரையை யாழ். தேசியக் கல்வியற் கல்லூரி ஓய்வு நிலை விரிவுரையாளர் க.தர்மராசா ஆற்றவுள்ளார். (11)

# டெங்கு எச்சரிக்கை; சிகிச்சை பெறுவோர் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)




யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றும் நேற்று முன்தினமும் டெங்கு நோய்த் தொற்றிற்கு இலக்காகிய ஐந்து பேர் சிகிச்சைக்கு அனுதிக்கப்பட்டிருப்பதாக வைதத்திய சாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து இருவரும் உடுப்பிட்டியில் இருந்து ஒருவரும் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து இருவருமாகவே ஐவர் இந்நோய்த் தொற்றிற்கு இலக்காகி சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் இந்த வருடம் இதுவரை 66 பேர் டெங்குத் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கருத்துப்பரிமாற்ற நிகழ்வு


திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் மாதந்தோறும் ஆங்கிலத்தில் நடத்தப்பட்டு வருகின்ற 'வோறம்' எனப்படும் கருத்துப் பரிமாற்ற களநிகழ்வின் இம்மாதத்திற்கான நிகழ்வு இன்று மாலை 5.00 மணிக்கு 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூதுக் கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

அருட்கலாநிதி எ.எப்.ஜெயசேகரம் அடிகள் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் தமிழத்தூது தனிநாயகம் அடிகள், வாழ்வும் பணியும் எனும் பொருளில் கவிஞர் சோ.பத்மநாதன் ஆங்கில மொழியில் உரையாற்றுவார். தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருமறைக் கலாமன்றம் இவ் ஆண்டில் முன்னெடுக்கவுள்ள ஆய்வரங்க தொடக்க நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக இது அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆங்கிலமொழி புலமையாளர்கள் கலந்துகொள்ளும் இவ்வமர்வில் ஆர்வமுள்ள அனைவரும் கலந்துகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



நெடுந்தீவு பிரதேசசபையில் சுதந்திர தின நிகழ்வுகள் நேற்றுக் காலை 8-30 மணியளவில் பிரதேச உத்தியோகத்தர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் மத்தியில் இடம்பெற்றது. தேசிய கீதம் இசைக்கப்பட ஈ.பி.டி.பி.யின் நெடுந்தீவுப் பிரதேச அமைப்பாளரும், நெடுந்தீவுப் பிரதேசசபை தவிசாளருமாகிய தானியேல் றெக்சியன் தேசியக் கொடியை ஏற்றி நிகழ்வை ஆரம்பித்துவைத்தார்.

# புகையிரத வீதியை அண்டிவாழும் குடும்பங்களின் அவலநிலை தீருமா?



(மல்லாவி)

கிளிநொச்சி நகர் கே/23 கிராம அலுவலர் பிரிவில் புகையிரத வீதியை அண்டி வாழும் 7 குடும்பங்கள் மண் குடிசையில் மிகவும் கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த யுத்த அனர்த்தத்திற்கு முன்னர் 30 வருடங்களாக புகையிரத வீதிக்கு அண்மித்த பகுதிகளில் வாழ்ந்த குடும்பங்கள் யுத்தத்திற்கு பின்னர் மக்கள் மீள்குடியேறியும் நிரந்தர வீட்டு வசதிகள் இல்லாமல் மீளவும் அதே இடத்தில் மண் குடிசைகளை அமைத்து மிகவும் சிரமத்துடன் வாழ்ந்துவருவதாக அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை புகையிரத வீதிப்புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் போது இவ்விடத்தை விட்டு தாம் எழுப்பப்பட்டால் நிரந்தரக் காணி, வீட்டு வசதிகள் இல்லாமல் மிகவும் கஷ்ட்டத்தை எதிர்நோக்கவேண்டிய சூழ்நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதைவிட தாம் தற்போது வாழ்வாதார ரீதியாகவும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். (140)

# ஆசிரியர்களுடன் பெற்றோர்களின் பங்கும் மாணவர் கல்விச் செயற்பாட்டில் அவசியம்

## - யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர

(யாழ்.நிருபர்)

மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளில் ஆசிரியர்களுடன் பெற்றோரும் இணைந்து செயற்படவேண்டும். நகர்ப்புறத்தில் உள்ள பெரிய பாடசாலைகளுடன் போட்டி போட்டு பல்வேறு சவால்களுக்கு மத்தியிலேயே ஏனைய பாடசாலைகள் இயங்கவேண்டியுள்ளது. இதற்கு பெற்றோர்களின் ஒத்துழைப்பு அவசியமாகும் என யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகளில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்,

420 மாணவர்களைக் கொண்ட இக்கல்லூரி விளையாட்டு மைதானம்கூட இல்லாமல் மிகக்குறைந்த வளங்களுடன் சிறப்பாக இயங்குகிறது.

இம்முறை நூற்றாண்டு விழாக்காணும் இக்கல்லூரி, பல்வேறு செயற்பாடுகளையும் முன்னெடுத்துச் செல்வது பாராடடுக்குரியதாகும்.

நகர்ப்புறத்தில் இயங்கும் பெரிய பாடசாலைகளுடன் போட்டிபோட்டு பெற்றோர், மாணவர்களைக் கவரத்தக்க வகையில் செயற்படும்போது தான் இத்தகைய பாடசாலைகளுக்கு மாணவர் வருகை அதிகரிக்கும்.

ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் உங்கள் பாடசாலைக்கும் அடுதத ஆண்டு முதல் பல்வேறு வளங்களும் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. ஆய்வுகூடத்திற்கென புதிய கட்டடம் அடுத்த ஆண்டில் கட்டப்படவுள்ளது.

நகரின் மத்தியில் அமைந்துள்ள் சிறந்த கல்விப்பாரம்பரிம் மிக்க வைத்தீஸ்வராக் கல்லூரி எதிர்காலத்தில் பெருமளவு மாணவர்களை உள்வாங்கி கல்வி உலகில் சாதனை படைக்கும் கல்லூரியாக விளங்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய தொழிலதிபர், கல்விக்காருண்யன் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் தனது உரையில்,

பாடசாலைகளில் நடைபெறும விளையாட்டுப்போட்டிகளில் பாரம்பரிய விளையாட்டுக்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும். இன்று மாணவர் மத்தியில் ஆசிரியர்களையும், பெரியவர்களையும் மதிக்கின்ற பண்பு அருகி வருகிறது அவை நீங்கவேண்டும் எனத் தெரிவித்தார். (10)

# துவிச்சக்கர வண்டிகளில் பயணிப்போருக்கு அறிவுறுத்தல்

(வடமராட்சி)

வடமராட்சிப்பகுதியில் துவிச்சக்கர வண்டிகளில் இரவு வேளைகளில் பயணம் செய்பவர்கள் தமது துவிச்சக்கர வண்டிகளுக்கு பிரேக், லைட், பெல் இம்மூன்றும் கட்டாயம் இருப்பது அவசியமானதாகும் என நெல்லியடி போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்துள்னர்.

இரவு வேளைகளில் இடம் பெறும் வீதி விபத்துக்களைத் தடுக்கவே இவ் அறிவித்தல்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இரவு வேளையில் துவிச்சக்கர வண்டிகளுக்கு இம்மூன்றும் இல்லாமல் செல்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதுடன் 500 ரூபா தண்டப்பணமும் அறவிடப்படும்.

மேலும் தொலை பேசியில் ஆபாசப்படம் பதிவாகியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டால், அந்நபருக்கு 50 ஆயிரம் ரூபாவும், கசிப்பு, சாராயம் போன்றன தம்வசம் வைத்திருந்திருந்து பிடிக்கப்பட்டால் 50 ஆயிரம் ரூபாவும் தண்டப்பணமாக அறவிடப்படும் எனவும் எனவே இது தொடர்பாக பொதுமக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் நெல்லியடி போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (18)

# சஞ்சிகைக்கு ஆக்கம் கோரல்

(அச்சுவேலி)

யாழ்ப்பாண கல்விவலய ஆசிரிய வள நிலையத்தினால் வெளியிடப்படவுள்ள 'தேனடை' சஞ்சிகைக்கு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடமிருந்து பல்வேறு ஆக்கங்களை வழங்கி உதவுமாறு ஆசிரிய வள நிலையத்தின் முகாமையாளரினால் கோரப்பட்டுள்ளது.

இதில் கட்டுரை, கல்விச் சிறுகதைகள், துணுக்குகள், பாடவிடயம் சார்ந்த கற்பித்தல் முறையியல்கள் போன்றவை உள்ளடக்கப்படுவதுடன், ஆக்கங்கள் ஏ4 தாளின் நான்கு பக்கங்களை கொண்டனவாகவும், படைப்பாளியின் பெயர், பாடசாலை அதிபரின் உறுதிப் படுத்தலுடன் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக முகாமையாளர், ஆசிரிய வள நிலையம், இந்து மகளிர் கல்லூரி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு நேரடியாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

ஆக்கங்களை அனுப்புவோர் தமது தேடலுக்காக பயன்படுத்திய உசாத்துணை நூல்கள், வலைப்பின்னல் போன்றவற்றையும் குறிப்பிடல் வேண்டும். (03)

# வணிகர் கழகத்தால் கடனுதவி

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு வறுமையில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் யாழ். வணிகர் கழத்தால் வாழ்வாதாரக் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

யாழ். வணிகர் கழகத்தின் கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட 9 பயனாளிகளுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை யாழ். வணிகர் கழகத்தால் 150 பேருக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திலும் இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டு வருவதாக யாழ். வணிகர் கழகத்தின் தலைவர் தெரிவித்தார். (02)

# அங்கவீனமான பெண்களுக்கு வாழ்வாதார உதவிகள்

(யாழ்.நிருபர்)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு அங்கவீனமடைந்தவர்களுக்கும், வாழ்விழந்த அபலைப்பெண்களுக்கும் வாழ்வாதார உதவிகளை வழங்குவதற்கு வியாவில் ஐயனார் தேவஸ்தானம் முன்வந்துள்ளது.

இந்த வாழ்வாதார உதவித் திட்டத்திற்கு சுவிஸ் - காரை நலன்புரிச்சங்கம் அனுசரணை வழங்குகிறது.

இவ் வாழ்வாதார உதவித் திட்டத்தின் முதற்கட்டமாக யுத்தத்தினால் கால் ஒன்றினை இழந்த சடையாளியைச் சேர்ந்த செல்லையா சிவகுமாருக்கு வாழ்வாதார உதவியாக மாதாந்தம் 5000 ரூபாவும், சுயதொழில் ஊக்குவிப்பு நிதியாக ரூபா ஐம்பதாயிரமும் வழங்கப்பட்டுள்ளது.

சிதம்பரமூர்த்தி கேணியடியைச் சேர்ந்த சக்திவேல் நகுலேஸ்வரிக்கு வாழ்வாதார உதவியாக மாதாந்தம் 5000 ரூபாவும் வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தால் வழங்கப்படவுள்ளது. (10)

# கல்லூரியின் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்குமாறு கோரிக்கை

(யாழ்.நிருபர்)

யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியின் அபிவிருத்திக்கு இந்த ஆண்டும் நிதி ஒதுக்கித் தருமாறு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக யாழ்.மாநகரசபை உறுப்பினர் பி.ஏ.எஸ்.சுபியான் தெரிவித்துள்ளார்.

வடமாகாண, ஆளுநரை அவரது அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்தபோதே அவர் இந்தக்கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இச்சந்திப்புத் தொடர்பாக சுபியான் தெரிவிக்கையில்,

யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியின் அபிவிருத்திக்காக கடந்த வருடம் ஆளுநர் 10 மில்லியன் ரூபா நிதியினை ஒதுக்கியுள்ளார். அதற்காக நன்றி தெரிவித்ததுடன், மேலும் பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கும் இந்த வருடம் ஒஸ்மானியாக் கல்லூரி 50 ஆண்டுகளை நிறைவு செய்து பொன்விழா கொண்டாடவுள்ளதை எடுத்துக்கூறி, இந்த ஆண்டும் நிதியை ஒதுக்கித் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (10)





நேற்றைய தினம் யாழ்.செயலகத்தில் நடைபெற்ற சுதந்திரதின நிகழ்வில் அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம் தேசியக்கொடியை ஏற்றிவைப்பதையும், உத்தியோகத்தர்கள் நிற்பதையும் காணலாம்.

(படங்கள் பா.பார்த்தீபன்)

சோகம் எனும் பறவைகள் உங்கள் தலைக்குமேல் பறப்பதைத் தடுக்க இயலாது. ஆனால் உங்கள் தலையில் கூடுகட்டி வாழ்வதைத் தவிர்க்கலாம். - ஸ்மைலி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## விவேகமிக்க மனிதர்களா நாம்?

இலங்கையின் சுதந்திர தினமாகக் கொண்டாடப்படும் நாள் தான் உலக புற்றுநோய் தினமாகவும் அனுசரிக்கப்படுகிறது. பெப்ரவரி 4–ஆம் திகதி, உலக புற்றுநோய் தினம்.

இந்த நாட்டின் இனப்பிரச்சினை என்பதும் ஏதோ புற்றுநோய் போலவே தீர்க்க முடியாத வியாதியாக்த் தொடர்வது வேதனையளிக்கவே செய்கிறது. இதற்கான விழிப்புணர்வை நாம் உருவாக்கிக் கொள்வதற்கான தினமோ வாரமோ இன்னும் கைகூடவில்லை.

"விவேகமிக்க மனிதர்கள் நிச்சயமாகப் போரைத் தவிர்ப்பர்" என்பது கிரேக்கப் பொன்மொழி. இந்த விவேகம் கைகூடாத சண்டித்தன வக்கிரங்களின் மிச்சங்களே இன்னும் இங்கே ஒலித்தபடி உள்ளன. போர் முடிந்ததில் நிம்மதியுறாமல், மேலும் சண்டை நிலையைத் தக்க வைத்துக் கொள்ள என்னவெல்லாம் பேசமுடியுமோ அந்த விரோத வசனங்களே தமிழ் அரசியல் பேச்சாகத் தொடர்கிறது.

மக்கள் எதிரியை நினைத்து எந்நேரமும் விரோத – பயத்துடன் இருப்பதும், இடைவிடாமல் அவலங்களைச் சுமப்பதும் தான் அவர்களைப் போரை விரும்பும் நிலைக்குத் தள்ளும்; மற்றைய சமூகங்களுக்கு எதிராக ஒன்றுதிரளும் ஆவேசத்தை உருவாக்கும் என்று இதுகாலவரை செயற்பட்ட விதத்தின் மாற்றமெதுவுமில்லாத நிலைதான் இப்போதும்.

தங்களது இனரோசத் தினவுகளுக்காக மக்கள் வாழ்வைச் சிதைப்பது குறித்த எந்த வெட்க உணர்வும் கிடையாது! இப்போதும் கூட, மக்களை நிம்மதியாக வாழவைக்க–சமூகத்தின் சீரழிவுப் பயணத்தை நிறுத்த எப்படி, யாருடன், என்ன பேச வேண்டும் என்ற தெளிவு வரவில்லை! வெளிநாடுகளின் நிகழ்ச்சிநிரலில் எங்களுக்கான விடிவும் இருக்கும் என்பதற்கு மேல் நம்மில் பெரும்பாலானோரால் சிந்திக்கவே முடியவில்லை.

மேலும் மேலும் எங்களை எதிர்க்குமாறு எதிர்த்தரப்பைச் சீண்டிக் கொண்டிருப்பதும், விரோத உணர்வை பிரமாண்டமாக்கிப் பிரசாரம் செய்வதும் சண்டைப்பிரியர்களின் தேவை. இதற்காக அவர்களுக்கு எதிர்த்தரப்பிலுள்ள தீவிரவாதமும், விரோத மனப்பாங்கும் நலிவுற்றுவிடாமல், அவற்றைத் தூண்டி வரவேற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

கிறிஸ்துவுக்கு முந்திய காலத்து கிரேக்க தொல்நாடகம் ஒன்றின் உரையாடல் பகுதியைப் வாசித்தபோது, மோதல் நிலையைத் தூண்டிவிட்டு அரசியல் செய்பவர்களின் கருத்துகள் எப்போதும் ஒன்றுபோலிருப்பதை விளங்கிக்கொள்ள முடிகிறது. அந்த நாடகத்தில் வரும் ஒரு உரையாடல் இது:

**"எதிரிகளாக அல்லாமல் நாம் நண்பர்களாக இருப்பதை நீங்கள் விரும்பவில்லையா? உங்கள் மீதான தாக்குதல்களை நாம் நிறுத்திவிட்டால் இரு தரப்பிலுள்ளோர்க்கும் அது நல்லது என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ள வில்லையா?"**

**"இல்லை. எங்களுக்கு ஊறு விளைவிப்பது நீங்கள் காட்டும் பகைமை அல்ல. மாறாக, நாங்கள் உங்களுடன் நட்புடன் இருந்தால் எங்கள் குடிமக்கள் அது எங்கள் பல வீனம் என்று கருதுவார்கள். மாறாக, நீங்கள் எங்கள் மீது காட்டும் வெறுப்பும் பகைமையும்தான் எங்களது வல்லமைக்கான சான்றாக அமையும்.... சண்டையைக் கைவிட்டுப் பேச வருவதன் மூலம் பேரழிவைத் தடுக்க முடியக் கூடும்தான். ஆனால், எங்களைக் கோழைகளாக எண்ணிக்கொள்ள இடமளித்ததாகிவிடும். ஆகவே உங்களைக் கோபப்படுத்தவும் ரோசமூட்டவும் வேண்டியதையே நாம் செய்வோம். எங்கள் மீதான பகைமையை எக்காரணம் கொண்டும் இல்லாதொழித்து விடாதீர்கள். எதிரி இல்லாத ஒரு சூழலை நம்மால் கற்பனை செய்ய முடியாது. நாம் சாதாரண குடிமக்களைப் போலாகிவிடுவோம். அது வேண்டாம்."**

இரண்டாயிரம் வருஷங்களுக்குப் பிறகான நமது சிந்தனையும் இன்னும் இதுபோலவே இருக்கிறது. இன மொழி தேச ரோசங்களுக்காகச் சாகவும் சாகடிக்கவும் தயாராக இருக்கும் சண்டமாருதப் பேச்சாளர்களினுள் ஒளிந்திருக்கும் 'ஞாயங்களை' விளங்கிக் கொள்வதே, மக்களும் சமூகமும் காப்பாற்றப்படுவதற்கான முதற்படி.

- ஆசிரியர்

# இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்பு

# வடக்கில் 5 தொழிற் பேட்டைகள் அமைப்பு

(கொழும்பு)

அதிக எண்ணிக்கையிலான இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் 5 தொழிற்பேட்டைகளும், விரிவான சுற்றுலா வலயம் ஒன்றும் வடக்கில் ஏற்படுத்தப்படும் எனவும் இதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வடக்கில் மேற்கொள்ளப்படும் பிரதான அபிவிருத்தி வேலைத்திட்டமாக இது சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது எனவும் அவர் கூறியுள்ளார். 30 வருடமாக பயங்கரவாதச் செயற்பாடுகள் காரணமாக இலங்கையின், புறந்தள்ளப்பட்ட பிரதேசமாக இருந்த வடக்கிற்கு தற்போது தொடர்ந்தும் அபிவிருத்தி யோசனைத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

தலா 25 ஏக்கர் என்ற கணக்கில் 125 ஏக்கர் நிலப்பரப்பில் 5 தொழிற்பேட்டைகள் மாவட்ட மட்டத்தில் ஏற்படுத்தப்பட உள்ளன. மண்டைதீவு, பருத்தித்துறை, காரைதீவுப் பிரதேசங்கள் சுற்றுலா வலயங்களாகவும் அபிவிருத்தி செய்யப்பட உள்ளன. வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வடக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் அபிவிருத்தித் திட்டங்கள முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் வழிகாட்டலில் இந்த அபிவிருத்தித் திட்டங்கள் முன் னெடுக்கப்பட்டு வருகின்றன.

பழங்கள் சார்ந்த உற்பத்திகள், கூரைத்தகடு தயாரிப்பு போன்ற தொழிற்சாலைகளை நிறுவ ஏற்கனவே முதலீடுகளை மேற்கொள்ள முதலீட்டாளர்கள் முன்வந்துள்ளனர் என வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

வவுனியா, கிளிநொச்சி, மன்னார் பிரதேசங்களில் தொழிற்சாலைகளை நிறுவ ஏற்கனவே காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

## வெளிநாட்டு நாணயங்கள் கடத்தல்; இந்தியப் பிரஜை சிக்கினார்

(கொழும்பு)

சட்டவிரோதமாக வெளிநாட்டு நாணயத்தாள்களை எடுத்துச் செல்ல முயற்சித்த இந்தியப் பிரஜை கட்டுநாயக்கா விமான நிலைய சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் துபாயை நோக்கி புறப்படுவதற்கு தயாராகியிருந்தபோது கைது செய்யப்பட்டதாக சுங்கப் பிரிவின் பணிப்பாளர் வெஸ்லி காமினி தெரிவித்துள்ளார். இந்தியப் பிரஜையின் பயணப் பொதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த அமெரிக்க மற்றும் சிங்கப்பூர் டொலர்கள் கைப்பற்றப்பட்டதாக அவர் கூறியுள்ளார். கைப்பற்றப்பட்ட நாணயத் தாள்களின் பெறுமதி 34 இலட்சம் ரூபாவென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

சந்தேகநபர் ஏற்கனவே இரண்டு தடவைகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளமையும் தெரியவந்துள்ளது. அதிகாரிகள் தொடர்ந்து சந்தேகநபரிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக சுங்கப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பரிசோதனைக்கு உள்ளாகும் கைவிடப்பட்ட வாகனங்கள்

(கிளிநொச்சி)

போர்க்காலப் பகுதியில் கைவிடப்பட்டுள்ள வாகனங்களை மோட்டார் வாகன பரிசோதகர்கள் சோதனைக்கு உட்படுத்தவுள்ளனர். பாவனைக்கு உகந்த வாகனங்கள் மற்றும் பாவனைக்கு உகந்ததற்ற வாகனங்கள் இதன் மூலம் அடையாளம் காணப்படும் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன் கூறியுள்ளார்.

இந்த சோதனை நடவடிக்கை இவ்வாரம் மேற்கொள்ளப்படவுள்ளதுடன் அமைச்சரவை அனுமதி கிடைத்த பின்னரே அவற்றை விற்பனை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டினார்.

போர்க்காலத்தில் கைவிடப்பட்ட சுமார் ஐந்தாயிரம் வாகனங்கள் தற்போது உள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். அசாதாரண சூழ்நிலையின்போது கைவிடப்பட்ட வாகனங்களை பெற்றுக்கொள்ளுமாறு உரிமையாளர்களுக்கு ஊடகங்கள் ஊடாக ஏற்கனவே பகிரங்க அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதிய பாடலைப் பாடுவதற்கு ஆரம்பித்துள்ளது அரசு

### — கூறுகிறார் ரணில் —

(கொழும்பு)

நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தை நீடிக்க சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்ற புதிய பாடலை அரசாங்கம் பாட. ஆரம்பித்துள்ளதாகவும் முடிந்தால் இந்த வருடத்திற்குள் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துமாறு, தான் அரசாங்கத்திற்கு சவால் விடுப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

காலியில் நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். ராஜபக்ஷ அரசாங்கம் வாழ் நாள் முழுவதும் ஆட்சியில் இருக்கும் எனக் கூறுகின்றனர். எனினும் 2014 ஆம் ஆண்டு வரை கூட அரசாங்கத்தினால் தொடர்ந்தும் ஆட்சியில் இருக்க முடியாது. இது நாம் மாத்திரமல்ல, அரசாங்கத்தில் உள்ளவர்களும் உணர்ந்துள்ளனர்.

இலங்கையில் மூன்று விதமான தேர்தல்கள் இருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், சர்வஜன வாக்கெடுப்பு ஆகியவையே அந்தத் தேர்தல்களாகும். பல்வேறு கட்சிகள் பங்கு கொள்ளும் வகையில் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. எனினும் சர்வஜன வாக்கெடுப்பு இரண்டு அணிகளுக்கு இடையில் நடத்தப்படும். ராஜபக்ஷ அரசாங்கத்தை விரட்ட வேண்டும் என நினைப்பவர்கள் குடத்திற்கு வாக்களிப்பர்.

சர்வஜன வாக்கெடுப்பில் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தோல்வியடையும். அதன் பின்னர், ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடத்தப்படும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி துண்டுகளாக பிளவுபட்டு தேர்தலில் போட்டியிடும். இதனால் ஐக்கிய தேசியக்கட்சிக்கு உறுப்பினர்களைச் சேர்க்கும் பணிகளை துரிதப்படுத்த வேண்டும் எனவும் ரணில் விக்ரமசிங்க கூறியுள்ளார்.

## சுயதொழில் ஊக்குவிப்பு கடன்

(யாழ்.நிருபர்)

பிரதேச அபிவிருத்தி வங்கியின் மருதனார் மடம் கிளையினால் மகளிருக்கான சுயதொழில் ஊக்குவிப்புக்கடன் வழங்கப்பட்டுவருகிறது.

இருபாலை தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மகளிருக்கான சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றபோது பிரதேச அபிவிருத்தி வங்கியின் உதவி முகாமையாளர் எஸ். செபமாலைப்பிள்ளை வைபவ ரீதியாக மாதர்சங்கத்தலைவியிடம் கடன் தொகையைக்கையளித்தார்.

இவ்வைபவத்தில் பிரதேச அபிவிருத்தி வங்கியின் மருதனார்மடம் கிளை முகாமையாளர் கே.லட்சுமணசர்மா, இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய்ப் பிரிவுத் தலைவர் இ.மயில்வாகனம் மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள், மகளிர் சங்கஉறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (10)

## வடமராட்சி குடும்பஸ்தர் டோகாவில் மரணம்

(வடமராட்சி)


வடமராட்சியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் டோகாவில் இடம்பெற்றதாகக் கூறப்படும் விபத்தில் சிக்கி மரணமடைந்துள்ளார்.

கொற்றாவத்தை சிறப்பாவளையைச் சேர்ந்த செல்வராசா சிறீநாதன் (வயது-37) என்ற குடும்பஸ்தரே கடந்த மாதம் 23ஆம் திகதி மரணமடைந்ததாக கூறப்படுகிறது. இவரது சடலம் விமானம் மூலம் அவரது சொந்த ஊருக்கு எடுத்துவரப்படவுள்ளது. (116)

**காத் நோபிள் கட்டுரையிலிருந்து**



**செப்டம்பர் 11 இன் பின்னர் அமெரிக்கர்களின் கொலைப் பட்டியலில் ஏழு பெயர்கள் மட்டுமே இடம்பெற்றிருந்தது, இப்போது அது ஆயிரக்கணக்கானவர்களை உட்படுத்தியுள்ளது. அதாவது பராக் ஒபாமா சொன்னதின்படி, ஆயிரக்கணக்கான மக்களை கொல்வதற்கு முறையாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது, அவர்கள் வெள்ளைக் கொடிகளை தாங்கி இருந்தாலும் அதைப்பற்றி கவலையில்லை என்பதாகும்.**



# நம் மனங்கள்தான் மாறவேண்டும்

எங்கள் கவலைகள் யாவும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான எதிர்க் கட்சியினரின் தோல்வியுடன் கூட்டு சேர்ந்துள்ளது. இந்த உலகத்தில் நீதித்துறையின் சுதந்திரத்துக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைப் பற்றி அக்கறை காட்டுவதைவிட, சஜித் பிரேமதாஸவுக்கு எதிராக எந்தக் காயை நகர்த்தலாம் என்கிற திட்டம் தீட்டுதலில்தான் அவர் மிகவும் மும்முரமாக ஈடுபட்டுள்ளார். தனது போட்டியாளரை கட்சியின் உபதலைவராக வரவிடாமல் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ அகற்றியதில் வெற்றி பெற்ற பிறகு, இறுதியாக சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் குற்றப் பிரேரணை பற்றி அவர் ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.

மீண்டும் ஒரு முறை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் மிக மோசமான பிரசாரங்களை எதிர்ப்பதற்கு, பரவலான தகவல் பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டிய தேவை மற்றவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. எங்கள் கவனங்களை பொதுநலவாயத்தின் மீது செலுத்தி, குற்றவியல் பிரேரணையின் விளைவாக இலங்கை மீது தடைகளைத் திணிக்கும்படி முயற்சி செய்வது மிகவும் அபத்தமானது, ஐ.தே.க. வின் தலைவர் தேசியப் போராட்டத்தை சர்வதேச மயமாக்கி மீண்டும் எங்களை அதே பழைய பொறிக்குள் தள்ளிவிடுகிறார். உண்மையாக சொல்வதானால், பொதுநலவாயத்தைப் பற்றி யார் அக்கறைப் படுகிறார்கள்?

ரணில் விக்கிரமசிங்க அவர்கள் மிகக் கடுமையாக முயற்சி செய்வாரானால், 2013இல் நடக்கவிருக்கும் பொதுநலவாய அரசாங்கத் தலைவர்களின் கூட்டம், இலங்கையை விட்டு வேறிடம் போகும். ஆனால் அதனால் என்ன பயன்? மகிந்த ராஜபக்ஷ அதையிட்டு சிறிதளவாவது கவலை அடைவார் என்று நான் எண்ணவில்லை. அதற்கு முற்றிலும் நேர்மாறாக வெளிநாடுகளிலிருந்து எச்சரிக்கைத் தீ எழும் போதெல்லாம், அவர் தனது மிகவும் சௌகரியமான நிலையிலேயே இருந்துள்ளார். அரசாங்கம் தங்கள் பிரச்சினைகளை சர்வதேசத்துக்கு எடுத்துச் செல்பவர்களை எல்லாம் தேசத்துரோகிகள் என்று அழைக்கும்போது, அது முற்றிலும் பாசாங்குத் தனமானது என்பதில் சிறிதும் ஐயமில்லை. 1980களின் பிற்பகுதியில் ஐ.தே.க. அரசாங்கம் சிங்கள இளைஞர்களைக் கொன்று தள்ளியபோது, மகிந்த ராஜபக்ஷ இதே காரியத்தைத் தான் செய்தார் என்பது எங்கள் அனைவருக்கும் நன்கு தெரியும். அவரது தற்போதைய சிந்தனைப்படி அதுவும் தவறான ஒரு செயல்தான்.

ஜே.வி.பி.க்கு ஆதரவாக மேற்கொண்ட எதிர்ப்பு பிரசாரங்கள் ஏதாவது தாக்கத்தை ஏற்படுத்தியதாக நான் எண்ணவில்லை. இலங்கை ஒன்றில் ஒருபோதும் அவர்களின் மிகையான செயல்களுக்காக அவர்களைத் தண்டிக்காது, என்று உலகம் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும், அல்லது எல்லாம் முடிவடைந்த பின்னர் என்ன நடக்கப் போகிறது என்பதை கவனிப்பதில் அதீத ஆவல் கொண்டிருக்க வேண்டும். மொத்தத்தில் தார்மீக கண்ணோட்டத்தில் இல்லாவிட்டாலும் யதார்த்தத்தில் அவர்கள் செய்தது சரி. அவர்கள் தண்டிக்கப் பட்டிருந்தால், அது அநேகமாக சட்டத்துக்கு புறம்பான வகையில் முற்றிலும் பிரத்தியேகமானதாக இருந்திருக்கும்.

இன்றும் கூட, அந்த யுகத்தை சேர்ந்த சில மனித புதைகுழிகள் மாத்தளையில் கண்டுபிடிக்கப் பட்டதை தொடர்ந்து அதைப் பற்றி ஒரு விசாரணைக்கு ஜே.வி.பி. அழைப்பு விடுத்துள்ளது. அது வழங்கப்படுவதற்கான வாய்ப்புகள் சிறிதளவு இருந்தாலும், எப்படியாயினும் அத்தகைய செயற்பாடுகளுக்கு உத்தரவிட்ட அரசியல்வாதிகளுக்கு இதன் விளைவாக சிறைவாசம் அனுபவிப்பதற்கான வாய்ப்புகள் எதுவும் இருக்கப் போவ தில்லை.

இந்த விடயத்தை ஜே.வி.பி. பெரிதாக முன்னெடுக்கப் போவதில்லை. அப்படிச் செய்ய நேர்ந்தால், அதன் சொந்த பங்காக அது செய்த படுகொலைகளை எல்லாம் மக்களுக்கு நினைவுபடுத்த வேண்டியதாகிவிடும். ஆனால் அந்த விசாரணை நடத்தப்பட்டால் என்ன நடக்கும் என்று கற்பனை செய்யுங்கள். எல்.ரி.ரி.ஈ உடனான போரில் ஏற்பட்ட தமிழ் மக்களின் மரணம் சம்பந்தமாக அநேகம் பேர்கள் இப்போது செய்ய நினைப்பதைப்போல் அது சர்வதேச சமூகத்தை விசாரணை நடத்த அழைக்கும். இதற்காக நீதி கிடைக்குமா? இல்லை. ஒருபோதும் இல்லை.

இருபது வருடங்களுக்கு மேலான காலம் கடந்த பின்னரும் மற்றும் ஒரு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமை யிலான கூட்டணி அரசாங்கம் அதிகாரத்தில் இருந்தாலும் கூட, சர்வதேச சமூகத்தினால் அந்த விடயத்தில் எதுவும் செய்ய முடியாது. ஏன்? ஏனெனில் இலங்கையில் நடக்கும் தேர்தல்களில் சர்வதேச சமூகம் வாக்களிக்க முடியாது.

அது இலங்கையர்களின் கருத்து, அது மகிந்த ராஜபக்ஷவின் விடயம். மாத்தளையில் உள்ள மனிதப் படுகுழிகளைப் பற்றி அந்த மக்கள் கவலைப்படாதவரை அவரும் கவலைப் படப் போவதில்லை. அதே போலத்தான், எல்.ரி.ரி.ஈக்கு எதிரான பிரசாரத்தைப் பற்றி அவர்கள் விசாரணை செய்யாதவரை, ரணில் விக்கிரமசிங்காகூட அதைச் செய்யப் போவதில்லை.

இலங்கையில் உள்ள ஒவ்வொருவருக்கும் மிக நன்றாகத் தெரிந்ததைப் போல சர்வதேச சமூகத்துக்கு தார்மீக அதிகாரம் பூச்சியமாகவே உள்ளது. மற்றைய நாடுகளுக்கும் அவர்களுக்கு சொந்தமான மோசமான யுத்தம் உள்ளது என்பது நாங்கள் அனைவரும் நன்கு அறிந்ததே. உண்மையில் உலகின் மிக உயர் ஜனநாயகப் பதவிக்கு ஜோர்ஜ் புஷ்ஷுக்குப் பிறகு நோபல் பரிசை வென்றவரான பராக் ஒபாமா மாற்றீடு செய்யப்பட்ட பின்னரும், சில விடயங்கள் அப்படியே மீந்து உள்ளன என்பதை நாங்கள் நினைவு படுத்தவேண்டிய தேவை உள்ளது. கடந்த வாரம் சூடானின் உற்றாக் நகரில் நடைபெற்ற சூடானிய திரைப்பட விழாவில் திரையிடப்பட்ட ஒரு ஆவணப் படத்தின் பெயர் 'மோசமான போர்கள்' என்றிருந்தது.

இந்த நாட்டில் இடம் பெறும் துஷ்பிரயோகங்களைப் பற்றி அவர்களது சொந்த அரசாங்கங்கள் மௌனம் சாதிக்கும்போது, அதை வெளிப்படுத்தும் மேற்கத்தைய ஊடகங்களைப் பற்றி அவதூறு சொல்வதற்கு இலங்கையர்கள் மிகவும் விரும்புகிறார்கள், ஆனால் கிட்டப் பார்வை காரணமாக ஏற்படும் ஒருவகை குறைபாடு இது. எங்களுக்கு தெரிந்து எல்லா, மேற்கத்தைய நாடுகளின் குற்றங்கள்யாவும் மேற்கத்தைய ஊடகவியலாளர்களினால் எங்கள் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக்கிலிருந்து பகிரங்கமாக ஆரம்பமான இந்த யுத்தம் காரணமாக, பயங்கரவாதம் மீதான போர், இப்போது மறைமுகமாக மாறியுள்ளது என்பதை அந்த ஆவணப்படம் மூலமாக காணக்கூடியதாக இருந்தது. எங்களுக்கு தெரிந்தது எல்லாம் ஒசாமா பின்லேடன் மீது இரவு ஆக்கிரப்பு மேற்கொள்ளப்பட்டு அவர் கொல்லப்பட்ட கதைதான்.

இன்னும் சொல்வதானால் கவர்ச்சிகரமான ஒரு ஹொலிவூட் திரைப்படமாகவும் அது மாற்றம் பெற்றுள்ளது, ஆனால் அந்த வருடம் ஆப்கானிஸ்தானில் மேலும் 30,000 இற்கும் மேற்பட்ட மற்றைய இரவு ஆக்கிரமிப்புகள் நடைபெற்றுள்ளன. ஆனால் அதைப்பற்றி யாரும் பேசுவதில்லை.

செப்டம்பர் 11இன் பின்னர் அமெரிக்கர்களின் கொலைப் பட்டியலில் ஏழு பெயர்கள் மட்டுமே இடம் பெற்றிருந்தது, இப்போது அது ஆயிரக்கணக்கானவர்களை உட்படுத்தியுள்ளது. அதாவது பராக் ஒபாமா சொன்னதின்படி, ஆயிரக்கணக்கான மக்களைக் கொல்வதற்கு முறையாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் வெள்ளைக் கொடிகளை தாங்கியிருந்தாலும் அதைப்பற்றி கவலையில்லை என்பதாகும்.

அது மேலும் பேசுவது, அமெரிக்கர்களால் வரையப்பட்ட திட்டத்தின்படி, அவர்கள் வெள்ளைக் கொடி ஒன்றினை பார்க்கக்கூடியளவுக்கு போதுமான தூரத்தில் இல்லாதபடியால் அப்படிச் செய்ய அது அவர்களை அனுமதிக்கிறது. உண்மையில் கொலைப் பட்டியலில் மக்களின் பெயர்கள் இல்லாவிட்டாலும் கூட அவர்கள் மீது குண்டுகளைப் போட அனுமதி வழங்கும் வகையில்,





ஜோர்ஜ் புஷ்ஷினால் உருவாக்கப் பட்ட ஒரு கொள்கையை பராக் ஒபாமா உறுதிப்படுத்தி வருகிறார். பாகிஸ்தான் மற்றும் யேமன் போன்ற நாடுகளின் சில குறிப்பிட்ட இடங்களில் - ஐக்கிய அமெரிக்கா போர் தொடுக்காத நாடுகளில்கூட - எல்லா இளைஞர்களும் பயங்கரவாதிகளாகவே கணிக்கப்படுவதால், வசதி ஏற்படும்போது அவர்களை கொல்ல முடியும்.

இதுவும் ஒரு பரம இரகசியம். யேமன் அரசாங்கம், அமெரிக்கக் கப்பலில் உள்ள ஏவுகணைகளின் எச்சங்களைப் படம்பிடித்த ஒரு உள்ளூர் பத்திரிகையாளரை விடுதலை செய்வதை பராக் ஒபாமா தனிப்பட்ட முறையில் தலையிட்டு தடுத்தார், அந்த ஏவுகணைகள் தொடர்ச்சியாக மக்களை கொன்று வருவதாக அந்த ஊடகவியலாளர் சொல்கிறார்.

பயங்கரவாதத்தின்மீதான போர் மற்றொரு முரண்பாடான வடிவத்துக்கும் சமமாகச் செல்கிறது.

(17ஆம் பக்கம் பார்க்க)

# ஜெனிவா தீர்மானத்தை எதிர்கொள்ள அரசிடம் உபாயங்கள் எதுவுமில்லை

## —என்கிறது ஐ.தே.க.



ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் அமெரிக்காவினால் எதிர்வரும் மார்ச் மாதத்தில் கொண்டுவரப்படும்போது, அதனை எதிர்கொள்வதற்கான உபாயங்கள் எதுவும் அரசாங்கத்திடம் இருப்பதாகத் தெரியவில்லை எனத் தெரிவித்திருக்கும் ஐ.தே.க.வின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, மீண்டும் ஒரு கால அவகாசத்தையே அரசாங்கம் கோரும் எனவும் ஊகம் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த திஸ்ஸஅத்த நாயக்க, இவ்விடயத்தில் சர்வ தேசமும் பக்கச்சார்பாகவே நடந்துகொள்வதற்கான வாய்ப்பு உள்ளது.

இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர வேண்டிய அவசியம் அமெரிக்காவுக்கு இருக்கின்றதா என்பதற்கான பதிலை எம்மால் கூற முடியாது. ஆனால், தற்போதுள்ள நிலவரத்தின்படி ஜனநாயகத்துக்கு விரோதமான செயற்பாடுகளே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

கடந்த வருடத்தில் அமெரிக்கா தீர்மானம் ஒன்றைக்கொண்டு வராமல் இருந்திருந்தால், வடக்கில் அபிவிருத்தி நடவடிக்கைகள் எதுவும் ஏற்பட்டிருக்காது. அதற்காக இன்று வடக்கில் முன்னெடுக்கப்படும் எல்லா நடவடிக்கைகளையும் அபிவிருத்தி என்று கூறிவிட முடியாது.

அதற்காக அமெரிக்க தீர்மானத்தில் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவும் மனித உரிமைகள் மற்றும் போர்க் குற்ற விசாரணைகளை முன்னெடுப்பதைப் பொறுத்தவரையும் அரசாங்கம் எதனையும் செய்யவில்லை. போர்க்குற்ற விசாரணை, மனித உரிமை மீறல்கள் என்பனவற்றுக்கு இந்த அரசாங்கம் எப்போது பதில் கூறும் என்பது தெரியவில்லை.

கடந்த வருடத்தில் இந்தியாவுக்குச் சென்ற எமது நாட்டுத் தலைவர்கள் அதன் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளை முன்னெடுத்தார்கள். ஆனால், இந்தமுறை எந்வொரு நாட்டுக்கும் எமது தலைவர்கள் ஆதரவைத் திரட்டுவதற்காகச் செல்லவில்லை.

அதனால், இந்த வருடத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் கால அவகாசத்தைத் தாருங்கள் என்றுதான் அரசு கேட்கப்போகின்றது. சர்வதேசமும் இந்த விடயத்தில் பக்கச் சார்பாகச் செயற்படுவதற்கான வாய்ப்புக்களே காணப்படுகின்றன. என திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்தார்

# கைதிகளின் உளநல சுகாதாரம்; மேம்படுத்த விசேட திட்டம்

(கொழும்பு)

சிறைக்கைதிகளின் உளநல சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான விசேட திட்டமொன்று செயற்படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் சிறைக்கைதிகளுக்கு திரைப்பட்ங்களை பார்ப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

சிறந்த வழிகாட்டல்களை வழங்கும் திரைப்படங்களை காட்சிப் படுத்துவதன் மூலம் கைதிகளின் உளநல சுகாதாரத்தை விருத்தி செய்ய முடியும் என திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது..

அமைச்சர் சந்திரசிறி கஜதீரவின் வழிகாட்டலுக்கு அமைய புதிய திட்டம் செயற்படுத்தப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் பீ.டபிள்யூ.கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் ஒத்துழைப்புடன் வெலிக்கடைச் சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்கு திரைப்படங்களை காட்சிப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

# காணித் தகராற்றில் பிக்கு குத்திக்கொலை

(கொழும்பு)

காணித் தகராறு காரணமாக பௌத்த பிக்கு ஒருவர் குத்திக் கொலைச்செய்யப்பட்ட சம்பவம் ஒன்று மொறட்டுவை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மொறட்டுவ, vflcad பகுதியிலுள்ள விகாரையின் பிக்கு ஒருவரே இவ்வாறு நேற்றுமுன்தினம் இரவு குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் இடம்பெற்றதன் பின்னர் பிரதேசவாசிகள் குறித்த சந்தேக நபரின் வீட்டுக்கு தீ மூட்டிக் கொளுத்தியுள்ளனர்.

இந்நிலையில் சம்பவத்தையடுத்து தப்பியோடிய பிரதான சந்தேகநபர்கள் இருவரும் பொரல்லஸ்கமுவ பகுதியில் வைத்து நேற்றுக்காலை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவீத்தனர்.

# முப்பது வீதமான சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டின் 30 வீதமான சிறார்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை போசாக்கு நிபுணர் சங்கம் தெரிவித்துள்ளது.

தாய்மார்களில் மூன்றில் ஒரு பகுதியினர் இரத்தச் சோகை நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை போசாக்கு நிபுணர் சங்கத்தின் தலைவர் கலாநிதி ரேனுக டி சில்வா தெரிவித்துள்ளார்.

மக்களின் போசாக்கு நிலைமையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். குறிப்பாக சிறுவர் சிறுமியரின் போசாக்கு நிலைமை குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

போசாக்கு நிபுண்ர்கள் சங்கத்தின் கூட்டத்தில் கலந்து கொண்ட போது அவர் இதன்னக் குறிப்பிட்டுள்ளார்.

# வட - கிழக்கில் அதிகாரப்பகிர்வு; சர்வதேச அமைப்புகள் தயார்

## கூறுகிறது ஜே.வி.பி.

வடக்கு மற்றும் கிழக்கை இணைத்து அதிகாரப் பகிர்வு அலகொன்றை அமைக்க ஒரு சர்வசன வாக்கெடுப்பை நடத்துமாறு இலங்கையை வலியுறுத்துவதற்காக சர்வதேச அமைப்புகள் தயாராகி வருவதாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் பொதுநலவாயம் போன்ற அமைப்புகளே இவ்வாறு தயாராகிவருவதாக ஜே.வி.பி தலைமையிலான ஏகாதிபத்தியத்திற்கு எதிரான மக்களின் இயக்கம் தெரிவித்துள்ளது.

முஸ்லிம்களை சிங்களவர்களிடமிருந்து பிரித்து தமிழர் பக்கம் தள்ளிவிடுவதற்காகவே சர்வதேச நிறுவனங்கள் முஸ்லிம் உணர்வை தூண்டிவிடுகின்றன என அந்த இயக்கத்தின் ஏற்பாட்டாளர் வண. தம்பர அமில தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு- கிழக்கு இணைப்பிற்கு முஸ்லிம்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்காகவே இவ்வாறு திட்டமிட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மனித உரிமைப் பேரவையில் அமெரிக்கா தீர்மானம் ஒன்றை கொண்டுவரவுள்ளதாலும்,பொதுநலவாயம் இலங்கைக்கு எதிரான ஒரு நடவடிக்கைக்கு தயாராகி வருவதாலும் இந்த நாடு ஒரு முக்கிய கட்டத்தில் உள்ளது.

இம்முறை கல்விப்பொதுத் தராதர உயர்த்தர பரீட்சைப்பெறுபேறுகள், முடிவுகளின் அடிப்படையில் 1,30,000பேர் பல்கலைகழகங்களுக்கு செல்வதற்கு தகுதிபெற்றுள்ளனர். இது வழமையை விடவும் கூடுதலான தொகையாகும்.

இதற்குத் தக்கமாதிரியே பெறுபேறுகள் அமையுமாறு,வேண்டுமென்றே செய்யப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களில் 20000 பேருக்கு மட்டுமே இடமுண்டு. எனவே தனியார் பல்கலைக்கழகங்கள் அமைக்க வேண்டியது அவசியம் என பிரசாரம் செய்வதே இதன் நோக்கம் என அவர் கூறினார்.

# திவிநெகும திணைக்களம் 3 மாதங்களில் உருவாகும்


(கொழும்பு)

திவிநெகும அபிவிருத்தித் திணைக்களம் மூன்று மாதங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சமுர்த்திப் பணிப்பாளர் நாயகம் ஜீ.பி. திலகசிறி தெரிவித்துள்ளார்.

திவிநெகும திணைக்களத்தை ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

சமுர்த்தி வங்கிகள் திவிநெகும வங்கிகளாக மாற்றம் செய்யப்படவுள்ளன. சமுர்த்தி நிறுவனத்தில் கடமையாற்றியவர்கள் திவிநெகும திணைக்களத்தின்கீழ் உள்வாங்கப்படவுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# போரைக்காரணம் காட்டி சுரண்டப்படுகிறது நாடு



(கொழும்பு)

போரைக்காட்டி நாடு சுரண்டப்படுவதாக ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

போர் . காரணமாக நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது என்றார்கள். போர் இடம்பெற்ற காலத்தில் சீனாவிடமிருந்தே ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

இந்த அனைத்து ஆயுதங்களும் கடன் அடிப்படையிலேயே பெற்றுக்கொள்ளப்பட்டன. இந்தக் கடன்களை நான்கு தலைமுறைகள் வரையில் செலுத்த நேரிடும்.

2012ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு வரையில் கடன் செலுத்த வேண்டியுள்ளது. போரைக் காட்டி நாடு சுரண்டப்பட்டது. தற்போது உலக சமூகத்திடம் கடன் பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

போர் இடம்பெற்ற காலத்தில் ஒரு பீரங்கித்தோட்டாவின் விலை 250 டொலர்களாகும். எனினும் இந்த அரசாங்கம் ஒரு தோட்டாவிற்காக 650 டொலர் செலுத்துகின்றது.

போர் இடம்பெற்ற இருபத்தைந்து ஆண்டுகளாகவே பீரங்கித் தோட்டாவின் விலை 50 டொலர்களினால் மட்டுமே உயர்வடைந்தது. கடந்த ஆண்டில் மட்டும் குறித்த பீரங்கித் தோட்டாவின் விலையை 400 டொலர்களினால் அதிகரித்துள்ளனர்.

இந்த அத்தனை சுமைகளும் நாட்டு மக்களே சுமக்க நேரிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார். காலியில் நடைபெற்ற மக்கள் சந்திப் பொன்றின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# தேசிய நீரோட்டத்தில் முஸ்லிம்கள் காத்திரமாகவே பயணிக்கின்றனர்

## என்கிறார் அமைச்சர் ஹக்கீம்

(கொழும்பு)

தேசிய நீரோட்டத்தில் முஸ்லிம்களின் பயணம் இன்னும் காத்திரமாகவே உள்ளதென சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கண்டி- கட்டுகஸ்தோட்டை வீதியில் உள்ள சிறிலங்கா முஸ்லிம் க்ாங்கிரஸின் மாகாணக் காரியால்யத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்று அரசியல் ரீதியாகவும் சமய ரீதியாகவும் முஸ்லிம்கள் பல சவால்களை எதிர் கொண்டு வருவதாகக் கூறப்பட்டாலும் இன்னும் தேசிய நீரோட்டத்தில் எமது பயணம் காத்திரமாகவே உள்ளது. சட்டக் கல்லூரி அனுமதி தொடர்பான ஒரு சர்ச்சை ஏற்பட்டிருந்தது. ஆனால் அது சுலபமாக தீர்க்கப்பட்டுள்ளது. இப்பிரச்சினையுடன் சிலர் என்னைத் தொடர்பு படுத்த முயற்சித்தனர். இதற்கும் எனக்கும் எத்தகைய தொடர்பும் இல்லை. அது சுயாதீனமான ஒரு நிறுவனமாகும். எனது தலையீடு எதுவும் அங்கு ஏற்படுத்தப்படவில்லை.

அதே போன்று கடந்த வாரத்தில் நீதி அமைச்சில் உயர் பதவிகளில் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவையும் அரசியல் அமைப்பு மற்றும் நாட்டின் சட்டவிதிகள், நாடாளுமன்ற சம்பிரதாயம் போன்ற அனைத்து அம்சங்களும் கவனத்தில் எடுக்கப்பட்டு அதன் பிரகாரமே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம்மாற்றங்களால் பொது மக்களுக்கு நன்மைகளே அதிகரிக்கும் என்றார்.





கோண்டாவில் சிறுவர் உலகம் முன்பள்ளியில் அண்மையில் நடைபெற்ற பரிசளிப்புவிழாவில் முன்பள்ளி சிறார்களின் நடன நிகழ்வைக் காணலாம்.

# வீதி புனரமைப்பு

(யாழ்.நிருபர்)

நீண்ட காலமாக சேதமுற்றிருந்து மக்கள பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்ட புலோலி தெற்கு - கம்பாவத்தை புதுவீதி மற்றும் கூவில் - வட்டுவான் குடியேற்றத்திட்ட வீதி என்பன புனரமைக்கப்பட்டுள்ளன.

கடந்த 39 வருடங்களுக்கும் மேலாக திருத்தப்படாதிருந்த இவ்வீதிகள், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஈ.பி.டி.பி.யின் பருத்தித்துறை அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோர் மேற்கொண்ட முயற்சியின் பயனாக இவ்வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதாக இப்பிரதேச மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். (10)

# முரசின் இன்றைய பலன்

(05.02.2013 - செவ்வாய்க்கிழமை)

நந்தன வருஷம் தை மாதம் 23 ஆம் திகதி.
நட்சத்திரம் அனுசம். பிற்பகல் 1.10 வரை. திதி தசமி
முன்னிரவு 11.53 வரை. இராகுகாலம் 3.35 - 5.05 வரை.
சுபநேரம் 11.05 - 12.35 வரை. சித்தம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | அதிக பணியால் மனத்தளர்ச்சி. யாரிடமும் விவாதம் வேண்டாம். தொழில், வாய்ப்பை பயன்படுத்துக. புதிய செலவுகள் வரும். விருந்து, உபசரிப்பு. |
| ரிஷபம் | நண்பர், உறவினர் நலனில் அக்கறை கொள்வீர்கள். செயல்களில் நேர்த்தி, திறமை. தொழில், புதிய வாய்ப்பு வழிமுறை. பணவரவும், நன்மை. |
| மிதுனம் | இன்று எளிமையும் சாந்தமும். எதிர்பார்த்த நன்மை, வந்து சேரும். தொழில், இலக்கு நிறைவேறும். சராசரி பணவரவு. |
| கடகம் | செயலில் புதிய நுணுக்கங்கள். தொழில், மாறுபட்டால் சிறு தொந்தரவு. பணவரவு திருப்தி. புத்திரரின் நற்செயல், மனதை மகிழ்விக்கும். உதவி. |
| சிம்மம் | நல்லவர்களின் நட்பு கிடைத்து, மகிழ்ச்சி. இதுவரை தாமதமான செயல் நிறைவேறும். தொழில், வளர்ச்சி. உபரி வருமானம். |
| கன்னி | பொறுமையும், அறிவுபூர்வ சிந்தனைகளும். நற்பலன் அதிகரிக்கும். தொழில், வியப்புத் தரும் வளர்ச்சி. தாராள வரவு. சேமிப்பும் உருவாகும். |
| துலாம் | முக்கிய செயல் ஒன்று நிறைவேறும். புதிய நண்பரின் அறிமுகமும், ஆலோசனையும். தொழில், செழித்து தாராள பணவரவு. சொத்து சேர்க்கை. |
| விருச்சிகம் | பணிகள் நிறைவேறுவதில் தாமதம். அனுபவசாலியின் ஆலோசனை உதவும். தொழில், சராசரி. வேலைப்பளு. பொருட்களை, பாதுகாக்கவும். |
| தனுசு | பிறர் பேச்சில் மனம் வருந்தும். குடும்பத்தினர் ஆதரவு. தொழில், இடையூறுகளை சரிசெய்வீர்கள். அளவான பணவரவு. இசை இரசித்து ஒய்வு. |
| மகரம் | எதிர்ப்பவரை வெற்றி கொள்ள வாய்ப்பு. மன உறுதி. தொழில், அனுசூலகாரணி பலம் பெறும். வரவு கூடும். வெகுநாள் நினைத்த, பொருள் வாங்குவீர்கள். |
| கும்பம் | பணிகளில் ஆர்வம். எதிர்பார்த்த நற்பலன். தொழில, சகபாழகளால் நன்மை. பண வரவு குடும்பத் தேவை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் உதவி. |
| மீனம் | நஷ்டத்தை தவிர்க்க கூடுதல் முயற்சி தேவை. தொழில், குறுக்கீடு பின்னர் சரியாகும். கடன் பெற வேண்டாம். பயணத்தில், கவனம். |

# கொல்லங்கலட்டி கிராமத்திற்கு குடிநீர் விநியோகம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)


அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது அரசியல் அழுத்தங்களினூடாக எமது மக்களுக்கான பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து அம்மக்களது நலன்சார்ந்து உழைத்து வருகிறார் என ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

தெல்லிப்பளை - கொல்லங்கலட்டி கிராமத்திற்கான குடிநீர் வழங்கல் திட்டத்தை ஆரம்பிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை அமைச்சர் முன்னிலையில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீள்குடியேற்றம் முதற்கொண்டு இப்பகுதி மக்களின் அடிப்படைத் தேவைகள் உட்பட அனைத்துத் தேவைகளையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிறைவேற்றி வருகின்றார். வெறும் சுயலாப அரசியல்வாதிகள் வெற்று, வீர வசனங்களைப் பேசுவதில் மாத்திரமே தங்களது காலத்தை ஓட்டி வருகின்றனர். இவர்கள் எமது மக்களுக்கு எதுவித பணிகளும் செய்வதில்லை என்றும் தெரிவித்தார்.

இதில் பிரதேச செயலர் சிறிமோகனன் கருத்துத் தெரிவிக்கும் போது, தெல்லிப்பளை பிரதேசத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டு வரும் பணிகள் அளப்பரியது.



மீள்குடியேற்றத்திற்கான நடவடிக்கையை முன்னெடுத்த அமைச்சர், காடாகிக் கிடந்த இப்பகுதிகளை துப்புரவு செய்வது முதல் மக்களின் வாழ்வாதார வசதிகளை உயர்த்தும் வரையில் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்திருப்பது மாத்திரமல்லாமல், இம்மக்களது காணிப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கும் 290 இந்திய வீடுகளை வழங்குவதற்கும் ஏனையோருக்கு தற்காலிக வீடுகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும் எனத் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைவாக ஜப்பான் மற்றும் இலங்கை அரசாங்கங்களுக்கிடையிலான நட்புறவு மற்றும் ஒத்துழைப்பு நிமித்தம் 40 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இக் குடிநீர்விநியோகத் திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அமைச்சர்,

மீள்குடியேற்றம் இடம்பெறுவதற்கு முன்னர் நான் இப்பகுதிக்கு வந்திருந்த போது இங்குள்ள மக்கள் மிகுந்த வாட்டத்துடன் காணப்பட்டனர். இன்று அந்த நிலைமாறி மக்கள் சந்தோசமாக இருப்பதைக் காணும்போது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.

இன்னும் ஒருவருட காலத்திற்குள் இப்பகுதிக்குரிய தேவைகள் அனைத்தையும் நிறைவேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வேன். எமது மக்களாகிய உங்களது முன்னேற்றம் கருதி இயன்றளவு உழைக்க நான் தயாராகவே உள்ளேன் எனத்தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது கிராம மக்கள் தங்களது தேவைகள் தொடர்பிலான கோரிக்கைகளையும் அமைச்சரிடம் கையளித்தனர்.

## இன்னிசை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப்பண்பாட்டுப் பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் ஆன்மீக நிகழ்வில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நுண்கலைமாணி ச.சசிகுமாரின் இன்னிசை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

# 2 கோடி ரூபா மோசடி; பாதிரியார் கைது

(யாழ்ப்பாணம்)

2 கோடி ரூபாவிற்கு மேல் மோசடியில் ஈடுபட்டதாக கூறப்படும் பாதிரியார் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கனடாவுக்கு ஆட்களை அனுப்புவதாக கூறியே குறித்த பாதிரியார் அப்பாவி மக்களிடம் இலட்சக்கணக்கில் பணத்தை பெற்றுக்கொண்டு அவர்களைக் கனடாவுக்கு அனுப்பாமல் தொடர்ந்து ஏமாற்றிவந்த நிலையிலேயே பொலிஸாரினால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த பாதிரியாரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இவர் இருபாலை, நல்லூர் மற்றும் கோப்பாய் போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்களையே இவ்வாறு ஏமாற்றியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (25)

# ஆதனவரிக்கு கழிவு வழங்கும் காலஎல்லை நீடிப்பு

(யாழ்.நிருபர்)

ஆதனவரிக்கு கழிவு வழங்கும் கால எல்லையை யாழ்.மாநகரசபை எதிர்வரும் மார்ச் மாதம் வரை நீடித்துள்ளது.

மார்ச் மாதத்திற்கு முன்னர் தமது காணிகளுக்கான ஆதனவரி, சொத்துவரி என்பவற்றைச் செலுத்தும் வரியிறுப்பாளர்களுக்கு 10 வீதம் கழிவு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இந்த ஆண்டுக்கான முதலாவது பொதுக்கூட்டத்தில், கழிவு வழங்கும் கால எல்லையை மார்ச் மாதம் வரை நீடிக்க சபை அனுமதி வழங்கியது.

இவ்வாண்டுக்குரிய வரியை உரிய காலப்பகுதியில் செலுத்தாதவர்கள் அடுத்த ஆண்டில் 12 வீதம் மேலதிக வரி வழங்க வேண்டி ஏற்படும் எனவும் மாநகரசபை ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் தெரிவித்துள்ளார். (10)

# உயர்தரப் பரீட்சை முன்னணிப் பெறுபேறுகள்

(நேற்றைய தொடர்ச்சி...)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

கணிதப்பிரிவு - ஆங்கில மொழி மூலம்

பி.நிலுக்ஷி 2ஏ பி,

கணிதப்பிரிவு - தமிழ் மொழி மூலம்

ஆ.ஜெரோமி 2ஏ, சி

விஞ்ஞானப்பிரிவு - ஆங்கில மொழிமூலம்

த.பிரியந்தி 3ஏ, அ.மேனகா ஏ,2பி, எஸ்.கலினா 3பி, கே.கம்சாளினி ஏ,2பி.

விஞ்ஞானப்பிரிவு - தமிழ் மொழி மூலம்

பி.சர்மிளா 2ஏ, பி, கே.வக்சனா ஏ 2பி, என்.சோபினி ஏ,2பி, ரி.மைதிலி 3பி,

வர்த்தகப்பிரிவு

என்.மதுரா 3ஏ (மாவட்ட நிலை 9), எஸ்.தர்சிகா 3ஏ, எம்.எனித்தா 3ஏ, எஸ்.கவிதா 2ஏபி, வி.சரண்யா 2ஏபி, எஸ்.சிவதனுஷா ஏபிசி.

கலைப்பிரிவு

ஆர்.கம்சவதனி ஏபிசி, ரி.வைதேகி ஏபிசி, ஜெ.தனலட்சுமி ஏ2பி, ஆர்.சோபிகா ஏ2சி, எஸ்.அனோஜா ஏபிசி, வை.மாதவி ஏ2சி, எஸ்.பிரகலா பி2சி, ஜீ.மாதுமை 2ஏசி, ரி.பார்த்தீபா 2பிசி. (109, 116)



# மகனின் வருகையால் மாற்றமடைந்த மெஸ்சி

மகன் தியாகோவின் வருகை எனது வாழ்க்கையில் பல மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என ஆர்ஜென்ரீனாவின் நட்சத்திர கால்பந்தாட்ட வீரர் மெஸ்சி தெரிவித்துள்ளார்.

தற்போது உள்ள நிலையில், அவன்தான் எனக்கு மிகவும் முக்கியம். முன்பு போட்டியில் சிறப்பாக செயற்படாத போது, வீட்டுக்கு சென்று என் மீதே வெறுப்படைவேன். தற்போது என் மகன் தியாகோவின் சிரிப்பை பார்க்கும் போது நான் அப்படி நடந்து கொள்வது இல்லை. தவிர, நள்ளிரவில் எழுந்து அவனுக்கு போத்தலில் பால் நிரப்பி கொடுத்து,தூங்க வைக்கிறேன். அவனுக்காக பல கடமைகளை தற்போது செய்கிறேன்.

அவன் என் செயற்பாடுகளை முழுமையாக மாற்றிவிட்டான். அவனின் வருகை பிபா சிறந்த வீரர் விருது வென்றதை விட அதிக மகிழ்ச்சி அளிக்கிறது. ஆரம்பம் முதல் இன்று வரை பயிற்சி மேற்கொள்வதில் புதிய நுணுக்கங்களை எதுவும் நான் கையாள்வது கிடையாது.

இதுவரை பார்சிலோனா அணிக்காக பங்கேற்று, எல்லா விருதுகளையும் பெற்றுவிட்டேன். தற்போது எனது சொந்த அணியான ஆர்ஜென்ரீனாவுக்காக பங்கேற்று உலக கோப்பை வெல்வதே எனது முதல் கனவு எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



பெண்களுக்கான பட்டயா ஓப்பன் ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் ரஷ்யாவின் மரியா கிரிலென்கோ ஜேர்மனியின் சபைன் லிசியை வீழ்த்தி கிண்ணம் வென்றார். வெற்றிக் கிண்ணத்துடன் மரியா கிரிலென்கோ, சபைன் லிசி ஆகியோர் நிற்பதைக் காணலாம்.

# பாலியல் வல்லுறவு வழக்கு ஜூடோ வீரருக்குத் தடை

(டோக்கியோ)

இரண்டு முறை ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்று ஜப்பானுக்குப் பெருமை சேர்த்த ஜூடோ வீரருக்கு பாலியல் வல்லுறவு வழக்கில் 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

மசாட்டோ உச்சிஷிபா 2004 ஏதென்ஸ் ஒலிம்பிக்கிலும், 2008 பீஜிங் ஒலிம்பிக்கிலும் ஜூடோ போட்டியில் தங்கம் வென்ற ஜப்பான் நாட்டின் நாயகனாகக் கருதப்பட்டவர். 2011 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் க்யூஷூ நேசிங் மற்றும் சமூகநலத்துறை பல்கலைக்கழகத்தில் உள்ள பெண்களுக்கான ஜூடோ கழகத்தைச் சேர்ந்தவர்கள் டோக்கியோ வந்தபோது போட்டிகளின் நிறைவில் விருந்து மற்றும் களியாட்டம் நடந்தது.

அப்போது அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட 18 அல்லது 19 வயது என்று அறியப்படுகிற ஒரு மாணவி, விடுதி அறையிலேயே தூங்கிவிட்டார். சிறிது நேரம் கழித்துப் பார்க்கும்போது உச்சி ஷிபா, அவரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியுள்ளார். அந்தப் பெண் சுதாரித்து எழுந்து, என்ன செய்கிறாய்? என்னை விட்டுவிடு என்று சொல்லியிருக்கிறார்.உடனே உச்சிஷிபா, அங்கு ஓடிக்கொண்டிருந்த தொலைக்காட்சி சத்தத்தை அதிகரித்து விட்டு, அந்தப்பெண்ணின் வாயைப் பொத்தி கொடூரமாக துஷ்பிரயோகம் செய்துள்ளார். இந்த வழக்கில் சமீபத்தில் தீர்ப்பு வழங்கிய நீதிமன்றம் உச்சிஷிபாவுக்கு ஐந்து ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை வழங்கியது. உச்சிஷிபா சிறையில் அடைக்கப்பட்டார்.

நீதிமன்றத்தில் இது குறித்து கருத்துத் தெரிவித்த உச்சிஷிபா, இந்த வழக்கை மேல்முறையீடு செய்வேன் என்று கூறினார்.



# இலங்கை வீரர்களுக்கு மவுசு

(சென்னை)

சென்னையில் இடம்பெற்ற இந்தியன் பிறீமியர் லீக் தொடருக்கான வீரர் ஏலத்தில் இலங்கையின் வீரர்கள் சிறப்பான பெறுமதியைப் பெற்றுக் கொண்டனர். வழமையைப் போலவே அவுஸ்ரேலிய வீரர்கள் அதிகளவில் கவனத்தை ஈர்த்திருந்த போதிலும், இலங்கை வீரர்களான அஜந்த மெண்டிஸ், திஸர பெரேரா, சச்சித்திர சேனநாயக்க ஆகியோர் சிறப்பான பெறுமதிகளைப் பெற்றுக் கொண்டனர். இலங்கை வீரர்களில் அதிக விலைக்கு விலை போன அஜந்த மெண்டிஸ், 725,000 அமெரிக்க டொலர்களுக்கு பூனே வொரியர்ஸ் அணியால் வாங்கப்பட்டார். திஸர பெரேரா 675,000 அமெரிக்க டொலர்களுக்கு சண் றைசர்ஸ் - ஹைதராபாத் அணியாலும், சச்சித்திர சேனநாயக்க கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியால் 625,000 அமெரிக்க டொலர்களுக்கு வாங்கப்பட்டனர். ஏனைய வீரர்களான ஜீவன் மெண்டிஸ் 50,000 அமெரிக்க டொலர்களுக்கு டில்லி டெயா டெவில்ஸ் அணியாலும், தனஞ்சய 20,000 அமெரிக்க டொலர்களுக்கு சென்னை சுப்பர் கிங்ஸ் அணியாலும், குஷால் ஜனித் பெரேரா 20,000 அமெரிக்க டொலர்களுக்கு ராஜஸ்தான் றோயல்ஸ் அணியாலும் வாங்கப்பட்டனர்.

இலங்கை வீரர்களில் உபுல் தரங்க, ரங்கன ஹேரத், டினேஷ் சந்திமால், பிரசன்ன ஜெயவர்தன, கௌஷால் சில்வா, டில்ருவான் பெரேரா, நுவான் பிரதீப், தம்மிக்க பிரசாத் ஆகியோர் அணிகளால் வாங்கப்பட்டிருக்கவில்லை.


# மூன்றாவது ஆட்டம் நாளை

அவுஸ்ரேலிய, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒரு நாள் போட்டி நாளைய தினம் நடைபெறவுள்ளது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் ஏற்கனவே, அவுஸ்ரேலிய அணி 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளமையால் இப்போட்டியில் வெல்லும் பட்சத்தில் தொடரை வசப்படுத்திக் கொள்ளும் நிலை உருவாகும்.

இதேவேளை, அடுத்து வரும் போட்டிகளில் எழுச்சி பெற்று தொடரைக் கைப்பற்ற முயற்சிப்போம் என மேற்கிந்தியத்தீவு அணிக் கப்டன் டரன் சமி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்டெயின் மீண்டும் கலக்கல் தென்னாபிரிக்கா அபார வெற்றி



(ஜோகனஸ்பேர்க்)

ஸ்டெயினின் சிறப்பான பந்து வீச்சில் மூலம் பாகிஸ்தான் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 211 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

தென்னாபிரிக்க, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி தென்னாபிரிக்காவின் ஜோகனஸ்பேர்கில் நேற்று நிறைவடைந்தது.

இதில் 204 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய பாகிஸ்தான் அணி முதல் இனிங்ஸைப் போன்று மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. ஒரு கட்டத்தில் 82 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நான்கு விக்கெட்டுக்களை இழந்திருந்தது. இந்நிலையில் ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த கப்டன் மிஸ்பா உல்ஹக், அசாட் சபீக்குடன் இணைந்து பொறுப்பாக ஆடினார். இந்த ஜோடி பாகிஸ்தான் அணிக்கு நம்பிக்கையூட்டும் வகையில ஆடியது. இருப்பினும் 128 ஓட்டங்களை இந்த ஜோடி இணைப்பாட்டமாகப் பெற்றவேளை தென்னாபிரிக்க பந்து வீச்சாளர்களால் பிரிக்கப்பட்டது. இறுதியில் பாகிஸ்தான் அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 268 ஓட்டங்களைப் பெற்று, 211 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது. இதில் கப்டன் மிஸ்பா உல் ஹக் 64, அசாட் சபீக் 54, நசீர் ஜம்ஷொட் 46, உமர் குல் 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் முதல் இனிங்ஸ் அசத்தி ஸ்டெயின் இரண்டாவது இனிங்ஸிலும் சிறப்பாகச் செயற்பட்டு ஐந்து விக்கெட்டுக்களைச் சாய்தார். மற்றும் மோர்க்கல், பிலண்டார் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இவ்வெற்றியின் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் தென்னாபிரிக்க அணி 1-0 என்ற நிலையில் முன்னிலை வகிக்கின்றது. போட்டியின் ஆட்டநாயகனாக இரு இனிங்ஸிலும் 11 விக்கெட்டுக்களை வீழ்த்திய ஸ்டெயின் தெரிவானார். தென்னாபிரிக்கா முதல் இனிங்ஸ் 253, இரண்டாவது இனிங்ஸ் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 275. பாகிஸ்தான் முதல் இனிங்ஸ் 49. இதேவேளை, நூறாவது டெஸ்ட் போட்டிக்குத் தலைமை தாங்கிய தென்னாபிரிக்க அணி கப்டன் டெஸ்ட் இப்போட்டியை வென்று தனக்கான கௌரவத்தை மேலும் அதிகரித்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் 14ஆம் திகதி கேப்டவுனில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# போலியான நடிப்பா?

போலியாக நடிக்க வேண்டிய அவசியம் எனக்கில்லை. அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் கிண்ணத்தை வெல்வதற்கு நான் பட்ட வேதனை யாருக்கும் தெரியாது என முதல்நிலை வீராங்கனை அசரங்கா தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய ஓப்பன் தொடரை கைப்பற்றியதும், என் முகம் மகிழ்ச்சி அளிக்கும் விதத்தில் இல்லை. ஆனால், மனதுக்குள் அதிக மகிழ்ச்சியாக இருந்தேன். உலகத்தில் உள்ள எல்லோரும், நான் ஒரு உணர்ச்சிவசப்படும் வீராங்கனை என நினைக்கின்றனர். இத்தொடரில் சாதிப்பதற்காக, நான் எப்படிப்பட்ட நெருக்கடிக்கு உள்ளானேன் என யாருக்கும் தெரியாது.

இறுதிப் போட்டியில் வென்றவுடன், தோளில் இருந்து, மிகப்பெரிய பாரத்தை இறக்கி வைத்தது போல உணர்ந்தேன். எனவே, வெற்றி பெற்றதும் அழுதது, இயற்கையான ஒன்றே. நான் போலியாக நடிக்க வேண்டிய அவசியமில்லை. முன்பெல்லாம், என் உடற்தகுதி குறித்து அதிகம் பேசப்படும். தற்போது, இதில் கூடுதல் கவனம் செலுத்துகிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வேலணைப் பிரதேச மட்ட எல்லே

# நயினாதீவு இஸ்லாம், புங்குடுதீவு சண் ஸ்ரார் சம்பியன்

(வேலணை)

வேலணைப்பிரதேச மட்ட எல்லே போட்டியில் நயினாதீவு இஸ்லாம் மற்றும் புங்குடுதீவு சண் ஸ்ரார் அணிகள் சம்பியன் பட்டம் வென்றன.

வேலணைப் பிரதேச வருடாந்த விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக தற்போது பெருவிளையாட்டுப்போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் ஆண், பெண்களுக்கான எல்லே போட்டி கடந்த 2ஆம் திகதி புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் ஆண்களுக்கான எல்லே போட்டியின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் புங்குடுதீவு சென். சேவியர் அணியும், நயினாதீவு இஸ்லாம் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் நயினாதீவு இஸ்லாம் அணி 7-6 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் புங்குடுதீவு அம்பாள் அணியும், நயினாதீவு ஸ்ரீ அம்பிகா அணியும் மோதின. இதில் இரு அணிகளும் சமபுள்ளியைப் பெற்றமையால், நாணயச் சுழற்சி மூலம் வெற்றி-தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் புங்குடுதீவு அம்பாள் அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இறுதிப் போட்டியில் நயினாதீவு இஸ்லாம் அணியும், புங்குடுதீவு அம்பாள் அணியும் மோதின. பெரும் பரபரப்பாக இடம் பெற்ற இப்போட்டியில், 5-4 என்ற புள்ளிகள் அடிப்படையில் நயினாதீவு இஸ்லாம் அணி வெற்றிபெற்று பிரதேச மட்ட சம்பியனானது.

இதேவேளை, பெண்களுக்கான முதலாவது அரையிறுதிப் போட்டியில் புங்குடுதீவு சண் ஸ்ரார் அணியும் புங்குடுதீவு சென். சேவியர் அணியும் மோதின. இதில் புங்குடுதீவு சண் ஸ்ரார் அணி 2-1 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில், புங்குடுதீவு ஜனசக்தி அணியும், புங்குடுதீவு நிலாஜோதி அணியும் மோதின. இதில் புங்குடுதீவு ஜனசக்தி அணி 1-0 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில், புங்குடுதீவு சண் ஸ்ரார் அணியும், புங்குடுதீவு ஜனசக்தி அணியும் மோதின. இப்போட்டியில் ஆரம்பம் முதலே புங்குடுதீவு சண் ஸ்ரார் அணி ஆதிக்கம் செலுத்தியது. இறுதியில் புங்குடுதீவு சண் ஸ்ரார் அணி 5-1 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று பிரதேச மட்ட சம்பியனானது.

இப்போட்டி நிகழ்வில் விளையாட்டு உத்தியோகத்தர்கள், விளையாட்டுத் துறை சார்ந்த அதிகாரிகள், கழகத் தலைவர்கள், வீர,வீராங்கனைகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்துகொண்டு போட்டியைக் கண்டுகளித்தமை குறிப்பிடத்தக்கது. (93)



இஸ்லாம் அணி



சண் ஸ்ரார் அணி

## மெய்வல்லுநர் போட்டி

(பருத்தித்துறை)

அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் எட்டாம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் வி. இந்திரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சா. செல்வக்குமார் கலந்துகொள்ளவுள்ளார். (109)

***

(வடமராட்சி)

குடத்தனை தமிழ்க்கலவன் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் தி.குகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வில், மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி க. பொன்னையா பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். கௌரவ விருந்தினராக ஈ.பி.டி.பி.யின் வடமராட்சிப் பிரதேச அமைப்பாளர் ஸ்ரீரங்கேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். (116)

## மரதன் ஓட்டப் போட்டி

(யாழ். நிருபர்)

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியின் 2013ஆம் ஆண்டுக்கான வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியின் தொடக்க நிகழ்வாக மரதன் ஓட்டப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கடந்த இருபது வருடங்களின் பின்னர் காரைநகரைச் சுற்றி நடைபெற்ற இம்மரதன் ஓட்டப் போட்டியைக் கல்லூரி அதிபர் வே. முருகமூர்த்தி ஆரம்பித்து வைத்தார்.

இப்போட்டி நிகழ்வில் பெருந்தொகையான மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டு போட்டியைக் கண்டுகளித்தனர். (10)

# இரண்டாவது சுற்றில்

# ஓல்ட்கோல்ட்ஸ், திருநெல்வேலி அணிகள்




(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் கிரிக்கெட் தொடரின் இரண்டாவது சுற்றுக்கு ஓல்ட்கோல்ட்ஸ், திருநெல்வேலி அணிகள் தகுதிபெற்றுள்ளன.

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணையுடன், கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் 30 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் தொடர் சனி, ஞாயிறு தினங்களில் கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி மைதானங்களில் நடைபெற்று வருகின்றது.

இதில் கடந்த சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஒன்றில் ஓல்ட்கோல்ட்ஸ் அணியும், யூனியன்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஓல்ட்கோல்ட்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 30 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிரோஜன் 78, திலீபன் 65, சுவிதன் 19, தினேஸ் 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரசாந்தன், தயாளன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 227 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யூனியன்ஸ் அணி 20.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 95 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வியடைந்தது. இதில் பிரசாத் 22 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் லக்ஸ்சன் நான்கு, ஜெதூசன், நிரோசன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இவ்வெற்றியின் மூலம் ஓல்ட்கோல்ட்ஸ் அணி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் திருநெல்வேலி அணியும் சென்றலைட்ஸ் புளூஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய திருநெல்வேலி அணி 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரபவன் 68, லவன் 32, சுரெந்திரன் 20, ரஜிந்தன் 14 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 177 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென்றலைட்ஸ் புளூஸ் அணி 24.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 114 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் ஸ்ரீபன் 39, சுபாஸ் 26, கோபிதரன் 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுரேந்திரன், கபில் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இவ்வெற்றியின் மூலம் திருநெல்வேலி அணி இரண்டாவது சுற்றுக்குத் தகுதிபெற்றது. (42)

# கொண்டாடப்படும் 'மாவீர்'களும் மறக்கப்பட்டுவிட்ட மக்களும்!

- முல்லை ஈஸ்வரன் கட்டுரையிலிருந்து.

வருடா வருடம் நவம்பர் 27ஆம் திகதியை விடுதலை புலிகள் தமது மரணித்த போராளிகளின் நினைவு நாளாக, "மாவீரர்" தினமாகக் கொண்டாடி வந்தனர். சிறிலங்கா அரசு 2009 மே 18ஆம் திகதியுடன் புலிகளை முழுதாக அழித்த பின்னரும் கூட, உலகம் முழுவதுமுள்ள புலி ஆதரவாளர்கள் அத்தினத்தை சற்று வீரியம் குறைந்த போதிலும் மாவீரர் தினமாகக் கொண்டாடியே வருகின்றனர்.

இதில் ஒரு சுவாரசிய மான விடயமென்னவெனில், ஒரு தலைவன், தனது பிறந்த தினத்தையே,தனது படை வீரர்கள் இறந்த நினைவு தினமாக அறிவித்து அதை முழுத் தமிழ் இனத்தையும் கொண்டாட வைத்திருப்பதுதான்! (இத்தகைய அதி மேதாவித் தனமான செயலை ஹிட்லர் கூட செய்ததாகத் தகவல் இல்லை) பிரபாகரனின் பிறந்த தினத்தை போராட்டத்தில் இந்தவர்களது நினைவு தின்மாகக் கொண்டாடும் அவலத்தை மாற்றுவதானால் ஒரேயோரு வழி மட்டுமே உண்டு. இறுதிப் போரின் போது இராணுவத்தினரால் (சரணடைந்த பின்?) பிரபாகரன் கொலை செய்யப்பட்டுவிட்டார் என்பது பல வழிகளிலும் நிருபிக்கப் பட்டுவிட்ட போதிலும், அவர் உயிருடன் இருக்கிறார் என்றும், அவர் விரைவில் திடீரென்று வெளிப்பட்டு தமிழீழப் போராட்டத்தை மீண்டும் நடத்தி வெற்றி வாகை சூடுவார் என்றும், போலிகள் தமது சொந்த வருமானத் தேவைகளுக்காகப் பிரசாரம் செய்வதைக் கைவிட்டு, அவரது மரணத்தை ஏற்றுக் கொண்டு, அவரது மரண தினத்தை மாவீரர் தினமாகப் பிரகடனம் செய்தால்தான் நடக்கும். அவரது தொண்டர்கள் தமது தலைவனுக்காக இந்தச் செயலைச் செய்வார்களா?

புலிகளின் தலைமை இதுவரை தமது மரணித்த உறுப்பினர்களை மட்டுமே மாவீரர்களாகக் கணித்து நினைவுகூர்ந்து வந்தனர். இலங்கை அரச இராணுவத்துடனான மோதலில் இறந்த அனைத்து இயக்கப் போராளிகளையும் மாவீரர் களாக ஏற்றுக்கொண்டு, அந்தத் தினத்தை நினைவுகூர வேண்டும் என மாற்று இயக்கங்கள் சிலவும், சில தமிழ் "அரசியல் ஞானி"களும் புலிகளிடம் இரந்தும் அவர்கள் அதற்குச் செவிசாய்க்கவில்லை. ஆனால் புலிகள் அழிந்து போன பின்னர் கடந்த இரண்டொரு வருடங்களாக தமது மரணித்த போராளிகளையும் புலிகளின் மாவீரர்கள் தினத்தில் சேர்த்து "துணிகரமாக" சில மாற்று இயக்கங்கள் நினைவுகூர ஆரம்பித்துள்ளன. வாழ்க அவர்களது "வீரம்" (துரோகம்?)!

இப்பொழுது கேள்வி என்னவென்றால், இலங்கை - இந்திய இராணுவங்களாலும், புலிகளைப் பிரதானமாகக் கொண்ட தமிழீழ இராணுவங்களாலும் அநியாயமாக மரணிக்க வைக்கப்பட்ட சாதாரண ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் - சிங்கள - முஸ்லிம் மக்களின் மரணங்களை யார் நினைவு கூருவது? அவர்களை எத்தினத்தில் நினைவு கூருவது?



இந்த நடவடிக்கையை யார் முன்னெடுப்பது?

முதலாம், இரண்டாம் உலக மகா யுத்தங்களின் போது மரணித்த இனந்தெரியாத இராணுவ வீரர்களுக்கும் மக்களுக்கும் கூட பல நாடுகளில் நினைவுத் தூபிகள் அமைக்கப்பட்டுள்ளதுடன், நினைவு தினங்களும் வகுக்கப்பட்டுள்ளன. அப்படியிருக்கையில், நாம் வாழ்ந்த காலத்தில், எமது கண் முன்னால் அரச இராணுவங்களாலும், இயக்க இராணுவங்களினாலும் கொல்லப்பட்ட மக்களை நாம் நினைவுகூர வேண்டாமா?

அரச இராணுவங்கள் "தேசிய வீரர்கள்" தினங்களையும், இயக்க இராணுவங்கள் "மாவீரர்கள், வீர மக்கள், தியாகிகள்" தினங்களையும் கொண்டாடட்டும். மக்களாகிய நாமும் போரில் மரணித்த எமது பொது மக்களுக்காக ஒரு தினத்தை தேர்ந்தெடுப்பது அவசியம் அல்லவா? இனியும் அசட்டையாக இருக்காமல் அடுத்த ஆண்டே நாம் இதைச் செயற்படுத்த வேண்டும்.

எத்தினம் "பொதுமக்கள் தினம்" என்பதை எப்படித் தீர்மானிப்பது என்பதை, ஏதாவது ஒரு வெகுஜன ஊடகத்தின் ஊடாக எமது மக்கள் மத்தியில் நடாத்தும் அபிப்பிராயக் கணிப்பின் மூலம் தெரிவு செய்யலாம். அப்பொழுது வேண்டுமானால் யாழ்ப்பாண மக்களின் மிகுந்த அபிமானத்தைப் பெற்றிருந்த முன்னாள் யாழ்.மாநகர முதல்வர் அல்பிரட் துரையப்பா அவர்களை புலிகள் படுகொலை செய்து, தமிழ் சமூகத்தின் முதலாவது பொதுமகன் கொலையை, அரசியல் கொலையை உலகறியச் செய்த அவரது தினத்தை நினைவுகூரும் வகையில்([illegible] யூலை 27) அத்தினத்தை அமைக்க வேண்டும் என ஏற்கெனவே சிலர் முன்வைத்துள்ள கருத்தையும் பரிசீலனை செய்யலாம்.

**(வானவில் 24 இதழ்)**

# யாருக்கும் வெட்கமில்லை

— ஞானி கட்டுரையிலிருந்து —



விஸ்வரூபம் பட விவகாரத்தில் கடைசியில் யாருக்கும் வெட்கமில்லை என்ற நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. கருத்துச் சுதந்திரம், சட்ட நெறிமுறை எல்லாம் எல்லாராலும் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டன.

கமல்ஹாசனின் படம் தமிழக முஸ்லிம்களுக்கு எதிரானதா இல்லையா என்ற கருத்தை, படத்தை மக்களிடம் வெளியிட்ட பின்னர்தான் தீர்மானிக்கமுடியும். முன்கூட்டியே தாங்கள் மட்டும் பார்த்து தீர்மானிக்கும் அதிகாரம், தங்களைத் தாங்களே எல்லா முஸ்லிம்களுக்கும் பாதுகாவலர்களாக அறிவித்துக் கொண்டுள்ள மத அடிப்படைவாதத் தலைவர்களுக்குக் கிடையாது. எல்லா ஹிந்துக்களுக்கும் தாங்கள்தான் பிரதிநிதி என்று சங்கபரிவாரம் நிலைநிறுத்த முயற்சிப்பதற்கு சரிநிகர் சமானமான அபத்தம் இது.

ஒரு படம் இந்திய சட்டப்படி தணிக்கை செய்யப்பட்டபிறகு அது வெளியாவதை யாரும் எதிர்க்கமுடியாது. படத்துடன் பிரச்சினை இருந்தால், எப்படி அனுமதித்தீர்கள் என்று தணிக்கை வாரியத்திடம்தான் கேட்கவேண்டும். அடுத்து மேல் முறையீடாக நீதிமன்றத்துக்கு செல்லவேண்டும். மாநில அரசிடம் மனுக் கொடுத்து படத்தை, அரசைத் தடை செய்யவைத்த முஸ்லிம் அமைப்புகள் யாரும் நீதிமன்றத்துக்குப் போகவில்லை. அவர்களுக்கு படத்தை கமல்ஹாசன் போட்டுக் காட்டியது, மும்பை தாதா பால் தாக்கரேவுக்கு தன் பம்பாய் படத்தை மணிரத்னம் போட்டுக் காட்டிய தவறுக்கு நிகரான தவறு.

ஜெயலலிதா சினிமாகாரர்களையும் முஸ்லிம் மதவாதிகளையும் திருப்திப்படுத்துவதற்காக நிருபர்களை அழைத்து விளக்கக்கூட்டம் நடத்தியிருக்கிறார். அரசு தடை செய்தது சரி என்றும் கமல்ஹாசன் முஸ்லிம் அமைப்புகளுடன் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் ஜெயலலிதா அதில் அறிவித்திருப்பது படு ஓட்டையான வாதம், சட்ட நெறிகளுக்கு புறம்பானது. அதை கமல்ஹாசன் ஏற்றுக் கொண்டிருப்பதும், கடைசி நிமிடம் வரை கமலுக்கு ஆதரவு தெரிவிக்காமல் பம்மிவிட்டு கிளைமாக்சுக்குப் பின்னர் வரும் சினிமா பொலிஸ் மாதிரி கடைசியில் கூட்டமாக வந்த சினிமா துறையினர் ஜெயலலிதாவுக்கு நன்றி தெரிவிப்பதும் வெட்கக்கேடானவை.

தணிக்கை சான்றிதழ் பெற்ற படத்தை அதன் பின் வேறு யாருக்கும் போட்டுக் காட்டி அனுமதி பெறவேண்டியதில்லை என்ற அடிப்படையான சட்ட உரிமையை ஜெயலலிதாவும் கமல்ஹாசனும் குழி தோண்டி புதைத்துவிட்டார்கள்.

ஏன் அரசு தடை விதித்தது என்பதற்கு ஜெயலலிதாவே சொன்ன காரணம் ஒன்றே ஒன்றுதான். படத்தை வெளியிட அனுமதித்தால், சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற்பட்டு வன்முறை நிகழும் என்று உளவுத்துறை தகவல்கள் சொன்னதால் ஆட்சியர்கள் தடை விதித்தார்கள் என்கிறார் ஜெயலலிதா.

அப்படித் தகவல் கிடைத்திருந்தால், வன்முறை செய்யப்போவது யார்? சாதாரண முஸ்லிம்களா? அல்லது 24 அமைப்புகளின் தலைவர்களும் தொண்டர்களுமா? தி.மு.கவும் இடதுசாரி கட்சிகளும் கடை அடைப்பு போராட்டம் அறிவித்தாலே, முன் இரவே எல்லா கட்சி முக்கியஸ்தர்களையும் தடுப்புக் காவலில் கைது செய்யும் பொலிஸார், ஏன் உளவுத் துறை தகவல்கள் கிடைத்தும் 24 அமைப்புகளின் பிரமுகர்களையோ முக்கிய அமைப்பாளர்களையோ தடுப்புக் காவல் கைது செய்யவில்லை?

நீதிமன்றம் அரசு விதித்த தடையை ரத்து செய்த மறு காலையிலேயே தியேட்டர் மீது தாக்குதல் என்று பல இடங்களில் வன்முறை ஏற்பட்டதை ஜெயலலிதா சுட்டிக் காட்டுகிறார். ஏன் தீர்ப்பு வந்த இரவே தடுப்புக் காவல் கைதுகளை செய்யவில்லை? வன்முறையில் ஈடுபட்டவர்கள் யார்?

கட்சித் தொண்டர் போல், "ஹொனரபிள் புரட்சித்தலைவி அம்மா" என்று பேட்டி கொடுக்கும் அரசின் அட்வகேட் ஜெனரல், சென்சார் பெரும் ஊழல் செய்ததாக நீதிபதியிடம் சொன்னாரே, அது இப்போது என்ன ஆயிற்று? அதற்கு தணிக்கை வாரிய தலைவர் லீலா சாம்சனின் கடும் கண்டனத்துக்கு ஜெயலலிதாவின் பதில் என்ன?

விஸ்வரூப பட தடை தொடர்பாக இதுவரை நடந்தது எல்லாம் கேவலமான அரசியல், மதவாத, பாசிச நாடகம்.

ஓட்டுக்காக முஸ்லிம் அமைப்புகளை ஜெயலலிதாவும், தங்கள் மதவெறி அரசியலுக்காக ஜெயலலிதாவை அந்த அமைப்புகளும் பயன்படுத்திக் கொண்டனர். இதற்கு பகடைக்காயாக பயன்பட்ட கமல்ஹாசன் நொந்து நூலாகி, வணிக சிக்கலிலிருந்து மீள்வதற்காக கொள்கை சமரசத்துக்கு தள்ளப்பட்டுவிட்டார். இதை விட அவர் திவாலாகி தமிழகத்தை விட்டு வெளியே குடியேறும் நிலை ஏற்பட்டிருந்தால், அவரது லட்சோபலட்சம் ரசிகர்கள் ஆளுக்கு நூறு ரூபாய் கொடுத்து அவரையும் கருத்துச் சுதந்திரத்தையும் காப்பாற்றியிருக்கமுடியும்.

எதுவுமே நடக்காதது போல அடுத்த சில வாரங்களில் எல்லாரும் அவரவர் வேலையைப் பார்ப்பார்கள். யாருக்கும் வெட்கமில்லை.

சீனாவின், ஹெபெய் மாகாணத்தில் வசிக்கும், சென், சியுவான் என்ற இளம் பெண்ணுக்கு, ஒரு வித்தியாசமான திறமை உள்ளது. இவரால், ஒரே நேரத்தில், இரண்டு கைகளாலும், சரளமாக எழுத முடியும். "இதென்ன பெரிய விஷயம்" என்று தானே, நினைக்கிறீர்கள்.

இந்த இளம் பெண், ஒரே நேரத்தில், ஒரு கையில், ஆங்கிலத்திலும், மற்றொரு கையில், சீன மொழியிலும், சரளமாக எழுதுகிறார். ஒரு கையில், செங்குத்தான கோணத்தில் எழுதினால், மறு கையில், படுக்கை வசத்தில், எழுதி அசத்துகிறார்.

"இந்த செப்படி வித்தையை, எப்படி கற்றுக் கொண்டீர்கள்?" என அவரிடம் கேட்டால், "பள்ளிப் பருவத்தில், அதிகமாக, "ஹோம் வேர்க்" கொடுப்பர். அப்போது, விளையாட்டாக, இரண்டு கைகளாலும், எழுதிப் பழகினேன். அதுவே, பின், வழக்கமாகி விட்டது..." என்கிறார்.

## இரண்டு கைகளாலும்...



## கண்ணா லட்டு தின்ன ஆசையா?



சாத்திரக்காரர்கள்
தலைமறைவானார்கள்.

சனங்களின் பெரும்பிணி
சாத்திரியின் பரிகாரங்களில்
தீராதென்பதை
சாவு சனங்களை நெருக்கிய
மலந்தோய்ந்த கடற்கரையில்
பிணங்கள் மிதந்த கடனீரேரிகளில்
தம்மை நோக்கி இரண்டு பக்கங்களிலிருந்தும்
குறிபார்த்துக்கொண்டிருந்த துப்பாக்கிகளை அஞ்சிய இரவில்
சனங்கள் கண்டுகொண்டார்கள்.

சனங்களோடு சனங்களாய்
தப்பியோடும் அவசரத்திலும்
சாத்திரக்காரர்கள் பரிகாரப் புத்தகத்தை
குழிதோண்டிப் புதைப்பதற்கு மறந்திருக்கவில்லை.
போகுமிடம் எப்படியோ?
சூரியன் மேற்கில்தான் உதிக்குமோ?
நிலவு பகலில் காயுமோ?
போன பின்னர் பார்க்கலாம்.

முக்காடிட்டபடி
தமக்கு முன்னர் ஓடித் தப்பிய சாத்திரக்காரர்களைச்
சபித்தபடி சனங்கள் உத்தரித்தனர்.

ஊழி முடிந்தபின்னர்
பிழைத்தவர் உழன்றனர்.
சவமாய் உடல் சுமந்து
மெல்லத் திரும்புகிறது காலம்.
துவக்குகளுக்கு ஒளித்தொளித்தேனும்
சப்பாத்துக்கால்களின் இடுக்குகளின் வழியேனும்
பூக்கத்தான் செய்தது நித்திய கல்யாணி

சாத்திரக்காரர்கள் காத்திருந்தனர்.
சனங்கள் தெம்படைந்த ஒரு நாளில்
அவர்கள் மறுபடியும் தொடங்கினர்

ஒபாமா உச்சத்தில்..
பான்கீ முன் பக்கத்தில்
இந்தியா கக்கத்தில்
சீனாவோ வெக்கத்தில்
சிறிலங்கா துக்கத்தில்
கண்ணா லட்டு தின்ன ஆசையா?
சாத்திரக்காரரின் வசியக்குரல்
சனங்களை மயக்கத் தொடங்குகிறது.


எலும்புக்கூடுகளை விலத்தி விலத்தி
புதையல் தோண்டிய யாரோ ஒருவன்
கண்டெடுக்கிறான் சாத்திரக்காரர்களின்
பழைய பரிகாரப் புத்தகத்தை.

சாத்திரக்காரன்
அசராமல் சொன்னான்
அது போனமாதம்
இது இந்தமாதம்.

— சு. அகிலன் —

(நன்றி: வல்லினம்)

# 3 நூற்றாண்டுகளைப் பார்த்தவர்!



ஜப்பானைச் சேர்ந்த, ஜிரொயுமான் கிமுராவுக்கு இப்போது 115 வயது. உலகின் மிக வயதான மனிதர் என்ற கின்னஸ் சாதனைக்கு சொந்தக்காரர் இவர் தான். ஏற்கனவே, தோமஸ் கிறிஸ்டியன் மார்டென்சன் என்பவர் தான், இந்த சாதனைக்கு சொந்தக்காரராக இருந்தார். இவர் 115 ஆண்டு 252 நாட்கள் வாழ்ந்தார்.

ஆனால், ஜிரொயுமான், சமீபத்தில் 115 ஆண்டு 253 நாட்களை கடந்து, தோமசிடமிருந்து சாதனையை தட்டிப் பறித்துள்ளார். ஜிரொயுமான் 1897இல் பிறந்தவர். இதன் மூலம் மூன்று நூற்றாண்டுகளை பார்த்தவர் என்ற பெருமை இவருக்கு கிடைத்துள்ளது.

இவருக்கு ஏழு மகன் மற்றும் இரண்டு மகள்கள் உள்ளனர். 14 பேரன், பேத்திகள், 25 கொள்ளுப் பேரன், பேத்திகள், 13 எள்ளுப் பேரன், பேத்திகள் என இவரது சாதனைப் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது.

“அதிக வயது வரை வாழும் இரகசியம் என்ன” என இவரிடம் கேட்டபோது, “அளவோடு சாப்பிட்டால், வளமாக, நீண்ட காலம் வாழலாம்...” என இரத்தினச் சுருக்கமாக பதில் அளிக்கிறார்.

# எலிசபெத் டெய்லர் படம்



ஹொலிவுட் நடிகைகளில் அழியாப் புகழ் பெற்ற நடிகை எலிசபெத் டெய்லர், “கிளியோபாட்ரா” படத்தில் கிளியோபாட்ராவாக நடித்து உலகப் புகழ் பெற்றவர். நிஜ வாழ்க்கையில் ஒன்பது திருமணங்கள் செய்து கொண்டு அமெரிக்காவில் ஹொலிவுட்டில் ஒரு சாதனை ஏற்படுத்தியவர். அதிலும், நடிகர் ரிச்சர்ட் பேர்ட்டனை இருமுறை மணந்தவர் (திருமணம் நடந்த சில ஆண்டுகளில் விவாகரத்து செய்து, மீண்டும் அவரை மணந்தவர்) இவரது வாழ்க்கை, டெலி பிலிமாக தயாரிக்கப்படுகிறது. ஹொலிவுட் நடிகை லின்ட்சே லோஹன், எலிசபெத் டெய்லராக நடிக்கிறார். குடித்து கார் ஓட்டி, குடியிலிருந்து மீள்வதற்கு சிகிச்சை பெற்று, நீதிமன்ற வழக்கு எல்லாம் பார்த்து முடித்து, இப்போது மீண்டும் இந்த டெலி பிலிமில் நடிக்க வந்திருக்கிறார் லின்ட்சே லோஹன். துணிச்சலான எலிசபெத்தின் வாழ்க்கைப் படத்தில், கிளு கிளுப்புக்குப் பஞ்சமிருக்காது.

# கோடம்பாக்கத்தில் சொன்னார்கள்...



“எல்லோரையும் போல் வரிசையில் நின்றுதான் என் வாக்கை பதிவு செய்கிறேன். மற்றவர்களைப் போல் நானும் ஒருவன். எல்லோருக்கும் இருக்கும் அக்கறை எனக்கும் இருக்கிறது. ஆனால் சினிமா உலகம் மட்டும் ஒவ்வொரு முறையும் குறி வைக்கப்பட்டு கொண்டே இருக்கிறது. விளம்பரத்துக்காக உணர்வுகளைத் தூண்டுபவர்களை ஊக்கப்படுத்த கூடாது. ‘விஸ்வரூபம’ படத்துக்காக கமலும், எதார்த்தமாக பேசியதால் த்ரிஷாவும் பிரச்னைகளில் சிக்கியுள்ளார்கள். இதை பார்க்கும் குடிமகனான எனக்கு பயம் வருகிறது. சந்தோஷமாக வாழ்வதை விடுத்து தவறுகளை மட்டுமே சிலர் கண்டுபிடிக்கிறார்கள். எதையும் விட முக்கியமானது ஒரு நாட்டின் நல்ல பிரஜையாக வாழ்வதுதான்.”

**- நடிகர் அஜித்**

“ஹிந்தியில் வெளியான ‘டெல்லி பெல்லி’ படத்தின் கதைக் கருவை மட்டும்தான் எடுத்து ‘சேட்டை’ படத்தில் கையாண்டு இருக்கிறேன். இரட்டை அர்த்த வசனங்களை எடுக்கவில்லை. முழுக்க முழுக்க நகைச்சுவைக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறோம். ஆர்யா, சந்தானம், பிரேம்ஜி கூட்டணியில் உருவாகியிருக்கிற காமெடி, நிச்சயம் ரசிகர்களுக்கு விருந்தாக அமையும். ஹன்சிகா, அஞ்சலி இருவரும் கூட காமெடியில் கலக்கியிருக்கிறார்கள். காமெடி படங்கள்தான் இப்போது தமிழ் சினிமாவின் வெற்றி இடங்களில் இருக்கிறது. அந்த வரிசையில் இதுவும் இருக்கும்”

**- இயக்குநர் கண்ணன்**



“தமிழில் சசிகுமார் நடித்த, சுந்தர பாண்டியன் படம், கன்னடத்தில் ‘ராஜு ஹீலி’ என்ற பெயரில் ரீ-மேக் ஆகிறது. தமிழில் லட்சுமி மேனன் நடித்த வேடத்தில், நான் நடிக்கிறேன். கிராமத்துப் பெண் வேடம் என்பதால், இதுவரை நான் நடிக்காத கதாபாத்திரம், இப்படத்தில் சிறப்பாக நடித்து, என் தாய்மொழியான கன்னடத்தில் நிலையான இடம் பிடிப்பேன்...”

**- நடிகை மேக்னா ராஜ்**

“ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியின் இயக்குநர் ஹீரோ. அந்த நிகழ்ச்சிக்கு தேர்வு பெறுகிறவர் ஹீரோயின். இந்த தொலைக்காட்சி குழு நிகழ்ச்சிக்காக பல்வேறு ஊர்களுக்குச் செல்கிறது. அங்கு அவர்களுக்கு கிடைக்கும் அனுபவங்கள்தான் ‘அழகன் அழகி’ படத்தின் திரைக்கதை. தொலைக்காட்சி நிகழ்ச்சிக்காக மக்கள் தங்களை எப்படி மாற்றிக் கொள்கிறார்கள் என்பதை இதில் காமெடியாக சொல்லுகிறோம். ஹீரோ, ஹீரோயினாக ஜாக் மற்றும் ஆருஷி அறிமுகமாகிறார்கள்.

**- ‘நீர்ப்பறவை’ இயக்குநர் நந்தா பெரியசாமி**



“சல்மான்ருஷ்டி எழுதிய புத்தகம் ஆங்கிலத்தில் “மிட் நைட் சில்ரன்” என்ற பெயரில் படமாகி வருகிறது. தீபா மேத்தா இயக்குகிறார். இப்படத் துக்காக, இந்த பாத்திரத்தின் தன்மையை புரிந்து கொள்வதற்காக குடிசைப் பகுதிக்கு சென்று 2 மாதங்கள் தங்கி வேலை செய்திருக்கிறேன். 1947ஆம் ஆண்டில் அபூர்வ சக்திகளுடன் பிறக்கும் குழந்தையை மையமாக வைத்து நடக்கும் சம்பவங்களை பிரதிபலிக்கும் கதை. குடிசைப் பெண்களின் வாழ்வியல் முறை ரொம்பவே சுவாரஸ்யமானது. அதை 2 மாதங்கள் நல்ல முறையில் அனுபவித்து வாழ்ந்தேன். அந்த வாழ்க்கையை நீங்கள் நிச்சயம் படத்தில் பார்க்கலாம்.”

**- ட்விட்டர் பக்கத்தில் ஸ்ரேயா**

“அயன், படிக்காதவன், சிறுத்தை, பையா என நான் நடித்த பல படங்கள் வெற்றி பெற்ற போதும், எனக்கு படமே இல்லாமல் போனதற்கு காரணம், எனக்கு எதிராக சிலர் செய்த சதி வேலைதான். அதனால், அடுத்து நான் கோடம்பாக்கத்துக்கு வந்ததும், அந்த சதிகார கும்பலை முறியடிப்பதே என் முதல் வேலை... அஜீத்தின் புதிய படத்தின் மூலம், ரீ-என்ட்ரி ஆகிறேன். இதையடுத்து மீண்டும் தமிழில் ஆழமாக காலூன்றி விடுவேன்.”

**- நடிகை தமன்னா**

# மீன்பிடி நடைமுறைகளை மேம்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையின் மீன்பிடித் தொழிலில் உள்ளூரிலும் எல்லை கடந்த நிலையிலும் எதிர்நோக்கப்படுகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில், அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ள மீன்பிடி நடைமுறைகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களப் பணிப்பாளர் நிமால் ஹெட்டியாராச்சி தெரிவித்ததாவது; புதிய விதிகளை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி, அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் சட்டமாக்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மீன்பிடித் தொழிலில் குறிப்பாக தங்கூசி, சுருக்கு வலைகள், லைலா வலைகள் என்பவற்றைப் பயன்படுத்தக் கூடாது. வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடிப்பது, கரையோரங்களில் இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி மீன்பிடிப்பது போன்ற முறைகள் அரசாங்கத்தினால் தடைசெய்யப்பட்டிருக்கின்றன. இவற்றைப் பயன்படுத்துவதனால் கடல் வளங்கள் அழிக்கப்படுகின்றன. மீன் இனங்கள் அழிகின்றன. இதனால், இவற்றைக் கைக்கொள்கின்ற மீனவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அத்துடன், இலங்கை மீனவர்கள் தங்களிடம் உள்ள 3800 வரையிலான இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி, இலங்கையின் எல்லையைக் கடந்து சென்று, இந்திய, மாலைதீவு கடற் பிரதேசங்களில் மீன்பிடிக்கின்றார்கள். அவ்வாறு செல்வதற்கு அவர்களுக்கு உரிமை கிடையாது. இதனால் பலர் அங்கு வைத்து கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

இதனைத் தடை செய்வதற்கும் சட்டங்கள் கொண்டு வரப்படவுள்ளன.

அதேநேரத்தில் தென்னிலங்கை மீனவர்கள் வடபகுதிக்குச் சென்று மீன்பிடிப்பதன் மூலம் அந்தப் பகுதி வளம் கொள்ளையடிக்கப்படுவதாகக் கூற முடியாது. அந்தந்தப் பிரதேசத்து மீனவர் அமைப்புக்கள் தங்களுக்குள் பேசி இந்தப் பிரச்சினையை தீர்த்துக் கொள்ளலாம்.

உள்ளூர் மீனவர்கள் எல்லை தாண்டுவதைத் தடுக்க முற்படுகின்ற அதேவேளை, எல்லை தாண்டி இலங்கைக்குள் வருகின்ற இந்திய மீனவர்களின் விவகாரம் இரு நாடுகளுக்கிடையில் சம்பந்தப்பட்ட விடயம் என்பதால், உள்ளூர் மீனவர்களுக்கான சட்டங்கள் அதனைத் தடுக்க முடியாது.

இந்திய மீனவர்களின் வருகையானது, இலங்கை - இந்திய நாடுகளின் அன்னியோன்னிய உறவுகள், அரசியல் ரீதியான தொடர்புகள் என்பவற்றுடன் சம்பந்தப்பட்டிருக்கின்றது.

அது இரண்டு நாடுகள் சம்பந்தப்பட்ட பிரச்சினை. அதற்கு அந்த மட்டத்திலேயே தீர்வு காணப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அறவழி போராட்டகுழு செயலர் ஜீவகதாஸ் காலமானார்

(சாவகச்சேரி)



வடபிரதேசத்தில் தன்னார்வ தொண்டு நிறுவனமாக இயங்கி வரும் அறவழிப்போராட்டக் குழுவின் செயலாளர் லயன் க. ஜீவகதாஸ் கடந்த சனிக்கிழமை மாரடைப்பினால் காலமானார். 1979ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட அறவழிப் போராட்டக் குழுவின் ஆரம்பகாலச் செயலாளராக இருந்து இறக்கும் வரையும் பணியாற்றிய ஜீவகதாஸ், அறவழி மழலைகள் கல்விப் பூங்கா, அறவழி நூலக சேவை, பெண்கள், சிறுவர்கள், முதியோர்களுக்கான நலத்திட்டங்கள் என பல்வேறுபட்ட சமூக நலத் திட்டங்களை சர்வதேச - தேசிய தொண்டர் நிறுவனங்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்தி வந்தவர். அவரது சேவையைப் பாராட்டி 2000 ஆம் ஆண்டில் சர்வோதய விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. 1983 ஜூலை கலவரத்தில் பாதிக்கப்பட்ட மக்களை அரவணைத்து கைதடியில் முகாமமைத்து இரண்டு வருடங்களுக்கும் மேலாக பராமரிக்கும் பணியை திறம்பட ஆற்றியவர். சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் உறுப்பினராகவும் இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பல்கலை அனுமதிக்கு புதிய கோட்டாமுறை

(கொழும்பு)

தற்போது பல்கலைக்கழக அனுமதியிலுள்ள மாவட்ட கோட்டாமுறையை மாற்றி கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுக்கு அமைய புதிய முறையை அறிமுகம் செய்வது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது.

1973 மற்றும் 1974 ஆம் ஆண்டுகளில் அறிமுகம் செய்யப்பட்ட தரப்படுத்தலை தமிழ் அரசியல்வாதிகள் முழுமையாக எதிர்த்தனர்.

தற்போது 40 சதவீதத்தினர் திறமை அடிப்படையிலும் 55 சதவீதமானோர் மாவட்ட கோட்டா முறையிலும் 5 சதவீதமானோர் பின்தங்கிய மாவட்ட கோட்டா அடிப்படையிலும் தெரிவாகினர்.

மாவட்ட கோட்டாவானது 1993 இல் நடந்த சனத்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகின்றது. இதனால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள 'கோட்டா' பின்னர் ஏற்பட்ட சனத்தொகை மாற்றத்தை கணக்கில் எடுக்கவில்லை என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகாரியொருவர் தெரிவித்தார். வடக்கில் தற்போது சனத் தொகை பாரிய வீழ்ச்சிகண்டுள்ளது. இருப்பினும், வடக்கு 1993ஆம் ஆண்டு சனத்தொகை அடிப்படையிலான உயரளவு கோட்டாவை அனுபவித்து வருகின்றது. 1993 இல் யாழ்ப்பாணத்தில் 7 இலட்சம் பேர் இருந்தனர். அந்த சனத்தொகை தற்போது 4 இலட்சமாக தற்போது வீழ்ச்சி கண்டுள்ளது. இந்த மாற்றமான நிலைமை கொழும்பிலும் காணப்பட்டுள்ளது.

அதாவது, கொழும்பில் சனத்தொகை பல் வேறு காரணங்களினால் அதிகரித்துள்ளது. ஆனாலும் கொழும்புக்கான பல்கலைக் கழக அனுமதி குறைந்த கோட்டாவையே பெற்றுவருகின்றது.

இது பற்றி உயர்கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிக்கையில்; எந்த வொரு சமூகத்திற்கும் அநீதி இழைக் காத முறையில் புதிய அனுகுமுறை படிப்படியாக அமுல்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

# சவுதிக்கு பணிப்பெண்களை அனுப்பும் பணி நிறுத்தம்

(கொழும்பு)

சவுதி அரேபியாவுக்கு பணிப்பெண்களை அனுப்பும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இலங்கையின் வெளிநாட்டு தொழில்வாய்ப்பு முகவர் நிலையம் இதனை அறிவித்துள்ளது. சவுதி அதிகாரிகளால் உத்தரவாதம் வழங்கப்படும் வரை, அங்கு பணிப்பெண்களை அனுப்புவது இடைநிறுத்தப்படுவதாக முகவர் நிலையம்குறிப்பிட்டுள்ளது. சவுதியில் தற்போது 500,000 இலங்கையர்கள் தொழில் புரிந்து வருகின்றனர்.

இந்தநிலையில் சவுதியில் இலங்கையின் பணிப்பெண்கள் தொடர்ந்தும் சித்திரவதைகளுக்கு உட்பட்டு வருவதன் காரணமாகவே அங்கு புதிய பணிப்பெண்களை அனுப்புவதில்லை என்று முடிவெடுக்கப் பட்டுள்ளதாக வெளிநாட்டு தொழில்வாய்ப்பு முகவர் நிலையம் குறிப்பிட்டுள்ளது

# பிரதேச செயலர்களின் முறைகேடு; கண்டுபிடிக்க புதிய செயற்திட்டம்

(கொழும்பு)

பிரதேச செயலாளர்களின் முறைகேடுகளைக் கண்டுபிடிப்பதற்கான புதிய செயற்றிட்டமொன்றை ஆரம்பிக்க பொது நிருவாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஒருசில பிரதேச செயலாளர்கள் தமது பதவிக்கு பொருந்தாத செயற்பாடுகளில் ஈடுபடுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதென அமைச்சின் செயலாளர் பீ.பி.அபேகோன் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக பிரதேச நிருவாக நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதில் தடைகள் ஏற்படுவதாக அவர் கூறியுள்ளார்.

பிரதேச செயலாளர்களின் முறைகேடுகள் தொடர்பான தகவல்களை பொது நிருவாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் விசாரணைப் பிரிவிடம் சமர்ப்பிக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒழுக்கத்தை மீறும் பிரதேச செயலாளர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ஹெலிமூலம் பி.ரி.ஐ பக்ரீரியா கொழும்பில் தெளிக்க திட்டம்


கொழும்பு நகர்ப் பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக பி.ரி.ஐ.(BTI) பக்ரீரியாவை ஹெலிக்கொப்டர் மூலம் தெளிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். கியூபா தூதுவர் இந்திரா லொஜேசுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது டெங்கு ஒழிப்பு நடவடிக்கை குறித்து கலந்துரையாடப்பட்டது. இக்கலந்துரையாடலின்போதே அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இவ்வாறு குறிப்பிட்டார்.

இத்திட்டம் தொடர்பாக அமைச்சரவையில் அனுமதி கோருவதற்கு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ஓரிரு தினங்களில் அவ்வறிக்கை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். அண்மைக் காலமாக கொழும்பு நகர்ப்பகுதிகளில் நுளம்புகளின் பெருக்கம் அதிகமாக காணப்படுவதுடன், டெங்கு நோய் பரவும் அபாயம் காணப்படுவதாலே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



இலங்கையின் 65 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நெல்லியடி வர்த்தகசங்கத்தின் ஏற்பாட்டில் நெல்லியடி மத்திய பேருந்து தரிப்பிடத்தில் தேசியக் கொடி ஏற்றும் நிகழ்வு இடம் பெற்றது. இந்நிகழ்வில் நெல்லியடி பகுதி வர்த்தகர்கள் கலந்து கொண்டு தேசியக் கொடிக்கு மரியாதை செலுத்துவதையும், தேசியக் கொடியினை பருத்தித்துறை 2ஆம் நிலை கட்டளை அதிகாரி மேஜர் வீரக்கொடி ஏற்றிவைப்பதையும் காணலாம். (18)

# வவுனியா - கப்பாச்சி கிராமத்தில் குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு



(வவுனியா)

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கப்பாச்சி கிராமத்தில் 1995ஆம் ஆண்டு குடியேற்றப்பட்டதிலிருந்து இதுவரையில் அங்கு நீர்ப்பற்றாக்குறை காணப்படுகின்றது.

இதனால் இக்கிராமத்திலுள்ள 88 குடும்பங்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். இது தொடர்பில் அதிகாரிகள் போதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லையெனவும் அக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் கப்பாச்சி கிராம மக்கள் மேலும் தெரிவிக்கையில்,

எமது கிராமம் மிகவும் மேடான பகுதியில் அமைந்துள்ளதால் சாதாரணமாக கிணறுகளை வெட்டி நீரைப் பெற்றுக்கொள்ளமுடியாதுள்ளது. அத்துடன் நிலத்தின் கீழான பகுதி கற்பாறையாகக் காணப்படுவதாலும் நீரை இலகுவில் பெறமுடியாது.

இந்நிலையில், குடியேற்றப்பட்டபோது குழாய்க்கிணறுகள் அமைத்து தரப்பட்டிருந்தன. இக்குழாய்க்கிணறுகள் அமைக்கப்பட்டு நீண்ட காலமான நிலையில் செட்டிகுளம் பிரதேச சபையால் இவை திருத்தம் செய்யப்பட்டன. ஆனாலும் இங்குள்ள 7 குழாய்க்கிணறுகளில் 2 குழாய்க்கிணறுகளை மாத்திரமே தற்போது மக்கள் பயன்படுத்துகின்றனர்.

இவ்வாறான குழாய்க்கிணறுகளிலொன்று மழைக் காலத்தில் மின் தாக்குதலுக்குள்ளாகும் நிலையிலுள்ளது. அருகிலுள்ள மின்சாரசபையின் மின்மாற்றியே இதற்கு பிரதான காரணமாக இருக்குமென நாம் கருதுகின்றோம்.

88 குடும்பங்கள் வசிக்கும் இக்கிராமத்தில் 2 குழாய்க்கிணறுகள் எமக்குப் போதுமானதாக இல்லை. பழுதடைந்த குழாய்க்கிணறுகளை திருத்தம் செய்வதற்காக கிராம மக்கள் பணம் திரட்டி பிரதேசசபையிடம் கொடுத்த நிலையில் அவர்கள் குழாய்க்கிணறுகளை திருத்தம் செய்தனர். இருப்பினும் திருத்தம் செய்யப்பட்ட இக் குழாய்க்கிணறுகளிலிருந்து காற்றும் மண்ணுமே வருகின்றது.

மேலும் குழாய்க்கிணறுகள் சிலவற்றில் நீரை பரிசோதனை செய்துவிட்டு கிருமி இருப்பதாக பிரதேசசபையினர் கூறிவிட்டுச் சென்றனர்.

மழை நீரைச் சேகரிக்கும் திட்டத்தை அரசசார்பற்ற நிறுவனம் சில வீடுகளுக்கு செயற்படுத்திக் கொடுத்திருந்தாலும் அதனை குடிப்பதற்கு பயன்படுத்த முடியாதுள்ளது. அத்துடன் மழைவீழ்ச்சி குறைவான நிலையில் அதனுள் நீரையும் சேகரிக்க இயலாமலுள்ளது. இந்நிலையில் நாம் நீர்த்தேவைக்கு பெரும் கஷ்டத்தை எதிர்நோக்குகின்றோம்.

இது இவ்வாறிருக்க, பிரதேசசபையால் குழாய் நீர்த்திட்டம் செய்து தருவதாகக் கூறியபோதிலும், எவ்வித பலனும் கிடைக்கவில்லை என்றனர்.

இது தொடர்பில் செட்டிகுளம் பிரதேசசபையின் தலைவர் தெரிவிக்கையில்,

கப்பாச்சி கிராமத்தில் நிலவுகின்ற நீர்ப்பற்றாக் குறை தொடர்பில் நாம் பல இடங்களுக்கும் திட்ட முன்மொழிவுகளை கொடுத்துள்ளோம். மேலும் முகத்தான்குளத்திலிருந்து குழாய் நீர் மூலம் நீரை விநியோகிக்கும் திட்டத்திற்கு ஏறக்குறைய 50 இலட்சம் ரூபாவரை தேவைப்படுகின்றது. இவ்வளவு பெரிய நிதி எமது சபையிடம் இல்லை.

இக்கிராமத்திற்கு நீர்த்தேவை உண்டு. இதற்காக நாம் தற்போது இங்குள்ள குழாய்க் கிணறுகளை துப்புரவு செய்கின்றோம். எனினும் விரைவில் நீர் வழங்குவதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்வோமெனக் கூறினார்.

# மெகாலைன் இணைப்பு கைதடிக்கு விஸ்தரிப்பு

(கைதடி)

கைதடி வடக்கு, கிழக்கு, மத்தி பிரதேசங்களில் மெகாலைன் இணைப்புத் தொலைபேசியை வழங்குவதற்கான நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

தற்போது தொலைபேசிக் கம்பங்களை நடுவதற்கு கிடங்கு தோண்டும் பணிகள் நடைபெற்ற வருகிறது.

இப் பிரதேச மக்கள் தொலைபேசி இணைப்புக் கோரி விண்ணப்பங்கள் சமர்ப்பித்து பல வருடங்களாகியும் தமக்கு இணைப்புத் தரப்படவில்லையென கூறியதன் பேரிலேயே தற்போது இவ் வேலைகள் நடைபெற்று வருவதாக ரெலிக்கொம் அதிகாரி ஒருவர் கூறினார்.

ஏற்கனவே கைதடிச் சந்திப் பகுதியை அண்மித்த பிரதேசங்களில் ரெலிக்கொம் நிறுவனத்தால் மெகாலைன் இணைப்புக்கள் வழங்கப்பட்ட நிலையில், இப்பிரதேச மக்களின் கோரிக்கைக் கேற்ப இவ் இணைப்புக்கள் வழங்கப்படுகின்றன.

(90)

# முதியோர்களின் வாழ்வாதாரம் குறித்தும் தொண்டு நிறுவனங்கள் உதவவேண்டும்

## - நண்பர்கள் நற்பணிமன்றத் தலைவர்

(கிளிநொச்சி)

உறவுகளால் கைவிடப்பட்ட முதியோரின் வாழ்வாதார தேவைகளைப் பூர்த்திசெய்ய மனிதநேயப்பண்புள்ள அனைவரும் முன்வரவேண்டும் என நண்பர்கள் நற்பணி மன்றத்தலைவர் சி. ஜெயதீபன் (கௌதமன்) தெரிவித்துள்ளார்.

வட்டக்கச்சி-மாயவனூர் பகுதியில் பிரத்தியேகமாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் நண்பர்கள் நற்பணி மன்றத்தின் நிர்வாக ஒன்று கூடலும், ஊடகப்பிரிவை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வும் இளம்புயல் விளையாட்டுக் கழக தலைவர் ஜெ.சாந்தகுமார் (சாந்தன்) தலைமையில் நடைபெற்றது.

இதன்போது. கலந்து கொண்டு உறையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

முதியோர்கள், வயோதிப விதவைகள், விசேட தேவை உடையோரில் பலர் தமக்கான உதவிகள் கிடைக்கப்பெறாதா என எதிர்பார்த்து இருக்கின்றனர். எனினும் அவர்களை அரச அதிகாரிகளோ உதவி வழங்கும் நிறுவனங்களோ கண்டு கொள்வதில்லை.

இதனால் தன்னார்வத் தொண்டு அமைப்பான நாம் அவர்களின் இல்லங்களை நாடிச் சென்று உதவி வழங்கும் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளோம். கூடுதலான தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் விதவைகள் மற்றும் விசேட தேவை உடையோருககான உதவிகளை வழங்கி வருகின்ற போதும், இளவயதுடையோரே கவனத்திலெடுக்கப்பட்டு அவர்களுக்கான வாழ்வாதார செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

தெரிவு செய்யப்பட்ட முதியோருக்கான உதவிக் கொடுப்பனவு வழங்கும் செயற்பாடுகள் விரைவில் எம்மால் முன்னெடுக்கப்படவுள்ளது. எமது உறுப்பினர்களிடையே சேகரிக்கப்பட்ட பணத்திலிருந்து இக்கொடுப்பனவை வழங்கவுள்ளோம்.

இதேவேளை நாம் ஆற்றுகின்ற பணிக்கு மனித நேயம் உள்ள உள்ளங்களிடம் இருந்தும், சர்வதேசத்தில் வாழ்கின்ற தமிழ் உறவுகளிடம் இருந்தும் உதவிகளையும்,பேராதரவையும் எதிர்பார்க்கிறோம் என அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து நற்பணிமன்ற ஊடகப்பிரிவு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டதுடன், 'உதவும் கரங்கள்' எனும் மாதாந்த சஞ்சிகைக்கான ஆசிரியர் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. இதேவேளை ஊடகப்பிரிவால் செய்தி விபரணங்களை தாங்கிய காலாண்டுக்கான காணொளிகளும் வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(69)

# பதிவிறக்கப் பெட்டகம்

நைஜீரியாவின் காட்டுப் பகுதிகளில் ஒரு ஜப்பானியனும், அமெரிக்கனும் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். அப்போது பசியோடு இருக்கும் சிங்கம் ஒன்று அவர்களை நோக்கிப் பாய்ந்து வந்தது.

உடனே ஜப்பானியன் தனது காலிலிருந்த செருப்பைக் கழட்டிவிட்டு கான்வாஸ் சப்பாத்தை அவசர அவசரமாக மாட்ட ஆரம்பித்தான்.

"கான்வாஸ் சப்பாத்தை மாட்டிக் கொண்டால் மட்டும் உன்னால், சிங்கத்தை விட வேகமாக ஒடிவிட முடியுமா?" என்றான் அமெரிக்கன்.

அதற்கு ஜப்பானியன் சொன்னான்:

"என்னுடைய நோக்கம், சிங்கத்தைவிட வேகமாக ஒடுவது அல்ல. உன்னைவிட வேகமாக ஓடுவதுதான்"

*** *** *** ***

"தம்பி இலங்கையில் மகாவலி கங்கை ஓடுது, களனி கங்கை ஒடுது, இந்தியாவில் காவிரி ஆறு ஓடுது, வைகை ஆறு ஒடுது, தென் அமெரிக்காவில் என்ன ஆறு ஓடுது?"

"போங்க சேர்... ஈஸியான கேள்விக்கு நீங்களே பதில் சொல்லிவிட்டு, எனக்கு மட்டும் கஷ்டமான கேள்வியைக் கொடுக்கறீங்களே..."

*** *** *** ***

ஆங்கிலப் பேரறிஞர் ஜோன்ஸன், ஒரு பெண்ணை காதலித்தார். அவளிடம், "என் குடும்பம் கவுரவமான குடும்பம் அல்ல. என் சித்தப்பா, ஒரு கொலைக் குற்றத்திற்காக தூக்குத் தண்டனை அடைந்தார்...' என்றார்.

அதற்கு அவரது காதலி, "என்னுடைய குடும்பத்தில் யாரும் துக்கிலிடப்பட்டதில்லை. ஆனால், தூக்கிலிடத் தக்கவர்கள் ஐம்பது பேருக்குக் குறையாமல் இருக்கின்றனர்...' என்றாள்.

*** *** *** ***

மனைவி இறந்த சிறிதுநாள் கழித்து ஒருவர் இன்னொரு திருமணம் செய்து கொண்டார். தன் வீட்டுக்கு வரும் நண்பர்களிடமும், உறவினர்களிடமும் புதிய மனைவியை "என் இரண்டாவது மனைவி" என்று அறிமுகப் படுத்தி வந்தார். இது அவருடைய மனைவிக்குப் பிடிக்கவில்லை. தன்னை அவ்வாறு அறிமுகப்படுத்த வேண்டாம் என்று பலமுறை கூறியும் அவர் கேட்கவில்லை. "என்னை நன்றாகத் தெரிந்தவர்கள், என்னுடைய உறவினர்கள் வரும் போது வேறு மாதிரி நான் எப்படி உன்னை அறிமுகப்படுத்த முடியும்?" என்று கேட்டார் அவர்.

ஒருமுறை அந்தப் பெண்ணின் உறவினர்கள் வீட்டுக்கு வந்திருந்தனர். அவர்களிடம் தனது கணவனை அவள் அறிமுகப்படுத்தினாள்:

"இவர்தான் என் முதல் கணவர்"

*** *** *** ***

"இங்கிலீஷ்ல நான் சரியான வீக்கா இருக்கிறதாய் ரீச்சர் சொல்றாடா"

"அப்பிடியா... தமிழ்லே என்ன சொன்னா?"

"பலவீனமா இருக்கிறேன்னு சொன்னா"

*** *** *** ***

பள்ளி மாணவர்களிடம் உரை நிகழ்த்த ஓர் அறிஞர் வந்திருந்தார். வந்தவர் கொஞ்சம் கோபக்காரர். மாணவர்களைப் பார்த்து, "நான் இப்போது எதைப் பற்றிப் பேசப் போகிறேன் தெரியுமா?" என்று கேட்டார்.

மாணவர்கள் அனைவரும், "தெரியாது" என்றனர். அதற்கு அவர், "தெரியாதவர்களிடம் பேசி ஒன்றும் ஆகப்போவதில்லை" என்று கோபித்துக் கொண்டு போய்விட்டார். பள்ளிக்கூட நிர்வாகம் அவரைக் கெஞ்சிக் கூத்தாடி அழைத்து வந்தது. இந்தமுறை அவர் கேட்டால், "தெரியும்" என்று சொல்லும்படி ஏற்பாடாகியிருந்தது.

வந்தவர், "இப்போது நான் எதைப் பற்றிப் பேசப் போகிறேன் தெரியுமா?" என்று கேட்க, எல்லாரும் "தெரியும்" என்றனர்.

"தெரிந்தவர்களிடம் நான் எதற்காகப் பேச வேண்டும்?" என்று மறுபடியும் கோபித்துக் கொண்டு போய்விட்டார்.

மறுபடியும் பாடசாலை நிர்வாகம் அவரிடம் கெஞ்சி அழைத்து வந்தது. இந்தமுறை பாதி மாணவர்கள், "தெரியும்" என்றும், பாதி மாணவர்கள், "தெரியாது" என்றும் சொல்ல முடிவெடுத்து, அப்படியே சொன்னார்கள்.

மாணவர்களைப் பார்த்து அறிஞர் சொன்னார்: "தெரியாதவர்கள், தெரிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்" என்றுவிட்டுக் கிளம்பினார்.

# க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான விஞ்ஞானபாட விசேட செயற்றிட்டம்

ஆசிரியர் : S.T.ஜனார்த்தனன் (Bsc)

**சென்றவாரத் தொடர்ச்சி.....**

அலுமினியம் ஐதரொட்சைட்டு ஈரியல்புடையது ஆகும். அமிலங்களுடனும், காரங்களினுடனும் தாக்கம் உற்று உப்புக்களையும் நீரையும் தரும்.

$$\underset{(s)}{Al(OH)_3} + \underset{(aq)}{3HCl} \rightarrow \underset{(aq)}{AlCl} + 3H_2O$$

$$\underset{(s)}{Al(OH)_3} + \underset{(aq)}{NaOH} \rightarrow \underset{(aq)}{NaAl(OH)_4}$$

**தொகுதி வழியே அமிலவியல்பு குறைவதற்கான விளக்கம்**

முதலாம் தொகுதியிலும் இரண்டாம் தொகுதியிலும் மூலவியல்புள்ள ஐதரொட்சைட்டுக்களையும் ஒட்சைட்டுக்களையும் சந்தித்தோம். தொகுதி வழியே இம் மூலவியல்பு அதிகரிக்கின்றது. ஆனால் மூன்றாம் தொகுதியில் போரனின் இதே சேர்வைகள் அமிலவியல்புடையதாகவும் அலுமினியத்திலும் கல்லியம் ஆகியவற்றில் ஈரியல்புள்ளதாயும் ஏனைய இரு மூலகங்களும் மூலவியல்புடையவையாக இருப்பதையும் அவதானிக்கின்றோம்.

இததோற்றப்பாட்டுக்கு காரணம் மூன்றாவது வலுவளவு இலத்திரன் ஒன்று இறுதி ஒட்டில் சேர்ந்ததால் ஏற்பட்ட திரிபாகும். உயர்ந்த ஏற்றமுள்ள நேர் அயன்களை நீர்மூலக் கூறுகளில் உள்ள இலத்திரன்களை அதிக வலுவுடன் கவர்வதால், நீரில் உள்ள O - H பிணைப்புக்கள் இலகுவில் உடையக் கூடியதாகின்றன. இதனால் $H^+$ அயன்கள் விடுவிக்கப்படும். ஆகவே கரைசல் அமிலவியல்பைக் காட்டும். சிறிய அணுக்கள் உருவாக்கக்கூடிய அயன்களுக்கு இவ்வாற்றல் அதிகமாகும். மேலே கூறிய காரணத்தால் $B^{3+}$ அயன் (உண்மையில் உருவாவதில்லை) ஒன்று நீரில் இருப்பதாகக் கொண்டால் அது $B(OH)_3$ அதாவது போரிக்கமிலம் ($H_3BO_3$) ஆகுமாறும், $H^+$ அயன்கள் விடுவிக்கப்படும். இதனால் $H_3BO_3$ யும் $B_2O_3$ யும் அமிலவியல்பைக் காட்டுகின்றன. $Al^{3+}$, $Ga^{3+}$ ஆகிய அயன்கள் பெரிதாயிருப்பதால் நீர் மூலக் கூறுகளிலிருந்து H+ அயன்களை விடுவிக்கும் ஆற்றல் குறைகிறது. இவை ஈரியல்பைக் காட்டுகின்றன. $In^{3+}$, $Gl^{3+}$ ஆகிய அயன்கள் மிகப் பெரியவை. இதனால் இவற்றால் நீருடன் இடைத்தாக்கம் புரியம் ஆற்றல் குறையும். இவற்றின் ஐதரொட்சைட்டுகள் மூலவியல்பைக் காட்டும். அடுத்து வரும் தொகுதிகளிலும் இக் (மூலவியல்பு அதிகரிக்கும்) கோலத்தைக் காணலாம்.

**அலுமினியம் ஐதரைட்டு** AlH

இலிதியம் ஐதரைட்டுடன், மிகையான, ஈதரில் கரைத்து அலுமினியம் குளோரைட்டைச் சேர்த்தால், அலுமினியம் ஐதரைட்டு வெண்நிற வீழ்படிவாகக் கிடைக்கின்றது.

$$3Li^+H^- + AlCl_3 \rightarrow AlH_3\downarrow + 3Li^+Cl^-$$

இதன் அமைப்பு அறியப்படவில்லை. இது ஓர பல்பகுதியமாக காணப்படும். இலிதியம் ஐதரைட்டு மேலதிகமாக இருந்தால் இலிதியம் அலுமினியம் ஐதரைட்டு உண்டாகும். இது ஒரு உபயோகமான சேர்வையாகும்.

$$4Li^+H^- + AlCl_3 \quad Li+(AlH)_4)^- + 3Li + Cl^-$$

**பொதுவியல்புகள்**

1) போரன் அலோகம் மற்றைய மூலகங்கள் பளபளப்பான வெள்ளை நிறமான உலோகங்கள் ஆகும்.

2) ஒட்சியேற்ற நிலை +3, கூட்டத்தின் வழியே +1 என்ற ஒட்சியேற்ற நிலையும் வலுப்பெறுகின்றது. தல்லியத்தில் +1 என்ற ஒட்சியேற்ற நிலையுடன் வலுவான சேர்வைகள் உண்டு.

3) **பங்கீட்டு வலுவியல்பு :** போரன் பங்கீட்டு வலுச்சேர்வைகளை மட்டுமே தருகின்றது. அலுமினியம் அதன் ஏலைட்டுக்களில் பங்கீட்டு வலுச் சேர்வைகளைத் தரும். மற்றவை எல்லாம் அயன் சேர்வைகளை உருவாக்கும்.

4) தொழிற்பாடு: பளிங்குருவற்ற போரன் அதிக தொழிற்பாடுடையது. அது வளியில் எரித்தால் ஒட்சைட்டையும், நைத்திரட்டையும் அலசன்களுடன் அலைட்டுக்களையும் தரும். அது நைத்திரிக்கமிலத்தையும், சல்பூரிக்கமிலத்தையும், தாழ்த்தும் காரங்களிலிருந்து ஐதரசனை விடுவிக்கும்.

$$B + 3HNO_3 \xrightarrow[\Delta]{} H_3BO_3 + 3NO_2\uparrow$$

$$2B + 3H_2SO_4 \xrightarrow[\Delta]{} 2H_3BO_3 + 3SO_2\uparrow$$

$$2B + OH^- \xrightarrow[\Delta]{} 2BO_3^{3-} + H_2\uparrow$$

பளிங்கரு போரன் ஒப்பீட்டளவில் தொழிற்பாடு அற்றதாகும். தாக்கங்களில் ஈடுபடும் அலுமினியமும், மேற்கூறிய அலுமினியம் வளியில் அதன் மேற்பரப்பில ஒரு ஒட்சைட்டுப் படலம் உண்டாவதால் மேலும் தாக்கமடையாமல் உறுதியாகவிருக்கிறது. காப்புப் படலம் நீக்கப்பட்டால் அதிக தாக்க வீதம் உடையதாகும். அடுத்து வரும் 3 உலோகங்களிலும் தல்லியம் தாக்க வீதம் கூடியதாகும்.

5) **மின்நேர்த்தன்மை :** போரனில் இருந்து அலுமினியம் வரை அதிகரித்து, பின்பு அலுமினியத்தில் இருந்து தலியம் வரை குறைகிறது. இத் தொகுதியில் நாம் S தொகுப்பு மூலகங்களின் தொகுதிகளில் அவதானித்த பிரதானமான கோலங்களையும் இங்கும் அவதானிக்கலாம்.

1. ஒரு கூட்டத்தின் வழியே அணு ஆரை அதிகரிப்பதால் அயனாக்கல் சக்தி குறையும். ஆகவே இதன் விளைவாக கூட்டத்தின் வழியே உலோகவியல்பு அதிகரித்தல்.

2) தொகுதியின் வழியே தொழிற்பாடு அதிகரித்தல்.

3) முதலாவது மூலகத்தின் அணு சிறிதாக இருப்பதால் அது பங்கீட்டு வலுப்பிணைப்புகளை ஏற்படுத்தும் ஆற்றலைப் பெறும். இப் பண்பு இலிதியத்தில் சிறிதாகக் காணப்பட்டு பெரிலியத்தில் அதிகமாகி, போரனில் மிக அதிகமாகிறது.

பொதுவாகச் சொன்னால் 1 ஆம் தொகுதி மூலகங்களுக்கும் அதே ஆவர்த்தனத்தில் இருக்கும் தொகுதி மூலகங்களுக்கும் எவ்வகைத் தொடர்பு இருந்ததோ, அதே தொடர்பு 2 ஆம் தொகுதிக்கும் 3 ஆம் தொகுதிக்கும் உண்டு. மூன்றாவது வலுவளவு இலத்திரனும் இறுதி ஒட்டில் சேர்ந்து வருவதால், இயல்புகளில் சில திரிபுகளை அவதானித்துள்ளோம்.

**அலுமினியம் சல்பேற்று** $Al_2(SO_4)_3$

அலுமினியம் சல்பேற்று இயற்கையாகக் காணப்படும் வெண்ணிறப் பதார்த்தமாகும். இதை நீரேறிய பளிங்குகளாக பெற்றுக்கொள்ளலாம். பளிங்குகள் நீரகற்றிப் பொடியாகும் இயல்புடையவையாகும். நீர்க்கக்கிப் பொடியாதல் என்பது பளிங்குள் நீரை (முற்றாக அல்லது பகுதியாக) இழந்து தூளாக மாறுவதாகும். (சோடியம் காபனேற்றுக்கும் இவ்வியல்பு உண்டு) அலுமினிய ஐதரொட்சைட்டை சல்பூரிக்கமிலத்தில் கரைத்து இப்பதார்த்தத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

$$2Al(OH)_3 + 3H_2SO_4 \rightarrow Al_2(SO_4)_3 + 6H_2O$$

இவ்வியல்பு நுரைதீயணை கருவிகளில் உபயோகப்படுகின்றது. இப் பதார்த்தம் சோடியம் ஐதரசன் காபனேற்றுக் கரைசலுடன் தாக்கமுறும்போது காபனீரொட்சைட்டு வாயு விடுவிக்கப்பட்டு தீயணைக்க உதவும்.

அலுமினியம் சல்பேற்றும் பொற்றாசியம் சல்பேற்றும் கொண்ட கலவை நீரில் கரைத்து செறிவாக்கப்பட்டால் ஒரு இரட்டை உப்பு பளிங்குகளாக வேறாகும். இது $KAl(SO_4)_2\ 12H_2O$ என்ற அமைப்பை உடையது. இதை சீனாக்காரம் அல்லது படிகாரம் என்றழைப்பர். படிகாரங்கள் என்பவை $XY(SO_4)_2 - 12H_2O$ அல்லது $X_2SO_4\ Y_2(SO_4)_2$ என்பது ஒரு வலுவளவுள்ள மூலகமும், Y மூலவலுவளவுள்ள மூலகமும் ஆகும்.

## நாலாம் தொகுதி மூலகங்கள்

### பொது

இத் தொகுதியில் உள்ள மூலகங்கள் இறுதி ஒட்டில் $ns^2np^2$ என்ற அமைப்பை உடையவையாகும். இங்கே n என்பது ஆவர்த்தனத்தின் எண்ணிக்கையாகும். இதில் அடங்கும் மூலகங்கள் ஆவன காபன் C, சிலிக்கன் Si, ஜேர்மனியம் Ge, வெள்ளீயம் Sn, ஈயம் Pb ஆகும்.

காபன் ஒரு மாதிரி அலோகமாகும். சிலிக்கனும், ஜேர்மானியமும், அலோகங்களாகும். ஜேர்மானியத்தை உலோகப்போலி என்றும் கருதலாம். இவற்றைத் தொடர்ந்து வரும் வெள்ளீயம், ஈயம் ஆகியவை பலவீனமான உலோகங்களாகும். இத் தொகுதியின் வழியே அணுவின் பருமன் அதிகரிப்பதால் அயனாக்கற்சத்தி குறையும் என்பதற்கேற்ப உலோகவியல்பு அதிகரிக்கின்றது. முதல் மூன்று மூலகங்களும் குறிப்பாக காபனும் சிலிக்கனும் அவற்றின் சேர்வைகளில் பங்கீட்டு வலுப்பிணைப்புகளில் ஈடுபடுகின்றன. வெள்ளீயமும் ஈயமும் நேர் அயன்களை உருவாக்கும். முதல் மூன்று மூலகங்களும் உயர் உருகு நிலையுடையவை. இறுதி இரண்டு மூலகங்களும் தாழ்ந்த உருகு நிலையுடையவை.

**4 ஆம் தொகுதி மூலகங்களின் சிலவியல்புகள்**

| மூலகம் | Z | இலத்திரன் நிலையமைப்பு | உருகு நிலை °C | கொதி நிலை °C | அயனுக் கற்சத்தி e.v. | மின் எதிர்மை |
|---|---|---|---|---|---|---|
| C | 7 | $[He]\ 2s^2, 2p^3$ | -210·0 | -195·8 | 14·5 | 3·0 |
| Si | 15 | $[He]\ 3s^2, 3p^3$ | 44·1 | 2·80 | 11·0 | 2·1 |
| Ge | 33 | $[Ar]\ 3d^{10}, 4s^2, 4p^3$ | பதங்க | மாகும் | 10· | 2·0 |
| Sn | 51 | $[Kr]\ 4d^{10}, 5s^2, 5p^3$ | 631 | 1380 | 8·6 | 1·9 |
| Pb | 83 | $[Xe]\ 4f^{14}, 5d^{10}, 6s^2, 6p^3$ | 271 | 1500 | 8 | 1·9 |

காபனீரொட்சைட்டு அதிக தொழிற்பாடுடைய சேர்வையல்ல. வளி சில இரசாயனத் தாக்கங்களின்போது பங்குபற்றக் கூடியதாயின் இதைத் தவிர்க்க வளிக்குப் பதிலாக காபனீரொட்சைட்டை உபயோகிப்பர்.

உதாரணம் :- குரோமியம் II உப்புக்களைத் தயாரித்தல், ஆனால் K, Mg போன்ற தொழிற்பாடு கூடிய மூலகங்கள் காபனீரொட்சைட்டில் தொடர்ந்து எரியும்.

$$2Mg + CO_2 \rightarrow 2MgO + C$$
$$4K + 2CO_2 \rightarrow 2K_2CO_2 + C$$

காபனீரொட்சைட்டை உலோக ஐதரொட்சைட்டுக் கரைசல்களுக்குள் செலுத்தினால் அவற்றின் காபனேற்றுக்களும் (வீழ்படிவாகக் கிடைக்கலாம்.) உதாரணம் :- $MgCO_3$, $CaCO_3$ மேலதிகமாகச் செலுத்தினால் நீரில் கரையும் இயல்புடைய ஐதரசன் காபனேற்றுக்களும் உண்டாகலாம்.

$$CO_2 + Ca(OH)_2 \rightarrow CaCO_3 \downarrow + H_2O$$
$$CaCO_3 + H_2O + CO_2 \rightarrow Ca^{2}+ (HCO_3)^{1-}$$

இது காபனீரொட்சைட்டின் அமிலவியல்பை எடுத்துக் காட்டுகிறது. காபனீரொட்சைட்டு அமிலங்களுடன் தாக்கமுறாதபடியால் அதற்கு மூலவியல்பு இல்லை என்றே சொல்லலாம்.

காபனீரொட்சைட்டு நீரில் கரையும்போது சிறிதளவில் காபோனிக்கமிலம் உண்டாகின்ற தாக்கமும் நிகழ்கிறது. இது ஒரு மென்னமிலமாகும்.

$$CO_2 + H_2O \leftrightarrows H_2CO_3$$

**காபனீரொட்சைட்டுக்கான சோதனைகள்**

1) எரியும் தனற் குச்சியை அணைத்துவிடும்.
2) சுண்ணாம்பு நீரைப் பால் நிறமாக்கும். மேலதிகமாகச் செலுத்தினால் இந்நிறம் மறைந்துவிடும்.

காபனீர் ஒட்சைட்டின் அமைப்பு இத் தொகுதியைச் சேர்ந்த மற்ற மூலகங்களில் ஒட்சைட்டுகளைப் போலல்லாது இதன் மூலக்கூறுகள் நேர்கோட்டு அமைப்புடையவையாகும். $O = C^{o} = O$ இது பின்வரும் பரிவமைப்புகளைக் கொண்டிருக்கலாம்.

$$\overset{+}{O} \equiv C - \overset{-}{O} \rightarrow \leftarrow O = C = O \rightarrow \leftarrow \overset{-}{O}\, C \equiv \overset{+}{O}$$

(a) (b) (c)

**காபனோர் ஒட்சைட்டு (CO)**

காபனின் நிறைவற்ற தகனத்தினால் உண்டாகும். ஆய்வுகூடத்தில் (1) ஒட்சாலிக் கமிலத்தை அல்லது ஒட்சலேற்றுக்களைச் செறிந்த சல்பூரிக்கமிலத்துடன் வெப்பமேற்றுவதால் பெற்றுக் கொள்ளலாம்.

$$\begin{matrix} COOH \\ | \\ COOH \end{matrix} \xrightarrow{\text{செறிந்த } H_2SO_4} CO_2 + CO + H_2O$$

ii) போமிக்கமிலம் அல்லது சோடியம் போமேற்றைச் செறிந்த சல்பூரிக் கமிலத்துடன் வெப்பமேற்றிப் பெற்றுக்கொள்ளலாம்.

$$H\,COOH \xrightarrow{\text{செறி. } H_2SO_4} CO + H_2O$$

இத் தாக்கங்களில் செறிந்த சல்பூரிக்கமிலம் ஒரு நீரகற்றும் கருவியாக தொழிற்படுகிறது.

காபனோரொட்சைட்டு நிறமற்ற மணமற்ற வாயுவாகும். இது வளியில் நீல நிறச் சுவாலையுடன் எரியும். $2CO + O_2 = 2CO_2$ . இது அபாயகரமான நச்சுத்தன்மை வாய்ந்தது. குருதியில் உள்ள ஈமோகுளோபின் என்ற சாயத்துடன் சேர்ந்து அது ஒட்சிசனுடன் தாக்கமுறுவதை தடுக்கின்றது. இதனால் சுவாசித்தல் தடைப்பட்டு மரணம் சம்பவிக்கும்.

இவ்வாறு நீரில் அரிதிற் கரையும் ஏறக்குறைய வளியின் அடர்த்தியை உடையது.

இது பாசிச் சாயத்தாளுக்கு நடுநிலையானது. இது ஒரு சிறந்த தாழ்த்தும் கருவியாகும்.

**உதாரணம்** :-

$$Fe_2O_3 + 3CO \xrightarrow{600 - 900\ C^{0}} 2Fe + 3CO_2$$

இது பல பதார்த்தங்களுடன் கூட்டற் தாக்கங்களில் ஈடுபடும்.

1) காபனோர் ஒட்சைட்டு சூரிய ஒளியில் குளோரினுடன் சேர்ந்து காபனைல் குளோரைட்டைத் தரும்.

$$CO + Cl_2 \longrightarrow COCl_2$$

ii) காபனோர் ஒட்சைட்டும், கந்தக ஆவியையும் சூடான ஒரு குழாயினூடாகச் செலுத்தினால் காபனைல் சல்பைட்டு COS உண்டாகும்.

காபனோர் ஒட்சைட்டு ஒரு அமில நீரிலியல்ல (நீருடன் அமிலங்களைத் தராது. ஆனால் உயர் அமுக்கத்தில் உருக்கிய சோடியம் ஐதரொட்சைட்டுடன் தாக்கமுறும்போது சோடியம் போமேற்று உண்டாகின்றது.

$$Na^{+} OH^{-} + CO \longrightarrow HCOO^{-} Na^{+}$$

இது ஐதரசனுடன் உயர் அமுக்கத்திலும் நாக ஒட்சைட்டு - குறோமிக் ஒட்சைட்டு ஊக்கி முன்னிலையிலும் தாக்கத்தில் ஈடுபட்டு மெதனோல் என்னும் அற்ககோலைத் தரும்.

$$CO + 2H_2 \xrightarrow{ZnO / Cr_2O_3} CH_2\ OH$$


இது பல தாண்டல் மூலகங்களுடன் தாக்கமுற்று ஆவிப்பறப்பான காபனைல்கள் என்னும் சேர்வைகளைத் தரும்.

**உதாரணம்** :-

$$Ni + 4CO \xrightarrow{90^{0}C} Ni(CO)_4$$

காபனோர் ஒட்சைட்டை அமோனியா சேர்குப்பிரசக் குளோரைட்டுச் சேர்வை உறிஞ்சும். $Cu\,Cl\,CO.\,2H_2O$ உண்டாகும். இது அமோனியாசேர் வெள்ளி நைத்திரேற்றை கரிய நிற வெள்ளியாக தாழ்த்தும். இது காபனோர் ஒட்சைட்டுக்கு ஒரு சோதனையாகும்.

காபனோர் ஒட்சைட்டு பின்வரும் பரிவமைப்புக்களைக் கொண்ட அமைப்புடையது.



**நாலாம் தொகுதி மூலகங்களின் ஒட்சைட்டுகள்**

MO என்ற அமைப்பை உடைய ஓரொட்சைட்டையும் $MO_2$ என்ற அமைப்பை உடைய ஈரொட்சைட்டையும் IV ஆம் தொகுதி மூலகங்கள் தரும்.

உதாரணம் :- காபனோர் ஒட்சைட்டு CO : காபனீர்ரொட்சைட்டு $CO_2$
சிலிக்கனோர் ஒட்சைட்டு SiO : சிலிகனீரொட்சைட்டு $SiO_2$ வெள்ளீயவோர் ஒட்சைட்டு SnO : வெள்ளீயவீரொட்சைட்டு $SnO_2$

**ஈயவோர் ஒட்சைட்டு** PbO : **ஈயவீரொட்சைட்டு** $PbO_2$

ஓரொட்சைட்டுக்களின் உறுதிப்பாடும் மூலவியல்பும் மேல் இருந்து கீழேவர அதிகரிக்கின்றது. ஈயவோரொட்சைட்டே மிகவும் உறுதியானது. அணுவின் பருமன் அதிகரிப்பதால் மூலவியல்பு அதிகரிக்கும் என்பது நாம் எதிர்பார்க்க வேண்டியதாகும். ஆனால் ஒவ்வொரு ஒட்சைட்டும் உண்மையில் மூலவியல்புடையது என்று சொல்வதற்கில்லை. ஈயவோர் ஒட்சைட்டு கூட ஈரியல்புடைய ஒட்சைட்டாகும்.

**உதாரணம்** :- $PbO + 2HNO_3 = Pb(NO_3)_2 + H_2O$

$$PbO + 2NaOH \rightarrow Na_2PbO_2 + H_2O$$

சோடியம் பிளம்பேற்

காபனோரொட்சைட்டு அசாதாரண இயல்புகள் பல உடையது. ஆனால் அதன் சோடியம் ஐதரொட்சைட்டுச் சேர்வை அது ஒரு அமில ஒட்சைட்டு என்பதைக் காட்டுகிறது. ஒரு தொகுதியில் முதல் மூலகம் அசாதரணவியல்புகளைக் காட்டும் என்பது நாம் ஒவ்வொரு தொகுதியிலும் அவதானித்த ஒன்றாகும்.

ஈர்ஒட்சைட்டுகளின் இயல்பு கூடுதலாக அமிலவியல்பை எடுத்துக் காட்டும். ஆனால் கூட்டத்தின் வழியே இவ் அமில இயல்பு குறைந்து கொண்டு போகிறது. காபனீரொட்சைட்டு அமில ஒட்சைட்டு என்று அறிந்தோம். சிலிக்கனீரொட்சைட்டு அமில ஒட்சைட்டாகும். இது நீருடன் தாக்கமுற்று அமிலத்தை காபனீரொட்சைட்டைப் போலத் தருவதில்லை. ஆனால் காரங்களுடன் உருக்கினால் சிலிக்கேற்றுக்களைத் தரும். சாதாரணமாகவும் $SiO_2$

$$SiO_2 + 2Na\,OH \rightarrow Na_2\,SiO_3 + H_2O$$

சோடியம் சிலிக்கேற்று

காரங்களில் மந்தமாகக் கரையும். இத்தாக்கம் ஒரு அமிலவியல்புக்கான தாக்கமாகும். கார சிலிக்கேற்றுகள் நீரில் கரையும் இயல்புடையவை. சோடியம் சிலிக்கேற்று நீர்க்கண்ணாடி (water Glass) என்று அழைக்கப்படும். தூய வெண்மயல் சிலிக்கன் ஈரொட்சைட்டாகும். ஈரொட்சைட்டுகளின் உறுதிப்பாடு தொகுதி வழியே குறைகின்றது. உதாரணமாக $PbO_2$ விலும் PbO உறுதிகூடியதாகும். ஈயத்தில் $Pb_3O_4$ செவ்வீய ஒட்சைட்டு என்னும் சேர்வையும் உண்டாகும். இச்சேர்வை அரிப்பெதிர்ப்பு பூச்சுகளில் உபயோகிக்கப்படுகிறது.

$SnO_2$, $PbO_2$ ஆகிய ஒட்சைட்டுகள் ஈரியல்புடைப்வையாகும். $GeO_2$ ஓரளவு அமிலவியல்புடையது.

**நாலாம் தொகுதி மூலகங்களின் ஐதரைட்டுகள்**

காபனின் ஐதரைட்டுகள் ஐதரோ காபன்கள் ஆகும். நிரம்பிய ஐதரோ காபன்கள் மிகவும் உறுதியான சேர்வைகள். சிலிக்கன் என்ற மூலகமும் ஐதரைட்டுகளை உருவாக்கும். இவற்றை ஐதரொசிலிக்கன்கள் என்று அழைப்பர். ஐதரோகாபன்களுடன் ஒப்பிடக்கூடியவையாகும்.

**உதாரணம்** :- சிலேன் $SiH_4$; இரு சிலேன் $Si_2H_6$ . ஆனால் இச் சேர்வைகள் உறுதியற்றவை. ஒட்சிசன் உள்ள சூழலில் இலகுவில் ஒட்சியேற்றப்பட்டுவிடும்.

$$\underset{(g)}{SiH_4} + \underset{(g)}{2O_2} \rightarrow \underset{(s)}{SiO_2} + 2H_2O$$

ஜேர்மானியத்தின் ஐதரைட்டுகள் சில தயாரிக்கப்பட்டுள்ளன. அவை மிகவும் உறுதி குறைந்தவை. வெள்ளீயம் ஈயம் ஆகியவையும் முறையே $SnH_4$, $PbH_4$ என்னும் ஐதரைட்டுகளை மட்டும் உருவாக்கும். தொகுதி வழியே ஐதரைட்டுகளின் எண்ணிக்கையும் உறுதிப்பாடும் குறைகின்றது.

### ஈயத்தின் சில உப்புக்கள்

ஈய ஏலைட்டுகள் : ஈயத்தின் கரையக்கூடிய உப்பு ஒன்றின் கரைசலுக்குள், ஒரு ஏலைட்டின் கரைசலை சேர்ப்பதால் பெற்றுக்கொள்ளலாம்.

உதாரணம் :-

1) $\underset{(aq)}{Pb(NO_3)_2} + 2HCl \rightarrow PbCl_2 \downarrow + 2HNO_3$
வெள்ளை

2) $Pb(NO_3)_2 + 2KBr \rightarrow PbBr_2 \downarrow + KNO_3$
வெள்ளை

3) $Pb(NO_3)_2 + 2KI \rightarrow PbI_2 \downarrow + 2KNO_3$
பொன் மஞ்சள்

இவ்வீழ்படிவுகள் சுடுநீரில் கரைந்து பின்பு குளிரும்போது அழகிய ஊசியுருப் பளிங்குகளாகத் தோன்றும்.

4. **ஈய சல்பேற்று :** ஈயத்தின் கரையக்கூடிய உப்புக்களுக்கு ஐதான சல்பூரிக்கமிலத்தை அல்லது வேறு சல்பேற்றுக் கரைசலைச் சேர்த்தால் வெள்ளை நிற வீழ்படிவாகக் கிடைக்கும்.

$$Pb(NO_3)_2 + H_2SO_4 \rightarrow PbSO_4 \downarrow + 2HNO$$

**ஈய அசற்றேற்று :**
ஈயவோர் ஒட்சைட்டை அல்லது ஈயக்காபனேற்றை அசற்றிக் கமிலத்தில் கரைத்து கரைசலைப் பளிங்காக்கிப் பெற்றுக்கொள்ளலாம்.

$$PbCO_3 + 2CH_3COOH \rightarrow (CH_3COO)_2Pb + H_2O + CO_2$$

வெள்ளைநிறப் பளிங்குகள் ஆகும்.

**ஈய குளோமேற்று :**
ஈய உப்புக்களின் கரைசல்களோடு பொற்றாசியம் குளோமேற்றுக் கரைசலைச் சேர்ப்பதால் மஞ்சள் நிற வீழ்படிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

$$(CH_3COO)_2Pb + K_2CrO_4 \rightarrow PbCrO_4 \downarrow + 2CH_3COOK$$

குறிப்பு :- தாக்கங்கள் 3, 4, 6 ஈயத்தை இனம் காணும் பரிசோதனைகளாக உபயோகப்படும்.

### ஐந்தாம் தொகுதி மூலகங்கள்

**நைதரசன், பொசுபரசு ஆசனிக்கு அந்திமனி பிசுமத்**

ஐந்தாம் தொகுதி மூலகங்களின் சிலவியல்புகளைக் காட்டும் அட்டவணை தரப்பட்டிருக்கின்றது.

| குறியீடு | Z | இலத்திரன் நிலையமைப்பு | உருகு நிலை $^0C$ | கொதி நிலை $^0C$ | அயனாக்கற் சத்தி e.v | மின் எதிர்மை |
|---|---|---|---|---|---|---|
| N | 7 | $[He]\ 2s^2, 2p^3$ | -210·0 | -195·8 | 14·5 | 3·0 |
| P | 15 | $[He]\ 3s^2, 3p^3$ | 44·1 | 2·80 | 11·0 | 2·1 |
| As | 33 | $[Ar]\ 3d^{10}, 4s^2, 4p^3$ | பதங்க | மாகும் | 10· | 2·0 |
| Sb | 51 | $[Kr]\ 4d^{10}, 5s^2, 5p^3$ | 631 | 1380 | 8·6 | 1·9 |
| Bi | 83 | $[Xe]\ 4f^{14}, 5d^{10}, 6s^2, 6p^3$ | 271 | 1500 | 8 | 1·9 |

இவ்வட்டவணையில் இருந்து சில பௌதிகவியல்புகளின் கோலங்களை அவதானிக்கும் போது இதுவரை படித்த தொகுதிகளில் அவதானித்த அதே பங்குகளை இங்கேயும் காண்கிறோம். தொகுதியின் வழியே அணு ஆரை அதிகரிக்கவும் அதற்கேற்ப அயனாக்கற் சக்தி குறைவதையும் உலோகவியல்பு அதிகரிப்பதையும் காண்கிறோம். தொகுதி இயல்புகளை ஒவ்வொன்றாய் ஆராய்வோம்.

### ஒட்சியேற்ற நிலைகள்

இத்தொகுதி மூலகங்கள் எல்லாம் $ns_2np_3$ என்ற ஈற்றுச் சத்திப்படி அமைப்பை உடையவை. அதாவது 5 இலத்திரன்களை ஈற்றுச் சத்திப்படியில் கொண்டவை. இவை +5 என்ற ஒட்சியேற்ற நிலையை, ஒட்சிசன் சேர்வைகளில் 5 இலத்திரன்களையும் உபயோகித்து ஒருவாக்கிக் கொள்கின்றன. சில வேர்வைகளில் $ns^2$ இலத்திரன்கள் (inert) சடத்துவம் ஆக இருக்கும்போது +3 என்ற ஒட்சியேற்ற நிலையை அடையலாம்.

இத் தொகுதி மூலகங்கள் அட்டகத்தை (எட்டமைப்பை) பூர்த்தி செய்வதற்கு 3 இலத்திரன்களைப் பெற்றுக்கொண்டால் - 3 என்ற ஒட்சியேற்ற நிலையை அடையும்.

**உதாரணம் :-** $(Li^+)_3\ N^{3-}$, $(Ca^{2+})_3$, $(N^{3-})_2$ இவை அயன் சேர்வைகளாகும். இவற்றில் எதிர் அயன்களை இம் மூலகங்கள் உருவாக்குகின்றன.

**பிணைப்பு வகைகள் :**
இவற்றின் அநேகமான சேர்வைகள் பங்கீட்டு வலுச் சேர்வைகளாகும். நைதரசனும் பொசுப்பரசும் மட்டும் மூவலுவளவுள்ள எதிர் அயன்களைத் தரவல்லன. அதுவும், தொழிற்பாடு கூடிய உலோகங்களுடன் மட்டுமே.
உதாரணம் : $Li_3N$, $Ca_3N_2$
அந்திமனியும் பிசுமத்தும் $M^{3+}$ அயன்களை உருவாக்கவல்லது.

உதாரணம் :- $(Sb^{3+})\ SO_4^{\ 2-}$ அந்திமனி சல்பேற்று
$Bi^{3+}\ (F^-)_3$ பிசுமத் புளோரைட்டு
$Bi^{3+}\ (NO_3^-)_3\ 5H_2O$ பிஸ்மத் நைத்திரேற்று

**உலோக அலோகவியல்புகள் :**

தொகுதியின் வழியே இறங்க உலோகவியல்பு அதிகரிக்கும். அதாவது மின்னேர்மை அதிகரிக்கும். நைதரசன் வாயு நிலையில் உள்ள அலோகமாகும், பொசுப்பரசு திண்ம நிலையில் உள்ள அலோகமாகும். ஆசனிக்கும் அந்திமனியும் உலோகப் போலிகளாகும். பிசுமத்து உலோகமாகும்.

**இருக்கை:**
பொசுப்பரசு மட்டும் சுயாதீனமாக காணப்படாத மூலகமாகும். மற்றயவை சுயாதீனமாகவும் காணப்படும். நைதரசன் சேர்வை நிலையில் நைத்திரேற்றுக் களாகவும், பொசுப்பரசு பொசுப்பேற்றுக்களாகவும் மற்றையவை சல்பைட்டுக் களாகவும், ஒட்சைட்டுக்களாகவும் காணப்படலாம்.

**ஐதரைட்டுகள் :**
இவை MH என்ற பொதுச் சூத்திரத்தை உடைய ஐதரைட்டுக்களை உருவாக்குகின்றன. இவை பங்கீட்டுவலுச் சேர்வைகள் ஆகும். அமோனியா $NH_3$ உயர் கொதிநிலையுடைய (associated) இணக்கமுற்ற மூலக்கூறு களுடைய மூலத்திரவமாகும்.இதற்கான காரணம் இம் மூலகத்தின் உயர்ந்த மின் எதிர்மையும், நைதரசனில் உள்ள தனிச்சோடி இலத்திரன்களும் அதன் விளைவாக ஏற்படும் ஐதரசன் பிணைப்பும் ஆகும்.

பொஸ்பீன் $PH_3$, ஆசீன் $AsH_3$, திபைன் $SbH_3$, பிசுமதைன் $BiH_3$ ஆகியவற்றில் இவ்வொழுங்கில் மூலவியல்பு மிகவும் குறைந்து காணப்படும். இவற்றில் தாழ்ந்த மின் எதிர்மையும் அணுக்களின் பெரிய பருமனும் ஐதரசனும் பிணைப்பு உண்டாவதை தவிர்க்கிறது.

இவ்வைதரைட்டுகளின் உறுதிப்பாடும் இவ்வொழுங்கில் குறைகிறது. அவை பிரிகையுறும் வெப்பநிலைகள் இவ்வியல்பை நன்றாக எடுத்துக் காட்டுகின்றன.

**உதாரணம் :** $NH_3$ $PH_3$ $AsH_3$ $SbH_3$ $BiH_3$

1300 $^0C$ 400 $^0C$ 280 $^oC$ மிகவும் உறுதியற்றது.

ஐந்தாம் தொகுதி மூலகங்களின் ஐதரைட்டுகள் வலுவான தாழ்த்தும் கருவிகளாகும். P, As, Sb ஆகியவற்றின் ஐதரைட்டுகள் எரியும் தகவுடையவையாகவும் மிகுந்த நச்சுத்தன்மை உடையவையாகவும் உள்ளன.

அமோனியா $NH_4^+$ உப்புக்களை மிக எளிதில் தரும். ஆனால் பொசுப்பின் HCl, HI ஆகியவற்றுடன் மட்டும் உப்புக்களைத் தரும். ஏனைய ஐதரைட்டுகள் இவ்விதமான உப்புக்களைத் தருபவை அல்ல. அமோனியா Co, Ni, Cu, Zn ஆகியவற்றுடன் ஆள்கூற்று சிக்கல் (Co-ordination Complexes) சேர்வைகளை உருவாக்கும். இது அமோனியாவின் இயல்புகளை எடுத்துக்காட்டும்.

**ஏலைட்டுகள் :**
MX பொதுச் சூத்திரம் உடைய மூஏலைட்டுகளை இத் தொகுதி மூலகங்கள் உருவாக்கும். $NBr_3$, $NI_3$ ஆகிய இரு ஏலைட்டுகளைத் தனியாகப் பிரித்து எடுக்க முடியவில்லை.

ஏலைட்டுகள் பங்கீட்டு வலுச் சேர்வைகள் ஆகும். இவற்றிற்கும் அமோனியாவைப் போன்று நான்முகி உருவ மூலக்கூறுகள் உண்டு. $BiF_3$ அயன் சேர்வையாகும். $SbF_3$ யும் மற்றும் பிசுமத் ஏலைட்டுகளும் ஓரளவு அயன் பிணைப்புத் தன்மையுடையவையாகும்.

$NF_3$ மிகவும் உறுதியானது. ஆனால் $NCl_3$ வெடிக்கும் தகவுடையது. இலகுவில் நீர்ப்பகுப்படையும்.


$$NCl_3 + 3H_2O \rightarrow NH_3 + 3HOCl$$

இதற்கான காரணம் நீர்ப்பகுப்புத் தாக்கங்களின் போது முதலில் மேலதிகப் பிணைப்பு ஏற்படுத்தப்படும். $NF_3$ யில் இரண்டு அணுக்களிலும் d ஒழுக்குகள் கிடையாது. ஆகவே இது அட்டகத்தை விரிவுபடுத்த முடியாது. பொசுபரசு, ஆசனிக்கு, அந்திமனி ஆகியவற்றினை மூஏலைட்டுகள் இலகுவில் நீர்ப்பகுப்பு அடைகின்றன. இதற்குக் காரணம் இவை தமது அட்டகத்தை d உபசக்தி மட்டங்கள் இருப்பதால் விரிவுபடுத்த முடிகிறது.

$$PCl_3 + 2H_2O \rightarrow H_3PO_3 + 3HCl$$

(தொடரும்...)

# பலாத்காரத்திற்கு கடுந்தண்டனை; அனுமதி அளித்தார் ஜனாதிபதி பிரணாப்



(புதுடில்லி)

பாலியல் பலாத்கார வழக்கில் குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை விதிக்க வகை செய்யும் அவசர சட்டத்துக்கு குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி ஒப்புதல் அளித்திருக்கிறார்.

டில்லியில் ஓடும் பேருந்தில் மருத்துவ மாணவி பலாத்காரம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இத்தகைய குற்றங்களுக்கு கடும் தண்டனை விதிக்க நாடு முழுவதும் கோரிக்கை எழுந்தது. இதனால் நீதிபதி வர்மா தலைமையில் மத்திய அரசு ஒரு குழுவை அமைத்தது. அக்குழுவும் தமது பரிந்துரைகளை அரசிடம் அளித்திருந்தது. பாலியல் குற்றங்களுக்கு 20 ஆண்டுகால தண்டனை உள்ளிட்டவற்றை அக்குழு பரிந்துரை செய்திருந்தது. இதில் அரிதினும் அரிதான வழக்குகளில் மரண தண்டனை விதிக்கவும் வகை செய்யும் பிரிவையும் மத்திய அரசு சேர்த்தது. மேலும் பலாத்காரம் என்பதற்கு பதிலாக பெண்களுக்கு எதிரான தாக்குதல் என்றும் மத்திய அரசு திருத்தம் செய்தது. இதற்கு மத்திய அமைச்சரவை கடந்த வெள்ளிக் கிழமையன்று ஒப்புதல் அளித்து குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தது. இருப்பினும் சட்டங்களை இன்னும் கடுமையாக்க வேண்டும் என்று சில மகளிர் அமைப்புகள் போர்க் கொடி தூக்கியிருந்தன. இந் நிலையில் நேற்றுமுன்தினம் குடியரசுத் தலைவர் ஒப்புதல் தெரிவித்து அவசர சட்டத்தைப் பிறப்பித்திருக்கிறார்.





# 500 ரூபாவிற்கு விற்கப்படும் டைனோசர் முட்டை

சுமார் 60 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்ததாக கருதப்படும் அரியவகை விலங்கினமான டைனோசர்கள் தற்போது முற்றிலுமாக அழிந்துவிட்டன. மத்திய பிரதேசம் மாநிலத்தில் உள்ள தார்-மண்ட்லா பகுதியில் ஏராளமான டைனோசர் முட்டைகள் பூமிக்குள் புதையுண்டு கிடக்கின்றன. இங்குள்ள பாட்லா கிராமத்தை சேர்ந்த ஆதிவாசிகளின் துணையுடன் இந்த முட்டைகளைத் தோண்டி எடுக்கும் ஒரு கும்பல், இவற்றை ராஜஸ்தான், மகாராஷ்டிரா, குஜராத் போன்ற மாநிலங்களில் இருந்துவரும் வியாபாரிகளுக்கு ஒவ்வொரு டைனோசர் முட்டையையும் ரூ.500இற்கு விலைபேசி விற்றுவிடுவதாக கூறப்படுகிறது.



சர்வதேச சந்தையில் ஒரு டைனோசர் முட்டை ரூ. 1 கோடி வரை விலைபோகும் என்று கூறுகின்றனர். பாட்லா கிராமத்தில் டைனோசர்கள் வாழ்ந்ததாக கருதப்படும் சுமார் 89 ஹெக்டேர் நிலப்பகுதி, போதிய பாதுகாப்பின்றி இருப்பதால் தான், சமூகவிரோதிகள் சிலர் இந்த வியாபாரத்தில் மூலம் இலாபம் அடைய முயற் சிக்கின்றனர் என சமூக ஆர்வலர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.



அண்ணாவின் 44ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அவரது நினைவிடத்தில் மலர்கள் தூவி அஞ்சலி செலுத்திய தி.மு.க.தலைவர் கருணாநிதி அருகில் தி.மு.க.பொதுச் செயலர் அன்பழகன், பொருளாளர் ஸ்டாலின் மற்றும் தி.மு.க.முக்கிய பிரமுகர்கள்.

# மேற்கு வங்கத்தில் மட்டும் 5 இலட்சம் புற்றுநோயாளர்கள்

உலக புற்றுநோய் தினத்தில் இந்தியாவில் அந்நோயால் பாதிக்கப்பட்டவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் மேற்கு வங்கத்தை சேர்ந்தவர்களாக உள்ளனர்.

மேற்கு வங்கத்தில் மட்டும் 5 இலட்சம் பேர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவத் துறையினர் தெரிவிக்கின்றனர்.

மேற்கு வங்கத்தில் ஆண்டுக்கு 70,000 புற்றுநோய் பாதிப்புக்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. ஆண்டுதோறும் 35,000 பேர் புற்றுநோயால் உயிரிழந்து வருகின்றனர்.

இத்தகவலை நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் புற்றுநோய் ஆராய்ச்சி கழக மருத்துவ இயக்குநர் ஆஷி முகோபாத் யாயா தெரிவித்துள்ளார்.

பொதுவாக ஆண்கள் நுரையீரல் புற்றுநோயாலும், பெண்கள் கர்ப்பப்பைவாய் புற்றுநோயாலும் பாதிக்கப்படுகின்றனர்.

அதிலும் நகர்ப்புறங்களில் வசிக்கும் பெண்களில் பெரும்பாலும் மார்பகப் புற்றுநோயாலேயே பாதிக்கப்படுகின்றனர்.

ஒவ்வொரு 100 பெண்களில் 25 பேர் மார்பகப் புற்றுநோயால பாதிக்கப்படுகின்றனர்.

புகை பிடித்தல் மற்றும் அல்ககோல் உட்கொள்ளுதல் ஆகியவற்றை முற்றிலும் நிறுத்துவதாலும், சுற்றுப்புற மாசுபடு தலை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதாலும் புற்றுநோயை கட்டுப்படுத்தலாம் எனவும் ஆஷி முகோபாத் யாயா தெரிவித்துள்ளார்.

# புல்லட்ரயில் சேவை விரைவில் அறிமுகம்

சாதாரண மக்களுக்குப் பயன்படும் வகையில் இவ்வகை புல்லட் ரயில்கள் விரைவில் இயக்கப்படும் என்று மத்திய ரயில்வே அமைச்சர் பவன்குமார் பன்சால் கூறியுள்ளார்.

நாட்டில் எப்போது புல்லட் சேவை தொடங்கும் என்பது குறித்து இப்போது பதிலளிக்க இயலாது. ஆனால், அதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் தொடங்கிவிட்டன.

சாதாரண மக்களும் பயன்பெற வேண்டும் என்கிற நோக்கில்தான் புல்லட் ரயில் சேவை இயக்கப்படுகிறது.

மணிக்கு 350 கிலோமீற்றர் வேகத்தில் இவ்வகை ரயில்கள் இயங்கும் என்பதால், முதற்கட்டமாக 63 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் மும்பை, அகமதாபாத் இடையே பாதை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்தத் திட்டத்தில் சென்னை, பெங்களூரு, திருவனந்தபுரம், அவுரா, ஹால்தியா, டில்லி, ஆக்ரா, பாட்னா, புனே, மும்பை, அகமதாபாத் ஆகிய பாதைகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

விரைவில் மக்களுக்குப் பயன்படும் வகையில் இத்திட்டத்தை முடிக்க வேண்டும் எனபதே மத்திய அரசின் எண்ணமாக உள்ளது என்று கூறினார் பவன்குமார் பன்சால்.

# முடிவுக்கு வந்தது "விஸ்வரூபம்" வழக்கு

(சென்னை)

விஸ்வரூபம் திரைப்படம் குறித்து தொடரப்பட்ட அனைத்து வழக்குகளும் மீளப் பெறப்பட்டுள்ளதால், இந்த விவகாரம் முடிவுக்கு வந்துள்ளதாக சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி கூறியுள்ளார். அரசு விதித்த தடை சமீபத்தில் விலக்கிக்கொள்ளப்பட்ட நிலையில், தடைக்கு எதிராக கமல் சார்பில் தொடுக்கப்பட்ட வழக்கும் நேற்று மீளப் பெறப்பட்டது. இதனையடுத்து, படம் விரைவில் திரைக்கு வரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

(5ஆம் பக்கத்தொடர்ச்சி...)

**நம் மனங்கள்தான்....**

மிகவும் நன்கறிந்த பின்னணியில் இதற்கான தரவு வெளிப்படுத்துவது, சர்வதேச சமூகம் தனது பொருளாதார அல்லது வேறு சக்திகளைப பயன்படுத்தி இலங்கையின் மீது தண்டனைகளை பலவந்தமாக திணிக்க முயன்றால், பொது மக்கள் அரசாங்கத்தின் பின்னால் அணி திரள்வார்கள் மற்றும் அத்தகைய ஒரு பதிலை மகிந்த ராஜபக்ஷ மிக நன்றாக ஊக்குவிப்பார் என்பதை.

இதற்கு குறுக்கு வழி எதுவுமில்லை. நீதியின் மீதுள்ள பற்று வெற்றி பெறுவதற்கு, இலங்கையர்களின் மனங்கள் தான் மாறவேண்டும். தண்டனைகள் வழங்கப்பட வேண்டும் என்று அவர்கள் விரும்பினால் அது நடக்கும். அது ஒரு தேசிய போராட்டம், இதில் சர்வதேச சமூகத்தை தொடர்புபடுத்த முயற்சிப்பது இதை மேலும் கடினமாக்கும்.

அதேபோல நீதித்துறையின் சுதந்திரத்தை மீட்பதற்காக அதை சர்வதேசமயப்படுத்தும் முயற்சியும் அதை தீர்ப்பதை விட மேலும் சிக்கல்களையே ஏற்படுத்தப் போகிறது.

ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா.மனித உரிமைகள் சபையின் உலகளாவிய மீளாய்வுக் கூட்டத்திற்கு இலங்கை முகம் கொடுக்கவேண்டியிருந்த போதும், அந்தக் கூட்டம் ஆரம்பமாவதற்கு சில நாட்களின் முன்பு பிரதம நீதியரசர் மீதான குற்றப்பிரேரணை பற்றிய அறிவிப்பை வெளியிட்டதன் மூலம் சர்வதேச சமூகத்தினரின் கருத்துக்களைப்பற்றி மகிந்த ராஜபக்ஷ எவ்வளவு ஆர்வமற்றிருக்கிறார் என்பதை மிக நன்றாக காண்பித்தார். குறைந்தது ஒரு சில கணங்களுக்காவது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வது எங்களுக்கு ஆறுதல் அளிக்கலாம். ஆனால் அதன் விளைவாக உண்மையான எந்த மாற்றமும் உருவாகப் போவதில்லை.


**31ஆம் நாள் நினைவஞ்சலி**

மலர்வு 30 . 09 . 1967



உதிர்வு 06 . 01 . 2013

**அமரர் சிவலிங்கம் குகநேசன் (தோழர் குகன்)**

யாழ்.மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும்,
கண்டி - கலகாவை வதிவிடமாகவும்,
ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் உறுப்பினருமாகிய
அமரர் சிவலிங்கம் குகநேசன் (தோழர் குகன்) அவர்களின்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சி
வவுனியா மாவட்டம்.

(C/2434)



**வாழ்க வளமுடன்**

சிறாரின் பெயர் : ....................................
முகவரி : ....................................
பிறந்த ஆண்டு : ....................................
கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்


....................................
பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# அணு உலைப் பிரச்சினைக்கு தீர்வு

# ஈரானுடன் பேச்சு நடத்த தயார்

## அமெரிக்கா அறிவிப்பு



(முனிச்)

அணு உலைப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் ஈரானுடன் பேச்சு நடத்துவதற்கு தயாராக உள்ளதாக அமெரிக்க துணை ஜனாதிபதி அறிவித்துள்ளார். ஈரான் பாதாள அறைகளில் அணு உலை அமைத்து அணு குண்டு தயாரிப்பதில் தீவிரமாக ஈடுபட்டு வருவதாக குற்றம்சாட்டப்படுகிறது. ஆனால் இதை மறுக்கும் ஈரான் மின்சார உற்பத்தி போன்ற ஆக்கபூர்வ பணிகளிலேயே ஈடுபட்டு வருகிறோம் என்கிறது. ஆனால் அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஐரோப்பிய நாடுகள் இதை நம்பத் தயாராக இல்லை. இதனால் ஈரானுக்கு பொருளாதார தடை விதித்துள்ளது.

இதன் விளைவாக அங்கிருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை பல்வேறு நாடுகள் குறைத்து வருகின்றன. மேலும் ஈரானின் அணு உலைகள் மீது தாக்குதல் நடத்துவோம் என இஸ்ரேல் மிரட்டுகிறது. இந்த விவகாரத்தில் உண்மை நிலையை கண்டறிய ஐ.நா.வின் தேசிய அணு சக்தி நிபுணர் குழுவினர் ஈரான் அதிகாரிகளுடன் பேச்சு நடத்துகிறார்கள்.

அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜெர்மனி, சீனா ஆகிய 6 நாடுகளின் சார்பில் ஐரோப்பிய யூனியன் வெளிநாட்டு கொள்கைத்தலைவர் அஷடோன் பேச்சுவார்த்தை நடத்துகிறார். ஆனாலும் இதில் தொடர்ந்து இழுபறி நீடிக்கிறது.

இதன் அடுத்த கட்டப் பேச்சு வருகிற வெள்ளிக்கிழமை நடக்க உள்ளது.இந்நிலையில் அமெரிக்காவுடன் நேரடிப் பேச்சு நடத்த ஈரானுக்கு, அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோ பிடேன் அழைப்பு விடுத்துள்ளார். ஜெர்மனியில் முனிச் நகரில் நடைபெறும் பாதுகாப்பு மாநாட்டில் பேசிய அவர் இது பற்றி கூறியதாவது,

யுரேனியம் எரியூட்டுவதை ஆக்கபூர்வப் பணிக்கு மட்டுமே பயன்படுத்துவதாக ஈரான் கூறுகிறது. அதற்கு தகுந்த உத்தரவாதம் அளிக்க முடியாததால் கடுமையான பொருளாதார தடையை சந்திக்கிறது. மக்கள் பொருளாதார நெருக்கடியின் பிடியில் சிக்குவதையும், உலக அரங்கிலிருந்து விலக்கப்படுவதையும் ஈரான் தலைவர்கள் தடுக்கத் தயாராக இல்லை.

இப்போது,கூட பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வாய்ப்பு இருக்கிறது. ஈரானுடன் அமெரிக்கா நேரடியாக பேச்சு நடத்த தயாராக இருக்கிறது. எனவே இந்த பந்து, ஈரான் அரசாங்கத்தின் பக்கமே இருக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# உள்ளங்கை அளவு உளவு விமானம்; ஆப்கானில் பயன்படுத்தும் பிரிட்டன்



(லண்டன்)

ஆப்கானிஸ்தானில் நடந்து வரும் தலிபான்களுக்கு எதிரான போரில், உள்ளங்கைக்குள் அடங்கிவிடும் உளவு விமானத்தை ஈடுபடுத்த இங்கிலாந்து திட்டமிட்டுள்ளது. 8 அங்குல நீளம் கொண்ட இந்த உளவு விமானத்தின் எடை வெறும் 15 கிராம் தான்.

விமானத்தின் மூக்குப் பகுதியில் உள்ள சக்திவாய்ந்த 3 கமராக்கள், எதிரியின் இலக்கை வெகு துல்லியமாக படம் பிடித்து கட்டுப்பாட்டு அறைக்கு அனுப்பி வைக்கும். ஜி.பி.எஸ். கருவி மற்றும் 'ஜோய் ஸ்டிக்' உதவியுடன் இயங்கும் இந்த உளவு விமானத்துக்கு "பிளாக் ஹார்னட்" என பெயரிடப்பட்டுள்ளது.

இந்த விமானம் எதிரி இலக்கின் மீது பறக்கும் போது யாராலும் கண்டுபிடிக்க முடியாது. ஓசையைக் கூட கேட்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேலில் புதிய அரசு அமைக்க நெதன்யாகுவிற்கு அழைப்பு

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை அடுத்த அரசு அமைக்குமாறு அந்நாட்டின் அதிபர் ஷிமோன் பெரஸ் கேட்டுக் கொண்டுள்ளார். இஸ்ரேலில் கடந்த ஜனவரி 22ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தலைமையிலான இஸ்ரேல் பெடீனு கட்சி, தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது.

இதைத் தொடர்ந்து, புதிய அரசை அமைப்பது குறித்து 12 முக்கிய கட்சிகளுடன் அதிபர் ஷிமோன் பெரஸ் ஆலோசனை நடத்தினார். அப்போது, பிரதமராக நெதன்யாகு மீண்டும் வர வேண்டும் என்று பெரும்பாலான எம்.பி.க்கள் பரிந்துரைத்தனர். இதையடுத்து, மற்ற கட்சிகளுடன் இணைந்து புதிய கூட்டணி அரசை அமைக்குமாறு பிரதமர் நெதண்யாகுவை அதிபர் ஷிமோன பெரஸ் முறைப்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

பிரதமருக்கு புதிய அரசை அமைக்க 6 வார கால அவகாசத்தை அவர் வழங்கியுள்ளார். தேவைப்பட்டால் பிரதமர் மேலும் 14 நாட்கள் அவகாசம் எடுத்துக் கொள்ளலாம். நெதன்யாகு அமைக்க உள்ள கூட்டணி அரசில் இரண்டாவது பெரிய கட்சியாக முன்னாள் தொலைக் காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளர் யாயிர் லாபிட்டின் யேஷ் அடிட் கட்சி இடம்பெறும் என்று தெரிகிறது. இது தவிர, அரசு பெரும்பான்மை பெறுவதற்கு மேலும் ஒரு கட்சியின் ஆதரவு தேவைப்படுகிறது.

புதிய அரசை அமைக்க உள்ள நெதன்யாகு, செய்தியாளர் சந்திப்பில் கூறுகையில், ஈரானை அணு ஆயுதம் தயாரிக்க விடாமல் தடுப்பதே எனது அரசின் முதல் முன்னுரிமையாக இருக்கும். சிரியாவில் அபாயகரமான ஆயுதங்கள் குவிக்கப்பட்டு, எமது குடிமக்களுக்கு அச்சுறுத்தலாக விளங்குவதை



அரசு சமாளிக்கும். அமைதிப் பணிகளுக்கு அரசு உறுதிபூண்டுள்ளது. பாலஸ்தீன அதிபர் மஹமூத் அப்பாஸை அமைதிப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைப்பேன்.

இந்தச் சவால்களை எதிர் கொள்ளவும், அரசுக்கு ஸ்திரத் தன்மை ஏற்படுத்தவும் விரிவான கூட்டணி ஆட்சியை அமைக்க உள்ளேன். இஸ்ரேலைப் பிளவுபடுத்த பல்வேறு சக்திகள் முயற்சிக்கும் வேளையில், நாம் அனைவரும் ஒன்றுசேர வேண்டும் என்று தெரிவித்தார். அவர் மூன்றாவது முறையாக பிரதமர் பதவியை ஏற்க உள்ளது குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்


# மாலியில் தரைமட்டமானது தீவிரவாதிகளின் பயிற்சி மையம்

பிரான்ஸ் வான் படைகள், மாலியின் பாலைவனப் பகுதியில் செயற்பட்ட தீவிரவாதிகளின் பயிற்சி முகாம்களை தாக்குதல்கள் நடத்தி தரைமட்டமாக்கியுள்ளன.

பிரான்ஸ் ஜனாதிபதி பிராங்கோயிஸ் ஹோலண்ட், மாலிக்கு சென்றுள்ள நிலையில், அங்குள்ள பாலைவனப் பகுதியான கிடல் அருகே இயங்கிய தீவிரவாதப் பயிற்சி மையத்தை பிரான்ஸ் நாட்டின் 30 போர் விமானங்கள் தாக்குதல் நடத்தி தரைமட்டமாக்கியுள்ளன.

இது குறித்து பிரான்ஸ் இராணுவ செய்தித்தொடர்பாளர் கூறுகையில், மாலியில் இயங்கிய தீவிரவாத அமைப்பு கடந்த 10 மாதங்களாக சில பகுதிகளை தங்களது கட்டுக்குள் வைத்திருந்தது.

தற்போது அவர்கள் விரட்டி அடிக்கப்பட்டு அப்பகுதி மீட்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.



சிரியா நாட்டிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஈரான் நாட்டின் அணுசக்தி தலைவர் சையத் ஜலிலி தலைநகர் சானாவில் அதிபர் பஷர் அல்ஆசாத்தை சந்தித்து கலந்துரையாடுவதனைக் காணலாம்.

# ஈராக்கில் 160 எதிரிகளை வீழ்த்திய அமெரிக்க வீரர் சுட்டுக்கொலை



ஈராக்கில், நூற்றுக்கும் அதிகமான எதிரிகளை சுட்டு வீழ்த்திய, அமெரிக்கக் கடற்படை முன்னாள் வீரர் கிறிஸ் கெய்ல், சுட்டுக் கொல்லப்பட்டார். ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனுக்கு, மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட பின், அங்கு நடந்த அரசியல் கலவரங்களைக் கட்டுப்படுத்த, அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டு இராணுவத்தினர், பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். இதில் முக்கியமானவர், கடற்படை வீரர் கிறிஸ் கெய்ல். இவர், ஈராக்கில், அமெரிக்க வீரர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதல்களை வெற்றிகரமாக சமாளித்தார். அத்துடன், சிறிய வகை லோஞ்சர் மூலம், 160இற்கும் மேற்பட்ட எதிரிகளை அழித்த பெருமையும் இவருக்கு உண்டு. "அமெரிக்கன் சினைப்பர்" என்ற புத்தகம் ஒன்றையும் கெய்ல் எழுதியுள்ளார். இந்நிலையில், கடந்த சனிக்கிழமை டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள, கிளென் ரோஸ் பகுதியில் அமைந்துள்ள தங்கும் விடுதியில், கெய்ல் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். இவருடன், மற்றொரு நபரும் கொல்லப்பட்டார். இது தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# சுத்தமான காற்று சீனாவில் விற்பனை

சீன தலைநகரில் காற்று. அதிகமாக மாசுபட்டுள்ளதால் தொழிலதிபர் ஒருவர் சுத்தமான காற்று அடைக்கப்பட்ட கான்களை இலவசமாக வழங்கியுள்ளார். உலகிலேயே அதிகமான மக்கள் தொகை கொண்ட சீனாவில் வாகனங்களும், தொழிற்சாலைகளும் பெருகிவிட்டன. இதனால், தலைநகர் பீஜிங்கில், சுற்றுச்சூழல் மாசுபட்டுவிட்டது. தூசுகள் காற்றில் அதிகமாக கலந்துள்ளதால் பகல் நேரத்தில் கூட குறைவான வெளிச்சம் தான் காணப்படுகிறது.

பீஜிங்கில் வசிக்கும் பிரபல தொழிலதிபர் சென் குவாங்பியோ, குறிப்பிடுகையில், நான் தினமும், 20 நிமிடம் நடை பழகி வந்தேன். "வாக்கிங்" செல்லும் போது, அசுத்தக் காற்றின் காரணமாக தொண்டையில் எரிச்சல் ஏற்படுகிறது. காற்றில் போதுமான பிராணவாயு இல்லாததால், தலை சுற்றல் உண்டாகிறது என்றார்.

மக்கள் சுத்தமான காற்றை சுவாசிக்கும் நோக்கத்தோடு, இவர் சுத்தமான காற்றை தயாரித்து கான்களில் அடைத்து விற்று வருகிறார். சுத்தமான காற்று அடைக்கப்பட்ட கான்களை அறிமுகப்படுத்தும் நோக்கில், கடந்த வாரம் அவர் ஏராளமான கான்களை இலவசமாக வழங்கினார். இதுவரை, 80 இலட்சம் கான்கள் விற்றுத் தீர்ந்து விட்டன.



# கோணேஸ்வரர் ஆலயத்தில் சுபீட்சம் வேண்டி பிரார்த்தனை

சுதந்திர தினமான நேற்றைய தினம் நாட்டின் அமைதியையும். சுபீட்சத்தையும் வேண்டி பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திருகோணமலையில் அமைந்துள்ள கோணேஸ்வரர் ஆலயத்தில் சிறப்புப் பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டார்.

சுதந்திர நிகழ்வுகளுக்காக திருகோணமலைக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் கோணேஸ்வரர் ஆலயத்தில் விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்ட பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டார்.

ஆலயத்தின் பிரதம குருவான சண்முகரட்ண குருக்கள் தலைமையில் நடைபெற்ற இவ் விசேட பூசை வழிபாடுகளில் அமைச்சருடன் ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் தயானந்தா, ஈ.பி.டி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் தவராசா, ஈ.பி.டி.பி.யின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். இதனிடையே கோவில் நிர்வாகத்தினர் அதிதிகளுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்த அதேவேளை, ஜனாதிபதியின் இந்து மத விவகாரங்களுக்கான இணைப்பாளர் இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா அமைச்சருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

இச் சிறப்புப் பூசை வழிபாட்டின் போது ஆலயத்தின் பிரதம குருக்கள் அனைவரும் கலந்து கொண்டதுடன், நிறைவில் ஆலயப் பதிவேட்டில் புத்தகத்திலும் அமைச்சர் கையெழுத்திட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



சுழிபுரம் வலி.மேற்கு பிரதேச சபையில் சுதந்திர தினத்தை முன்னிட்டு பிரதேசசபை செயலாளரினால் தேசியக் கொடி ஏற்றப்பட்டது. இந்த நிகழ்வில் கூட்டமைப்பு உறுப்பினர்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை என்பது கூறிப்பிடத்தக்கது

## தனியார் பல்கலைக்கழகங்களுக்கு ஊக்கமளிக்கும் பெறுபேறுகள்

(கொழும்பு)

தனியார் பல்கலைக்கழகங்களை ஊக்குவிக்கும் நோக்கில் உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் காணப்படுவதாக காலணித்துவத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் தெரிவித்துள் ளது. உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் தனியார் பல்கலைக்கழங்களை நிறுவுமாறு வலியுறுத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளளது. தனியார் பல்கலைக்கழகங்களின் இருப்பை உறுதி செய்யும் வகையில் இம்முறை உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் அமைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இம்முறை பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் மாணவ மாணவியர் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றுக் கொண்டுள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளது. எனினும், இவர்களில் 20 ஆயிரம் பேர் மட்டுமே அரச பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப்படுவர் என தெரிவித்துள்ளது.

பரீட்சை பெறுபெறுகளில் திருத்தம் செய்யப்பட்டு ஒரு இலட்சத்து 30 ஆயிரம் பேர் பல்கலைக்கழகங்களுக்கு தகுதி பெற்றுக் கொண்டுள்ள தாக காண்பிக்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளது. அரசாங்கத்தின் இந்தத் திட்டத்திற்கு எதிராக இரண்டு போராட்டங்கள் நடத்தப்படவுள்ளதாக காலணித்துவத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் அறிவித்துள்ளது.

## படகு அகதிகளைக் கட்டுப்படுத்த இலங்கைக்கு நிதி உதவி

(சிட்னி)

சட்டவிரோத படகு அகதிகளைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இலங்கை அரசுக்கு நிதி உதவிகளை வழங்குவதற்கு அவுஸ்ரேலியா முன் வந்துள்ளது.

சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்களின் பயணங்களை தடுத்து நிறுத்துவதற்கு தேவையான நிதி உதவிகள் வழங்கப்படும் என அவுஸ்ரேலிய எதிர்க்கட்சி குடிவரவு பேச்சாளர் ஸ்கொட் மொரிசன் தெரிவித்துள்ளார்.

படகு மூலம் இலங்கையிலிருந்து புகலிடக் கோரிக்கையாளர்கள் புறப்படுவதனை தடுக்க சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

### மதமுரண்பாட்டை...

பாடு ஏற்பட்டுள்ளது. நோர்வே தூதரக அதிகாரிகள் கடும் போக்குடைய தரப்பினரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக முன்னாள் இராஜதந்திரியும் முஸ்லிம் பேரவையின் உறுப்பினருமான எம்.எம்.சுபைர் தெரிவித்துள்ளார். எவ்வாறெனினும் இந்தக் குற்றச்சாட்டுக்களை நோர்வே தூதரகம் திட்டவட்டமாக மறுத்துள்ளது. இலங்கையின் உள் விவகாரங்களில் வெளிநாடுகள் தலையீடு செய்யக் கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் முஸ்லிம் மக்களின் சனத்தொகை உயர்வடைந்துள்ளதாக .சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என அவர் தெரிவித்துள்ளார். அண்மையில் முஸ்லிம்களுக்கு எதிராக பௌத்த பிக்குகள் போராட்டம் நடத்திய சம்பவத்துடன் நோர்வேக்கு தொடர்பு இருப்பதாக குற்றம் சுமத்தியுள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளை இலக்கு வைத்து இவ்வாறு முஸ்லிம் எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பிரதித் தலைவர் யார்? குழப்பத்தில் ஐ.தே.க.

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக் கான பிரதித் தலைவர் நியமனத்துக்கான இழுபறி நிலைமை தொடர்ந்தும் நீடிக்கி றது. இந்த விடயத்தில் தீர்மானம் எடுக்க முடியாத நிலையில் மேற்படி கட்சி குழப்பத்தில் சிக்கித் தவிக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் தெரிவு, மேலும் சில நாட்கள் செல்லும் என கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்த மத்திய செயற்குழுக் கூட்டத்தின் போது முன்னாள் பிரதி தலைவர் சஜித் பிரேமதாஸ குறித்த வெற்றிடத்திற்கு தெரிவு செய்வது தொடர்பில் கருத்துக்கள் வெளியிடப்பட்டன.

### சவால்களுக்கு...

யைச் சுற்றி முட்கம்பிகள் அடிக்கப்பட்டிருந்தன. புத்தபெருமானுக்கும் சுதந்திரம் இல்லாத நிலைமை ஏற்பட்டிருந்தது. அந்த நிலைமைக்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு மக்கள் சுதந்திரமாக வாழக் கூடியவகையில் பயங்கரவாதிகளிடமிருந்து நாடு மீட்கப்பட்டது.

சுதந்திரத்திற்கு மட்டுமல்லாது இறைமை, ஒருமைப்பாட்டிற்காக பல சவால்களுக்கு முகம்கொண்டுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராக வெளிநாடுகளில் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன். அவர்களுக்கு பதிலளிக்க வேண்டுமாயின் நாட்டில் அபிவிருத்தி முன்னெடுக்கப்படல் வேண்டும். நல்லிணக்கம் இருத்தல் வேண்டும்.

1948ஆம் ஆண்டு நாடு சுதந்திரம் அடைந்ததன் பின்னர் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்புரிமை கிடைத்தது. ஐக்கிய நாடுகளில் அங்கம் வகிக்கின்ற எந்தவொரு நாடும் ஏனைய நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடக்கூடாது என்று ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த பிரகடனத்திற்கு நாம் கௌரவமளிக்கின்றோம்.

நாட்டில் இன, மத பேதங்கள் இருக்கமுடியாது. பயங்கரவாதிகள் தலைத்தூக்குவதற்கும் இடமில்லை. நாட்டில் சகலருக்கும் சமவுரிமை வழங்கப்பட்டுள்ளது. இன, மத வேறுபாடுகள் நாட்டில் அழிவையே உருவாக்கும். பேதங்கள் உருவாகினால் அது நாட்டின் அழிவுக்கே இட்டுச்செல்லும். பெற்றுக்கொள்ளப்பட்ட சுதந்திரத்தை பாதுகாப்பதற்கான கடப்பாடு அரசாங்கத்திற்கு மட்டுமல்ல எதிரணிக்கும் இருக்கின்றது என்றார்.

### குறைகிறது....

களத்தினால், மேற்கொள்ளப்பட்ட 2011 ஆம் ஆண்டின் சனத்தொகைக் கணக்கெடுப்பின் இரண்டாவது அறிக்கையிலேயே இது குறித்துக் கூறப்பட்டுள்ளது.

மொத்த சனத்தொகையில் 51.5 வீதமானவர்கள் பெண்கள் என்று தெரியவந்துள்ளது. ஆண்களின் எண்ணிக்கையைப் போன்றே 15 வயதுக்கு உட்பட்டவர்களின் எண்ணிக்கையும் வீழ்ச்சியடைந்துள்ளது.

அதேவேளை 2000 ஆம் ஆண்டில் 9.2 வீதமாக இருந்த 60 வயதுக்கு மேற்பட்டவர் களின் எண்ணிக்கை, 2011 ஆம் ஆண்டில் 12.2 வீதமாக அதிக ரித்துள்ளது.

சனத்தொகையில் 62 வீதமானோர் 15 இற்கும் 59 இற்கும் இடைப்பட்ட வயதினராக உள்ளனர். கடந்த பத்து ஆண்டுகளில் சனத்தொகை வளர்ச்சி 0.7 வீதமாகவே உள்ளது என்பதும் இந்தக் கணக்கெடுப்பின் மூலம் தெரியவந்துள்ளது.

பிறப்புவீதம் குறைவ டைந்தமை, ஆயுள்காலம் அதிகரித்தமை, இளைஞர்களின் புலம்பெயர்வு என்பனவே முதியோரின் எண்ணிக்கை அதிகரிக்கக் காரணம் என்று கருதப்படுகிறது.

### கிணற்றில்...

மீட்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னரும் குறித்த பெண் கிணற்றில் வீழ்ந்து உயிரை மாய்ப்பதற்கு முயற்சி செய்ததாகவும், இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சடலம் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனையை அடுத்து உறவினர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(பா)

### ஒன்பது....

முன்னதாக யாழ்.சிறைச்சாலையில் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வில் யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகர் தேசியக் கொடியை ஏற்றி வைத்ததுடன் அங்கு நடைபெற்ற சுதந்திர தின நிகழ்விலும் கலந்து கொண்டார்.

முற்பகல் 10.30 மணிக்கு யாழ்.சிறைச்சாலையில் இருந்து பொது மன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட ஒன்பது கைதிகளையும் விடுவிக்கும் நிகழ்விலும் கலந்து கொண்டார்.

யாழ்.சிறைச்சாலையில் தற்சமயம் 280 வரையான கைதிகள் உள்ளதாகவும் தெரிவித்த யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகர் யாழ். பண்ணைப் பகுதியில் புதிய சிறைச்சாலைக் கட்டடத் தொகுதி அமைப்பு வேலைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

தற்சமயம் நீதிமன்றத்தினால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளும் மற்றும் விளக்கமறியல் கைதிகளும் இங்கு வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையின் 65 ஆவது சுதந்திரதினத்தை நாடு பூராகவுமுள்ள சிறைச்சாலைகளில் இருந்து ஆயிரத்து 218 சிறைக் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டு விடு தலை செய்யப்பட்டிருப்பதாக சிறைச்சாலைகள் நடவடிக்கைக ளுக்கு பொறுப்பான பணிப்பாளர் காமினி குலதுங்க தெரி வித்துள்ளார். இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்களில் 21 பெண் கைதிக ளும் அடங்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (பா)

### ஏ-9 வீதியில்....

வில் கலந்துவிட்டு யாழ்ப்பாணம் நோக்கி வரும் வழியில் மாலை 6.30 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவர்கள் மாங்குளம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர். (01, 25, 29, 116)

### ரயிலுடன்...

நாட்களில் வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற ரயிலில் மோதுண்டு இருவர் பலியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### துப்பாக்கியுடன்...

சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயர்தரத்தில் பயில்வதற்கு தயாராகும் அவரை கைது செய்கின்ற போது அவரிடமிருந்து 20 இற்கும் மேற்பட்ட ஆணுறைகளை கைப்பற்றியுள்ளதாகவும் அவர் விபசாரத்தில் ஈடுபடுபவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

### திடீரென...

காரணமாக விவசாயிகள் பலரும் சிரமங்களை எதிர்கொண்டதை அவதானிக்க முடிந்ததுடன், இம் மழைக்கால நிலை தொடருமாயின் அறுவடையில் பாதிப்பை ஏற்படுத்துமென அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

# இந்திய வீடமைப்புத் திட்டத்தில் பாரபட்சம் காட்டப்படமாட்டாது

## சித்தார்த்தனிடம் இந்திய அதிகாரிகள் உறுதி

வவுனியா மாவட்டத்தில் இந்திய வீடமைப்புத் திட்ட ஒதுக்கீட்டில் தமிழ் மக்களுக்கு பாரபட்சம காட்டப்படுவதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடரபாக புளொட் தலைவர் திரு.தர்மலிங்கம் சித்தார்த்தன் நேற்றைய தினம் இந்திய தூதரக உயரதிகாரிகளை இந்திய தூதரகத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இதன்போது கருத்துரைத்த இந்திய தூதரக அதிகாரிகள், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் இந்திய வீடமைப்புத் திட்டத்தின்கீழ் வீடுகள் கிடைக்கும். இதனை நாம உறுதிப்படுத்துவோம். வீடமைப்புத் திட்ட ஒதுக்கீடு தொடர்பில் எந்தவொரு இனத்திற்கும் பாரபட்சம் காட்டப்படமாட்டாது. இந்த விவகாரத்தினால் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் முரண்பாடு ஏற்பட்டுவிடக்கூடாது எனத் தெரிவித்துள்ளனர்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மேற்படி வீடமைப்புக்கான தெரிவு குறித்து யார் திட்டங்களை முன்வைத்தாலும் நாம் சுயாதீனமாக ஆராய்ந்து பார்த்து தகுதியுடையவர்களுக்கே வீடமைப்புக்கான கொடுப்பனவுகளை வழங்குகின்றோம். ஒரு அரசியல் வாதிக்கோ அல்லது ஒரு கட்சிக்கோ நன்மைபயக்கும் வகையில் வீடமைப்புக்கான தெரிவுகள் இடம்பெறமாட்டாது. யுத்தத்தின்போது முஸ்லிம் மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேபோல் வெலிஓயா பகுதியில் சிங்கள மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார். இவர்களுக்கும் உரியவகையில் வீடமைப்புத் திட்டத்தில் இடமளிக்கப்படும். வடக்கைப் பொறுத்தமட்டில் 90 வீதமான வீடுகள் தமிழ் மக்களுக்கே வழங்கப்படும். ஏனெனில் யுத்தத்தில் பெருமளவு பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்களேயாவர் எனக் கூறியுள்ளார். தொடர்ந்து கருத்துத் தெரிவித்த புளொட் தலைவர் த.சித்தார்த்தன், யுத்த காலத்தின்போதும் முஸ்லிம் மக்கள் யாழ். குடாநாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டபோதும் வன்னியில் தமிழ், முஸ்லிம் உறவு சீர்குலையாது பாதுகாக்கப்பட்டது. தற்போதைய நிலையிலும், இத்தகைய உறவைப் பாதுகாப்பதற்கு அனைவரும் நடவடிக்கை எடுக்கவேண்டும். சுயநல அரசியலுக்காக மக்களை முரண்பட வைப்பதற்கு அரசியல்வாதிகள் முனைவது தவறானதாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

## கடலில் தத்தளித்தவர்கள் மிரிஹான தடுப்பு முகாமுக்கு

(யாழ்ப்பாணம்)

அம்பாறை, ஒலுவில் துறைமுக கடற்படை வளாகத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள பங்களாதேஷ் மற்றும் மியன்மார் பிரஜைகளை கொழும்பு மிரிஹான தடுப்பு முகாமுக்கு அனுப்புமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த இவர்கள் இலங்கை கடற்படையினரால் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காப்பாற்றப்பட்டனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலை அலுவலர்களினூடாக கொழும்பு மிரிஹான தடுப்பு முகாமில் 08 நாட்களுக்குள் அனுப்பிவைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதனையடுத்து, இவர்களை அழைத்துச் செல்வதற்காக ஒலுவில் துறைமுக கடற்படை வளாகத்துக்கு மட்டக்களப்பு சிறைச்சாலை அதிகாரிகள் வாகனங்களுடன் நேற்று கடற்படையினரால் காப்பாற்றப்பட்ட 138 பேரில் 56 மியன்மார் பிரஜைகளும் அடங்குகின்றனர். ஏனையோர் பங்களாதேஷ பிரஜைகளாவர்.

## மின்னல் தாக்கி ஒருவர் பலி

மின்னல் தாக்கத்திற்கு இலக்காகி ஓட்டமாவடி, மீராவோடையைச் சேர்ந்த விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார். வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மீயான்குளப் பகுதியில் நேற்று அதிகாலை 04 மணியளவில் மின்னல் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

ஓட்டமாவடி, மீராவோடை - ஹாஜியார் வீதியைச் சேர்ந்த எம்.எம்.சீனிமுகம்மது என்ற விவசாயியே இவ்வாறு மின்னலின் தாக்கத்திற்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். ஓட்டமாவடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கிளை முகாமையாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற இவர் வாகரை – மீயான்குளப் பகுதியில் வேளான்மைச் செய்கையில் ஈடுபட்டு வந்துள்ளார். இவரது சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டு விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் கைளிக்கப்பட்டது.

## "குயின் எலிசெபத்" கொழும்பில்

உலகின் மிகப் பெரிய பயணிகள் கப்பல்களில் ஒன்றான குயின எலிசபெத் – 2 என்ற கப்பல் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. நேற்று காலை இலங்கை வந்த இந்தக் கப்பலில் சுமார் 3 ஆயிரத்து 600 பயணிகள் இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மிகப் பெரிய பயணிகள் கப்பல் ஒன்று இவ்வாறு இலங்கை வருவது இதுவே முதல்தடவை என்பது குறிப்பிடத்தக்கது. இதனிடையே, குயின் எலிசபெத் - 2 என்ற இந்தக் கப்பல் இன்று மாலை மீண்டும் இலங்கையிலிருந்து தனது பயணத்தை ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## கள்ளநோட்டு தயாரித்த பல்கலைக்கழக மாணவன் கைது

1000 ரூபா போலி நாணயத் தாள்களை அச்சடித்த பல்கலைகழகத்தின் இறுதியாண்டு மாணவன், அவரது சகோதரனான கடற்படையினர் மற்றும் இன்னும் இருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வேயாங்கொடை பொலிஸாரினாலேயே இந்த நான்கு பேரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். மின் பொறியியலாளரான எலுவாபிட்டிய இளைஞர் ஒருவர் யக்கலையிலுள்ள தனது நண்பருடன் இணைந்து முதன்முதலாக போலி நாணயத் தாள்களை அச்சடித்துள்ளார். அசசடிக்கப்பட்ட போலி நாணயத் தாள்களில் தற்போதைக்கு 60 அல்லது 75 தாள்கள் வரையிலும் மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவருகின்றது. புதிதாக அச்சடிக்கப்பட்ட போலி நாணயத்தாள்களை வேயாங்கொடையிலுள்ள ஹோட்டலில் மாற்றுவதற்கு சென்ற வேளையிலேயே பொலிஸார் குறித்த சந்தேகநபர்களை கைது செய்துள்ளனர்.

# நல்லிணக்கத்துக்கு கதவடைப்பு: அரசைச் சாடுகிறார் மனோ

இந்த அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகள் கூட இன்னும் அமுல செய்யப்படவில்லை. நல்லிணக்கத்திற்கான எல்லா கதவுகளும் அடைத்து வைக்கப்பட்டுள்ளன. இதுதான் இன்றைய சுதந்திர நாட்டின் யதார்த்தம். இந்நிலையில் நல்லிணக்கம் எங்கிருந்து வரும்? என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கேள்வி எழுப்பியுள்ளார். அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கம் தொடர்பாக கட்சியின் கண்டி மாவட்ட செயற்குழு உறுப்பினர்களுக்காக செயலமர்வு முன்னணியின் மாவட்ட செயலாளர் வேலுகுமார தலைமையில் இன்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய மனோகணேசன் மேலும் கூறியதாவது,

சுதந்திர தினத்தில் நாம் நமது நாட்டின் ஐக்கியம் தொடர்பாகவும், இனங்கள் மத்தியில் நிலவவேண்டிய சமத்துவம் தொடர்பாகவும், நமது ஜனநாயக நெறிமுறைகள் தொடர்பாகவும் திடசங்கற்பம் பூணுகிறோம். ஆண்டாண்டு காலமாக நாம் பாடசாலையில் படித்து நமது தாய்மொழியில் பாடி வந்த ஸ்ரீலங்கா தாயே என்ற நமது தமிழ்மொழியிலான தேசிய கீதத்தைகூட சுதந்திரமாக பாட யோசிக்கும் நிலைமை இன்று இந்நாட்டில் தமிழ் பேசும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. அதை தடை செய்ய விரும்புவோர் இன்று இந்த அரசாங்கத்துக்குள் இருக்கின்றார்கள்.

சொந்த உழைப்பு மற்றும் முயற்சியினால் கூட தமது வர்த்தக, தொழில் நிறுவனங்களை சுதந்திரமாகக் கொண்டு நடத்த முடியாத நிலைமை இன்று இந்நாட்டில் தமிழ், முஸ்லிம் தொழில அதிபர்களுக்கு ஏற்பட்டுள்ளது. சிறுபான்மையினரின் வர்த்தக முயற்சிகளை கைப்பற்றி அழிக்க நினைக்கும் இனவாதிகளை தட்டிகொடுத்து வளர்க்க நினைப போர் இன்று இந்த அரசாங்கத்துக்குள் இருக்கின்றார்கள்.

இனப்பிரச்சினையை தீர்க்கிறோம் என்று சொல்லி இந்த அரசாங்கமே கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவியது. இந்த ஆணைக்குழு நாடு முழுக்க சென்று சாட்சியங்களை பதிவு செய்து பல்வேறு சிபாரிசுகளை வெளியிட்டது. இந்த சாட்சியங்களை அமுல் செய்கிறோம் என்று, இந்த அரசாங்கம் ஐ.நா. மனித உரிமை ஆணைக் குழுவுக்கு உறுதியளித்தது. ஆனால் இந்த நல்லிணக்க சிபாரிசுகளில், ஏ9 வீதியை திறக்க வேண்டும் என்ற ஒரேயொரு சிபாரிசு மாத்திரமே இன்றுவரையில் முழுமையாக அமுலாகியுள்ளது. ஏனைய எந்த ஒரு நல்லிணக்க சிபாரிசும் அமுல் செய்யப்படக்கூடாது என்று கலகம் செய்வோர் இன்று இந்த அரசாங்கத்துக்குள் இருக்கின்றார்கள். இந்த அரசாங்கத்துக்கு உள்ளே இருக்கும் இவர்கள்தான் இன நல்லிணக்கத்துக்கான எல்லா கதவுகளையும் அடைத்து வைத்துள்ளார்கள். இது எதிர்க்கட்சிகளின் பிரச்சினை அல்ல. இது ஆளும் அரசாங்கக் கட்சியின் ஒட்டுமொத்த பிரச்சினை என்பது எந்த ஒரு முட்டாளுக்கும்கூட விளங்கும். எனவே இந்த நல்லிணக்கத்துக்கு எதிரான இனவாதிகளை வைத்துகொண்டு எப்படி இந்த நாட்டிலே இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்? இதுதான் இன்றைய சுதந்திர தினத்திலே நாம் எழுப்பும் கேள்வியாகும்.


## இரண்டாம் ஆண்டு நினைவில்...



### தோழர் சதீஸ்

### (இரட்ணசிங்கம் சதீஸ்)

நீங்காத நினைவுகளுடன்
நாம் இருக்கின்றோம் இதுவரையில்...
தாங்காத இந்தத் துயரங்கள்
தினமும் எம்மை வாட்டுகின்றது.
தோழர் சதீஸ் நீ பிரிந்து போனாலும்
உன் சுறுசுறுப்பான ஏற்பாடுகள்
இன்னும் எமக்குள் உலாவுகின்றன...
என்றென்றும் உன் ஞாபகமாய்
நாமிருப்போம் இத் தரணியிலேயே...

தோழர்கள்
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி
(ஈ.பி.டி.பி)

(இ)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 பெப்ரவரி 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.